முரசொலி

அண்ணா மலர்















விலை 1/ ரூ



மறைந்த, மாமேதை
தமிழக முதலமைச்சர்

அறிஞர் அண்ணா அவர்களின் 61வது பிறந்ததின விழாவில் எங்கள் மனமுவந்த நல் வாழ்த்துகள்

சங்கு மார்க்

● கைத்தறி லுங்கிகள் ● கைக்குட்டைகள்
● புடவைகள் ● சோளிகள் ● வேஷ்டிகள்

முகம்மது அபூபக்கர் & கோ
95 தம்பு செட்டித் தெரு, மதராஸ்-1.
கிளைகள்: கல்கத்தா ● பம்பாய் ● மதுரை ● கொல்லம்.

Criterion-MA 2064

அண்ணன் வாய்மலர் திறந்தால்...!

"என்னுடைய பிறந்த நாள் விழாவைத் தாயக மெங்கணும் கொண்டாடுகின்ற தம்பிமார்களே! எழிலார் தோரணங்களும் ஏற்றமிகு இருவண்ணக் கொடிகளும் முகிலைத் தொடுமளவுக்குக் கட்டிக் களிப் படையும் என் அன்பு இளவல்களே! தொகை தொகையாய்க் கூடிநின்று வாழ்த்துரைக்கும் பாச முள்ள சகோதரர்களே! என் பிறந்த நாள் விழா வைத் தொழிலாளர் நாளென்றும், தமிழ்ப் பாது காப்பு நாளென்றும், இந்தி எதிர்ப்பு நாளென்றும் நகராட்சி தினம்—மகளிர் தினம்—மாணவர் தினம்—என்றும் வகுத்துக் கொண்டு இந்தக் கிழமையையே உணர்ச்சி கொள் கிழமையாக மாற்றியமைத்திருக் கிறீர்கள்.

"ஆனாலும் என் செல்லத் தம்பிகளே! இத்தனை பூரிப்பும் புளகாங்கிதமும், நீங்கள் என் பிறந்த நாள் விழாவைப் பட்டினம் முதல் பட்டிதொட்டிகள் வரையில் கொண்டாடுகிறீர்கள் என்பதால் ஏற்பட்ட தல்ல! இந்த நாளில் எனக்கேற்படும் இன்பமெல் லாம் சமுதாய மறுமலர்ச்சி காணவும், பொருளா தாரத் துறையில் சமத்துவம் செழிக்கச் செய்யவும் அரசியலில் உண்மையான ஜனநாயகம் செயல்பட வும் பணியாற்றி வருகின்ற இந்த இயக்கம், மக்கள் நெஞ்சத்தில் அழியாத இடம்பெற்று நாள்தோறும் நாள்தொறும் தழைத்துப் பூத்துக் குலுங்கும் தன்மை பெற்று வருகிறதே என்பதை நினைத்து மகிழ்வதால் ஏற்படுவதேயாகும் என்பதை அறிவீர்கள். என் தம்பியிடமிருந்து ''அண்ணா வாழ்க'' என்ற ஒலியை விட ''அண்ணா!—இன்று ஒரு புதிய கிளை'' என்ற செய்தியை நான் எத்துணை இன்ப உணர்வுடன் சுவைக்கிறேன் தெரியுமா?

'நாம் ஜனநாயகத்தை மலரச் செய்யக் கூடிய வர்கள்—இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடக் கூடிய தியாக மறவர்கள்—உண்மைச் சமதர்மவாதி கள்—அழுத்தமான கொள்கைகளைக் கொண்டவர்கள் மட்டுமல்ல—அப்பழுக்கற்ற நிர்வாகத் திறமைகொண் டவர்கள் என்ற சீர்த்தியையும் கழகம் பெறுகிற போது' பிறந்த நாள் விழா மகிழ்ச்சி எனக்கு ஆயிரம் மடங்காகப் பெருகும் என்பதை அனைவரும் உணர் வீர்கள்.

என் பிறந்தநாள் செய்தியாக இதைத் தவிர வேறு எதுவும் கூறுவதற்கில்லை.

தன்னுடைய பிறந்த நாள் விழாக் கொண் டாடுகின்ற நேரத்தில் அண்ணா இன்றிருந்தால் என்ன எண்ணிக் கொண்டிருப்பார் என்று சிந்தித்தேன். அவர் எண்ணுவதையே மேலே தீட்டிக் காட்டியுள் ளேன். ஆமாம்; இப்படித்தான் அவர் எண்ணுவார், எழுதுவார் என்று நீங்கள் கூறுவது என் காதில் விழுகிறது.

கழகம் வளர்வது கண்டு மகிழ்ச்சிக் கடலில் திளைப்பவர் அவர்.



தமிழக முதல்வர்

மு. கருணாநிதி

எனக்குப் பிடித்த பண்பு வேந்தர்

பிரதமர் இந்திராகாந்தி

இந்திய நாட்டின் சிறப்புமிக்க மனிதரான திரு அண்ணாதுரை அவர்களின் மறைவால் நாம் பெரிதும் துக்கமடைந்துள்ளோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் முக்கியமாகத் தமிழ்நாட்டின் எல்லைகளுக்குள் மதிக்கப்படுபவராக இருந்தார்; ஆனால், இக்குறுகிய காலத்தில் நாடு முழுவதிலுமுள்ள மக்களின் மதிப்பையும் அவர் ஈட்டிவிட்டார். இது அவரது சீரிய சிறப்பியல்புகளுக்குப் பெருமையளிப்பது மட்டுமின்றி இந்த நாட்டின் ஒரு பகுதியிலுள்ள சிறந்த தலைவர்கள் பிற பகுதி மக்களின் நன்மதிப்பையும் பெற்றுத் திகழும் வண்ணம் நமது நாட்டின் மக்களாட்சி — அமைந்துள்ளதற்கும் பெருமை பயப்பதாக உள்ளது.

அவர் புகழ் ஏணியின் உச்சியில் இருக்கும் போது — அவர் தமிழ் நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் இன்னும் பெரும் பணி ஆற்றவிருக்கும் வேளையில் —இறப்பு அவரை நம்மிடமிருந்து பிரித்து விட்டது. உண்மையில் அவர் ஒரு சிறந்த மனிதர்; அவரது நல்ல தன்மைகள், தமிழ்நாட்டு மக்களின் இதயங்களைத் தொட்டன. அவரைப் பல முறை சந்தித்தேன்; சென்னையிலும் டில்லியிலும் இறுதியாக நியூயார்க்கிலும் அவரைச் சந்தித்துள்ளேன். ஒவ்வொரு முறையும் அவரது ஆட்சித் திறத்தையும் அறிவு நுட்பத்தையும் எப்பொருளையும் பரந்த நோக்கத்தோடு அணுகும் அவரின் ஆற்றலையும் கண்டு வியந்தேன் நான். பொதுத் தேர்தல்களுக்குப் பின்னர், மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையேயான தொடர்புகள் எவ்வாறு இருக்குமென்பதைப் பற்றிப்பலவாறு தவறான கருத்துக்கள் வெளியிடப் பட்டன. இந்த முரண்பாட்டைத் தாங்கும் அளவிற்கு இந்திய அரசியலமைப்புத் தக்கவாறில்லை என்று பலர் வெளிப்படையாகவே கூறினர்; உண்மையில் மக்களும் மக்களால் மதிக்கப்பட்ட தலைவர்களுமே அரசியலமைப்பை இயக்குகின்றனர். மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே இணக்கமான நல்லுறவு உருவாவதற்குத் திரு அண்ணாதுரை குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளார்.

நாங்கள் சந்தித்த போதெல்லாம் அவர் என்னிடம் நட்புடனும் உள்ளன்புடனும் இசைவுடனும் நடந்து கொண்டார். நாங்கள் உடன்பட்டு ஒப்புக் கொள்ள முடியாத பல விவகாரங்கள் இருந்தன. ஆனால், சிக்கல்களைக் காரண காரியத்துடனும் பொறுமையாகவும் அவற்றைத் தீர்க்க வேண்டுமென்னும் உண்மையான விருப்புடனும் மக்களின் நல்லையே உறுதுணையாகவும் கொண்டு அவர் அணுகுவதை நான் கண்டிருக்கிறேன்.

இத்தகைய தன்மைதான் மிகவும் முக்கியமானதாகுமென நான் கருதுகிறேன்; ஒரே கருத்து இருக்கவேண்டுமென்பதில்லை; வேறுபாடுகளை அமைதியாகவும் வெறுப்பு உணர்வு தலை தூக்கிடாமலும் தீர்க்க முனைய வேண்டுமென்னும் விருப்பமே வேண்டுமென்பது என் கருத்து.

திரு அண்ணாதுரையின் பல சிறப்பியல்புகள் பற்றிப் பலர் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், ஏழை எளிய மக்களின் நலனிற்கும் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் மேம்பாட்டிற்கும் அவர் ஆற்ற மேற்கொண்ட பணியும் அவர்களின் துயர் துடைக்கப்பட வேண்டுமென்பதில் அவருக்கிருந்த கவலையுமே என்னைப் பெரிதும் கவர்ந்தன; இத்தகைய தன்மையைக் காண்பது அரிதாகும்.

அவரது இழப்பால் வருந்தும் தமிழக மக்களின் துயரத்தில் நானும் பங்கு கொள்கிறேன்; அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் இங்குள்ள எல்லா மக்களுக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

PRIME MINISTER

No. 134-PMO/69

New Delhi,
February 20, 1969.

அன்புள்ள திரு. மாறன்,

உங்கள் கடிதத்துக்கு நன்றி. திரு அண்ணாதுரையின் மறைவு நாட்டுக்கே ஒரு இழப்பாகும். அவர் எங்களுடன் நசப்பான்மை கொண்டு, ஒத்துழைப்பு அளித்துவந்தார். சாமானிய மக்களின் நலனில் அவர் காட்டிய முழு ஈடுபாட்டை — அவரது தீர்க்க தரிசனத்தை — நாம் இழந்திருக்கிறோம்.

சென்னையில் ஷெரீப் கூட்டிய இரங்கற் கூட்டத்தில் நான் பேசிய பேச்சின்பிரதியை அனுப்பியிருக்கிறேன். அதன் பகுதிகளை தங்கள் ஏட்டில் தாங்கள் பிரசுரிக்கவிரும்புவீர்கள் என எண்ணுகிறேன்.

நல் வாழ்த்துக்களுடன்
தங்கள் உண்மயுள்ள,

(இந்திரா காந்தி)

(முதற் பக்கத் தொடர்ச்சி)

கண்ணியம் தவறினான் ஒரு தம்பி எனக் கேள்விப்பட்டால் போதும் துடிதுடிப்பவர் அவர்.

கட்டுப்பாட்டைக் குலைக்க ஒரு தம்பி முயன்றான் என உணர்ந்தால் போதும் அவர் மனம் எரிமலையாகிவிடும்

கடமையைச் செய்திடத் தயங்கினான் ஒரு தம்பி என்று அறிந்தால் போதும்; அவர் குமுறும் கடலாகிவிடுவார்; ஊழலின் தலைவாசலைத் தூர நின்று எட்டிப் பார்த்தான் ஒரு தம்பி எனக் கேள்வியுற்றால் போதும் அண்ணன் அடியற்ற நெடுமரமாவார்!

நாம் ஏற்றிய கொடிகள் கண்டு அவர் மகிழ்வதைவிட நாம் இயற்றும் சிறு தவறுகள் கண்டு அதிகமான மனக் குமுறல் கொள்பவர் அண்ணா என்பதை அவரது உள்ளம் உணர்ந்திருந்தவர்கள் புரிந்து கொள்வர்.

அந்தத் தூய தலைவனின் உள்ளம் உணர்ந்து முன்பு நடந்தோம்.

அவர் இல்லாத வேளையிலும் அவ்வழி நடப்பதுதான் நம் கடமை அண்ணன் வழியே உலகில் நல்வழி என எடுத்தோதும் இந்த விழா நாளில் நாம் எடுத்துக் கொள்ளும் குறுளுரையாக இது அமையட்டும்.

என்றும் உடன்பிறப்பு

கடந்த பொதுத் தேர்தல்கள் முடிந்தவுடன் அண்ணா தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பதவி ஏற்றார். ''அண்ணா''வுடன் — மறைந்த முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை இவ்வாறுதான் பாசத்துடன் அழைக்கப்பட்டார் —எனக்கு அப்போதுதான் நேரடித் தொடர்பும், நெருங்கிய பழக்கமும் ஏற்பட்டது. மக்களிடையே அவர் எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதையும் மக்கள் தலைவராகவும் இந்திய நாட்டின் தலைவராகவும் அவர் எவ்வாறு உயர்ந்து மேலோங்கி வந்தார் என்பதையும் என்னால் அறிய முடிந்தது.

திரு. அண்ணாதுரை இனிய சிறப்பியல்புகளைக் கொண்டிருந்தார்; அவருடன் பழகுபவர்களை ஈர்த்த பண்புகள் அவை. எதையும் அவசரப்பட்டு செய்ய மாட்டார்; ஆனால் எந்தப் பிரச்னையையும் அமைதியோடு—நன்கு ஆலோசனை செய்து — பிறகே ஒரு முடிவிற்கு வருவார். அவர் ஆட்சி செய்த முறையிலிருந்து ஒவ்வொரு முக்கியப் பிரச்னையையும், முதிர்ந்த ஆய்விற்குப் பின்னரே செயல்படுத்தினார் என்பது தெரிய வந்தது. 'அண்ணா'வின் நேர்மையும் அமைதியும் தெளிந்தறியும் ஆற்றலும் தலைசிறந்த தலைவராக அவரை உயர்த்தியது. ஏழைகள்பால் அவருக்குள்ள இரக்கமும் அவர்களின் நலம் நாடும் மனப்பாங்கும், அவர் கொள்கைகளை வகுப்பதில் அடித்தளமாக அமைந்திருந்தன. பிறருடைய கருத்தை அறியும் ஆவல்தான் அவரை உண்மையான ஜனநாயகவாதியாக்கியது. அண்ணாதுரை மறைவெய்தியதும் வெளியிலிருந்தும், உள் நாட்டிலிருந்தும் அவர்பால் இயல்பாக வந்து குவிந்த அன்பும் பாராட்டும் நிறைந்த இரங்கற் செய்திகளும்— சென்னை மாநகரில் அவரது உடலுக்கு மரியாதை செலுத்தக்கூடிய துக்கம் தோய்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டமும்— அவர் உயர்ந்த நிலையினராலும் ஏழை, எளியவர்களாலும் எவ்வாறு அன்பு செலுத்தப்பட்டார்— எத்தகைய மதிப்பிற்குரியவராக இருந்தார் என்பதற்குச் சான்றாக அமைந்தன.

திரு. அண்ணாதுரை ஓர் உன்னதமான மனிதர்; திறன்மிக்க தலைவர்; மக்களிடையே புகழ்பெற்ற தலைவர். அவரது இனிய பழக்கத்தாலும் அன்பான குணத்தாலும் பரிவான செயலாலும் தமிழ்நாட்டு மக்களிடையே அவர் தனக்கென ஓர் உயரிய இடத்தை உருவாக்கிக் கொண்டார்; எல்லாப் பிரிவு மக்களின் மதிப்பிற்கும் உள்ளானார். நாடாளுமன்ற மரபை நன்கறிந்து சொற்போரிலும் திறனும், பொதுக் கூட்டத்தில் சொற்பெருக்காற்றும் ஆற்றலும் சொல்வன்மையும் அவருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தன. செருக்கற்ற அவரது நடவடிக்கையும் சொந்த வாழ்வில் கடைப்பிடிக்கும் எளிமையும் யாவரும் அவரிடம் அன்புகாட்டச் செய்தது. சொந்த முறையில் அவர் என்னிடம் கண்ணியமாகவும் அன்புடனும் நடந்து கொண்டார். எங்களிடையே உடன் பிறந்தார் உறவே நிலவி வந்தது.

ஆளுநர் உஜ்ஜல்சிங்

திரு. அண்ணாதுரை, சேவை மனப்பான்மையுடன் முதலமைச்சர் பதவியை ஏற்றுப் பொறுப்புடன் ஆட்சி நடத்தினார். சிறந்த ஆட்சியாளர் என்ற வகையில் உயரிய நிலையை அடைந்து வந்தார். முக்கியமான சிக்கல்களில் அவரது கருத்துரையும் கேட்கப்பட்டு வந்தது. அவரது தலைமையினாலும் வழிகாட்டும் திறத்தாலும் மேலும் பல சாதனைகள் நடைபெறுமென்று மக்கள் எதிர்பார்க்கும் வேளையில் அவர் இயற்கை எய்தியது துர்அதிஷ்டவசமானதாகும். அவர் நாட்டுக்குப் பணி செய்வதையே இறை வழிபாடாகக் கொண்டார். யாவருக்கும் நல்லதோர் வழிகாட்டும் கோட்பாடாக அமைந்துள்ள அவரது இதயம் நிறைந்த வார்த்தைகள், ''கடமை – கண்ணியம்— கட்டுப்பாடு'' ஆகும். மறைந்த மாமனிதருக்கு அஞ்சலி செலுத்துகையில், அவர் ஒற்றுமைக்கும் சகோதரத்துவத்திற்கும் வாழ்ந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது மக்களின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்குக்கும், தியாக உணர்வுடன் நாம் யாவரும் பணிபுரிவோமாக.

GOVERNOR OF MADRAS

RAJ BHAVAN

Madras-22
11th August 1969

அன்புள்ள திரு. முரசொலி மாறன்,

தங்களுடைய கடிதம் எனக்குக் கிடைத்தது, தாங்கள் அதில் தெரிவித்திருந்த விருப்பத்தின்படி மறைந்த முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களைப் பற்றி ஒரு கட்டுரையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

Ujjal Singh

(உஜ்ஜல்சிங்)



CHIEF MINISTER
WEST BENGAL

Calcutta,
August 23, 1969.

அண்ணாவின் காவியம் தொடரட்டும்!

திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 61–வது பிறந்தநாள் விழாவின் போது, 1969, செப்டம்பர், 15'ம் நாள் நினைவு மலர் ஒன்றினை 'முரசொலி' வெளியிடுகிறது.

"என்னால் இயன்ற நற்பணிகளை நாட்டுக்கு ஆற்றுவேன்; எனக்குப் பின் வருபவர்களும் அவர்களால் முடிந்த சீரிய பணிகளைச் செய்வார்கள்"

—என்று ஒரு முறை திரு. அண்ணாதுரை கூறினார்.

வாழ்க்கை என்பது தொடர் காவியமாகும்; இன்று நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை உருவாக்க நமக்கு முன்பு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த மக்கள் அரிதின் முயன்று உழைத்துள்ளனர்; எவ்வாறிருக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அத்தகைய நிலையை ஏற்படுத்தப் பல தலைமுறையினர் உண்மையுடனும் நேர்மையுடனும் கடுமையாகவும் தொடர் பணியாற்ற வேண்டும்.

திரு. அண்ணாதுரை அவர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தும் இந்நாட்டு மக்களுடன் நானும் கலந்து கொள்கிறேன்.

அஜாய் குமார் முகர்ஜி

Ajoykumar Mukherji

(மேற்கு வங்க முதல்வர்

Telephone 45551

Telegrams CONGRESS

ALL INDIA CONGRESS COMMITTEE
7. JANTAR MANTAR ROAD, NEW DELHI-1

President
S. Nijalingappa

August 18, 1969

திரு. அண்ணாதுரையின் 61'வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் வகையில் தமிழ் நாளிதழான முரசொலி சிறப்பிதழ் கொண்டு வருவது பற்றி அறிந்து மகிழ்கிறேன்.

அண்ணாதுரையின் பல்வகையான பண்புகள் பற்றி ஒளிபாய்ச்சும் வகையில் அந்தச் சிறப்பிதழ் அமையுமென்று நம்புகிறேன்.

அண்ணாதுரை பெரும் புகழ் படைத்த மக்கள் தலைவர். அவரது மக்களிடத்திலிருந்து அளவிலா மரியாதையையும், பாச உணர்வையும் பெற்றவர்.

உங்கள் சிறப்பிதழ் வெற்றியுற நான் விரும்புகிறேன்.

-எஸ். நிஜலிங்கப்பா

(அ. இ. கா. க தலைவர்)

No. CMP-69/
Asstt. Secretary to
Chief Minister. Punjab
Chandigarh

GOVT PUNJAB



அடித்தள மக்கள் பால் அன்பு கொண்டவர்!

உங்களது நாளிதழான முரசொலி—அண்ணாதுரையின் 61'வது பிறந்தநாளைக் கொண்டாடும் முகத்தான் சிறப்பிதழ் கொண்டுவருவது அறிந்து நான் மகிழ்ச்சி கொண்டேன்.

திரு. சி. என். அண்ணாதுரை—அன்பு, பாசம், மனித நேயக் கண்ணோட்டம் ஆகிய இலட்சியங்களின் அடிப்படையில் அமைந்த தேசியத் தலைவர்.

அவரைப் பற்றி சிறிதளவே அறிந்தவர்கள்கூட—அவரது அரசியல் கோட்பாடுகளையும் சமுதாய சீர்திருத்தக் கருத்துகளையும், இலக்கியத் திறனையும் போற்றி மதிப்பர். தமிழ்மொழியின் மறுமலர்ச்சியானது அவரால் உற்சாகத்துடன் தூண்டப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டது.

மலர் வெளியிடும் முயற்சியில் உங்களது வெற்றிக்கான எனது நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

-குர்ணம்சிங்

(பஞ்சாப் முதல்வர்)

விண் முகட்டிற்கு எழுந்தவர்!

பேரன்பிற்குரிய—காலஞ்சென்ற தமிழக முதலமைச்சர் திரு. சி.என். அண்ணாதுரை—அவரது பல்வேறுபட்ட மாபெரும் திறன்களுக்காக என்றென்றும் நினைவில் உறைவார்.

அவர் ஒரு சொற் பெருக்காளர்; சமுதாய சீர்திருத்தவாதி; பத்திரிகையாளர்.

தமிழகத்தில் சமுதாயப் புத்துயிர்ப்பிற்கும்—அரசியல் விழிப்புணர்வுக்கும் அவர் நிலைத்த பணியாற்றியுள்ளார்.

அவரது குறுகியகால முதலமைச்சர் பொறுப்பில்கூட, அண்ணாதுரை விண் முகட்டிற்கு எழுந்தார். அளவிட முடியாத கீர்த்தியை அவரது கட்சிக்கும் மாநிலத்திற்கும் கொண்டுவந்தார்.

அவரது நினைவு—இந்நாட்டில் நீண்ட நெடுங்காலத்திற்கு இதயத்திலேற்றி மரியாதை தரப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

-பிரமானந்த ரெட்டி

VEERENDRA PATIL
CHIEF MINISTER

GOVERNMENT OF MYSORE

VIDHANA SOUDHA
BANGALORE 1

Dt. Aug. 1969.

அவரால் தமிழுக்கு மறுமலர்ச்சி!

திரு. அண்ணாதுரையின் 61'வது பிறந்தநாள் விழா 1969 செப்டம்பரில் வருவதையொட்டித் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியால் நிறுவப்பட்ட தமிழ் நாளிதழான முரசொலி ஒரு சிறப்பிதழ் கொண்டு வருவது பற்றி யறிந்து மகிழ்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு அண்ணா செய்த சேவை நன்கறிந்த ஒன்றே. சுவையோடு சிறப்பிதழ் வெளிவருமென்று நம்புகிறேன். அது வெற்றிபெற நான் வாழ்த்துகிறேன்.

வீரேந்திர பட்டீல்

Veerendra Patil

வி. கே. ஆர். வி. ராவ்

புதுடில்லி,
25, ஆகஸ்ட், 68

திரு. சி. என். அண்ணாதுரையின் 61'வது பிறந்தநாள் விழாவிற்காக முரசொலி சிறப்பிதழ் கொண்டுவருவதை நான் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டின் நவீன கால வளர்ச்சியில் மறக்க முடியாத பணியாற்றிய மாபெரும் தேசியத் தலைவர் 'அண்ணா!'

பல நற்பண்புகளுடன் இணைந்த ஈடும் எடுப்புமற்ற பேரறிவு படைத்தவர் அவர். பண்பு—அறிவு ஆகிய இந்த இரண்டும் இணைந்திருப்பது என்பது அரிது.

தனி மேம்பாடுடைய இலக்கியத் திறனும், முற்போக்கு அரசியல் கொள்கைகளும், மனிதத் தன்மையின் அடிப்படையிலமைந்த சமுதாயச் சீர்திருத்தத்திற்கான உத்வேகமும் உரிமையுமற்ற அடித்தள மனிதர்பால் அன்பும் கொண்டவர் அவர்.

அவரது பெரு வாழ்வினை நாமனைவரும் இந்த நேரத்தில் நினைவு கூர்வது அவரது பாடங்களைப் பயின்று—இந்நாட்டின் சேவைக்கு—குறிப்பாக—உரிமையற்ற அடித்தள மனிதர்கட்கு நம்மை அர்ப்பணித்திட வேண்டும்.

-வி. கே. ஆர். வி. ராவ்
மத்திய கல்வி அமைச்சர்

தனி மேம்பாடுடைய தலைவன்!

அனுதாபம் யாருக்கு?

"இப்போது ஓவியம் போடுவதில் நானும் மூழ்கிவிட்டேன்.

ஒரு ராணுவத் தலைவன், மலைப்பகுதி என்னும் இரண்டு ஓவியங்களைத் தயாரித்திருக்கிறேன்.

அந்த ஓவியத்தில் ராணுவத் தலைவனுடைய தொப்பி சரியாக இல்லையே என்றார்கள், நண்பர்கள்.

"அது எப்படி சரியாக இருக்க முடியும்? இவன் தோற்றுப்போன ராணுவத் தலைவன். சரணடைவதற்காகச் செல்லும் வேளையில் எந்தத் தொப்பி கிடைத்ததோ அதை எடுத்து அணிந்து கொண்டு செல்கிறான் என்று காரணம் கூறி, ஐயோ "பாவம்" என்று அனுதாபமும் தெரிவித்தார்கள். அந்த அனுதாபம் ராணுவத் தலைவனுக்கா ஓவியம் போடத் தெரியாத எனக்கா என்று கேட்கவில்லை. கேட்பானேன்?

('காஞ்சி'யில் "6342" என்ற கட்டுரையில் அண்ணா.)

அறிஞர் அண்ணாவும் மாணவர்களும்

கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்



மாணவர்களின் உணர்வையும், உள்ளத்தையும், தொட்டு அவர்களின் இதயத்திலே குடியேறியவர்களில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஈடானவரோ அல்லது எடுப்பானவரோ தமிழகத்தில் எவரும் இல்லை என்று சொல்லலாம்.

சில பேரறிஞர்களின் கருத்துக்கள் சிந்தையை மட்டுந்தான் தொடும், வேறு சில பெரியவர்களின் கருத்துக்கள் நெஞ்சை மட்டுந்தான் தொடும். ஆனால் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்கள் ஒரே நேரத்தில், சிந்தையையும் கவரும்; நெஞ்சையும் தொடும். அவர் பேசத் தலைப்பட்டால், அவரது கருத்துக்கள் செவியையும் ஈர்க்கும்.

நான் மாணவனாக இருந்த போதுதான் அவரது எழுத்தால், பேச்சால், கருத்தால், கனிவால், அன்பால் அரவணைப்பால் பெரிதும் கவரப்பட்டேன். என்னைப் போன்றுதான் எண்ணிறந்த மாணவர்களும், இளைஞர்களும் அவரால் கவரப்பட்டுக் கழகக் காளையர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் முன்னேறுவதற்கு எடுத்துக்காட்டாக வழிகாட்டியாகப், பேராசிரியராக, அறிவுரையாளராக ஒருவரைக் கொள்ள வேண்டுமானால், அறிஞர் அண்ணா அவர்களைத் தவிர வேறு எவரையும் இந்த நூற்றாண்டில் காட்ட இயலாது.

"அறிவியலின் ஒருபகுதி அரசியல். அரசியலை நீக்கி விட்டு அறிவைப் பெற முடியுமா? அரசியலில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது; அரசியலைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதைச் செய்தால்தான் அரசியல் நகரிகம் வளரும்.''

என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறியவர் அறிஞர் அண்ணா; அப்படியே செய்து காட்டியவரும் அவர்தான்.

அறிஞர் அண்ணா அவர்கள் பிஞ்சிலே பழுத்தவர் அல்லர். அவர் பழுக்க வேண்டிய காலத்தில்தான் பழுத்தார். பிஞ்சு இளங்காயாகி, இளங்காய் செங்காயாகி, செங்காய் பழமாக வேண்டும். பிஞ்சு பழுத்தால், அது 'வெதும்பல்' என்றுதான் பெயர் பெறுமே அல்லாமல், 'பழம்' என்று பெயர் பெறாது. தமிழ்மாணவர்கள் படிக்கும் போதே அரசியல் தலைவர்களாகி, அவர்கள் வெதும்பல்கள் ஆகிவிடக்கூடாது என்றும், அவர்கள் படிக்க வேண்டிய படிப்புக்களையெல்லாம் படித்தானபிறகு பழங்களாக மாற வேண்டும் என்றும் கூறி வந்தார்கள்.

மாணவர்கள் வாதிட்டுதான் வெற்றிகொள்ள எண்ணவேண்டுமேயல்லாமல், வன்முறையில் ஈடுபட்டு வெற்றிபெற முயலக்கூடாது என்பதை அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள்.

மாணவர்கள் எக்காரணங் கொண்டும், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எவரிடத்திலும் வன்முறையில் நடந்து கொள்ளக் கூடாது என்பதுதான் அறிஞர் அண்ணாவின் பெருங் கவலையாகும்..

மாணவர்கள் எப்பொழுதுமே உணர்ச்சிவயப் படக்கூடாது; உணர்ச்சியை மாணவர்கள் தம் வயப் படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் ஓயாமல் அறிவுறுத்தி வந்தார்கள்.

மாணவப் பருவத்தைப் பற்றிக் கூறும்போது "சொற்சுவையும், பொருட்சுவையும் இழைந்து கேட்போருக்கே களிப்பூட்டுவதோடு கருத்தையும், குழைத் தூட்டும் இசை போன்ற பருவம், சுயநலமும் சுகபோகப் பித்தும் எருமை எனப் புகுந்து இதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம் மாணவ பருவம்,'' என்று குறிப்பிட்டார்கள்.

மாண்பினைப் பெறுபவர்கள், மாண்பினைப் பயிலுபவர்கள், மாண்பினைப் பயிற்றுவிப்பவர்கள்தாம் மாணவர்கள் ஆவார்கள்; மாணவர்கள் எப்பொழுதுமே பாண்புக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும் என்று அறிஞர் அண் அவர்கள் குறிப்பிடுவார்கள்.

அண்ணாவின் எண்ணத்திற்கு ஏற்ப மாணவர்கள் மாண்புமிக்க குடிமக்களாக ஆகத் தங்களை ஆயப்படுத்திக் கொள்வார்களாக!



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர்

முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி.

அறிஞர் அண்ணா ஒரு கட்சியின் நிறுவனர்; ஒரு மாநிலத்தின் முதல்வர் — இவ்வளவுதானா அவரது பெருமை? இவைகளுக்காகவா இத்தனைப் பாராட்டு? அல்ல; அல்ல!

அறிஞர் அண்ணா, ஓர் இலங்கைப் பிரமுகர் கூறியதுபோல,

"இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர்!"

"அறிஞர் அண்ணா தமிழ் வாக்கிய அமைப்பிலே ஒரு புதிய நடைகண்டு எழுத்துத் தமிழுக்கு ஏற்றம் தேடியவர்; எனவே அண்ணாவின் பெயர் தமிழ் எழுத்து உள்ளவரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணா மேடைப் பேச்சிலே ஒரு புதிய அமைப்புக்கண்டு பேச்சுத் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்; எனவே அண்ணாவின் பெயர் தமிழ்ப் பேச்சு உள்ளவரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணா, திரை—நாடகத் துறைகளிலே மறுமலர்ச்சிக்கு வித்திட்டு நாடகத் தமிழுக்கு ஏற்றம் தந்தவர்; எனவே அண்ணாவின் பெயர் நாடகத் தமிழ் உள்ளவரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணா நடிப்புக் கலைக்கு அதற்குரிய கண்ணியத்தை மீட்டுத் தந்து பெருமை சேர்த்தவர்; எனவே அண்ணாவின் பெயர் நடிப்புக் கலை உள்ளவரை நிலைத்திருக்கும்.

இவை அனைத்திற்கும் மேலாக—அறிஞர் அண்ணா உலகெங்கிலுமுள்ள தமிழினத்தோரின் தனித் தன்மையை அறிவுறுத்தி, அவர்கள் தலைநிமிர்ந்து நடக்க வழிவகுத்தவர்; எனவே அண்ணாவின் பெயர் தமிழினமும் தமிழ்மொழியும் உள்ளவரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணா 'கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு' என்னும் செயல்முறையை வாழ்க்கை முறையாகக் காட்டியவர்; எனவே அண்ணாவின் பெயர் உலகில் இக்குணங்கள் மதிக்கப்படும்வரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணா ஆளப்படுவோருக்கும் ஆள்வோருக்கும் இடையே இருந்த இடைவெளியை இல்லாமல் செய்த ஒப்பற்ற ஜனநாயகவாதி. எனவே அண்ணாவின் பெயர் உலகில் ஜனநாயகம் உள்ளவரை நிலைத்திருக்கும்.

அறிஞர் அண்ணா உலகிலேயே முதன் முறையாகக் குடும்பப் பாச உணர்வை அரசியலில் ஊட்டியவர்; எனவே அண்ணனின் பெயர் பாச உணர்ச்சி மனிதனால் மதிக்கப்படும் வரை நிலைத்திருக்கும்.

போட முடியாத போக முடியாதது

உணவு அமைச்சர். ப.உ. சண்முகம்



அண்ணா

அழிக்க முடியாத ஓவியமாக, காலமெல்லாம் இனிக்கவும் சுவைக்கவுமாகச் செய்யும் காவியமாக எங்களது இதயத்தில் நிலையாகிவிட்ட கலைவள்ளலே, சிங்காரச் சென்னையில் சிலையாகிவிட்ட உமக்கு என் வாழ்நாளில் நான் கடிதம் எழுதியது மிகச் சொற்பம்! பற்பல நேரங்களில் எழுதிடத் துடித்தும் துவக்கிய கடிதத்தை முடிக்காமலேயே விடுத்ததுண்டு. மடித்து மறைத்து விட்டதுண்டு! ஆனால் இன்று ஏனோ ஒரு உணர்ச்சி உமக்கு எழுத என்னைத் தூண்டுகிறது. போட முடியாத கடிதத்தை போக முடியாத தூரத்திற்குப் போய் சேர்ந்து விட்ட உமக்கு எழுதுகிறேன்.

சிரிக்கின்ற ரோஜா! கதிரவன் வரவைக் கண்டு பூரிக்கின்ற கமலம்! கடலைக் கொந்தளிக்கச் செய்யும் குளிர்நிலவு! காரிருளைப் போக்கிடக் கடலின் மடியினின்றும் சிவந்தமேனியோடு எழுந்துவரும் செங்கதிரோன்! பறந்து வீரும் வெண்ணிறமயமானபனிமூட்டம்மூடி மறைத்து ஓடிஒளியும் காட்சி இவைகளும் இன்ன பிறவும் அழகுள்ளவைகள்தான்!

ஆனால்பொருள் உள்ளவைகளா என்றால், நிச்சயமாக இல்லை. முத்தான வார்த்தைகளை அணியாய்க் கோர்த்து சத்தான துணுக்குகளை சாதாரணமாய், தாராளமாய் சலியாது சொல்லிவிட்டு உடலெல்லாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் அந்த அழகான காட்சியில் பொருளிருக்கும்! அந்த நேரத்தில் தங்களது அகன்று விரிந்துள்ள கண்களிலே கதைகள் பல பொதிந்திருக்கும். தங்களது இதழ்களிலே தவழ்ந்து விளையாடும் புன்னகை கலைகள் நிறைந்த புதையல் என்று சொன்னால் என்னைத் தவறென்பார் எவரும் இருக்கமாட்டார்!

சிறையிலும், சட்டமன்றத்திலும், கார் பயணத்திலும், கடற்கரை மணலிலும், சிற்றுண்டிகளிலும், சினிமா கொட்டகைகளிலும் மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், இப்படிப் பல கட்டங்களில் பல நேரங்களில் உங்களோடு நான் இருந்திருக்கிறேன். என்னிடம் கோபித்துக் கொண்டு தாங்கள் பேசாமல் இருந்த நாட்கள்தான் என் வாழ்க்கைப் பாதையில் தோன்றிய மிக மிகக் கசப்பான நிகழ்ச்சிகள். ஆனால் என் உரைகளைக் கேட்டு தாங்கள் பாராட்டு தெரிவித்த நாட்களே என் வாழ்க்கையின் மிகவும்சுவையான நிகழ்ச்சிகள்.

தங்களைத் தொடர்ந்து வந்தவர் எவரும் கெட்டதில்லை. தாங்களும் எவரையும் கெடுத்ததில்லை. பகையாக எவருக்கும் ஆன

தில்லை— எவரையும் ஆக்கிதில்லை. பொருளைத் தேடிய அலைந்ததில்லை. பெருமைக்காக வேடம் தரித்ததில்லை. ஆடம்பரத்தைக் கண்டு நாட்டம் கொண்டதில்லை. ஆர்ப்பரிப்போரைக் கண்டு ஓட்டம் பிடித்ததில்லை! வாதத்திற்கு வந்தாரை விட்டதில்லை. வெற்றியைத் தவிர வேறெதையும் சந்தித்ததில்லை! பலத்தை வெளிக் காட்டிக்கொண்டதில்லை. பலகீனத்தை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் கொண்டதில்லை! தலைவன் என்று என்றுமே தலை நீட்டிக்கொண்டதில்லை. தொண்டர்களை அணைத்து அவர்களோடு அன்போடு பழகத் தவறியதில்லை.! இப்படி ஒருவர் உலக வரலாற்றில் உங்களைத் தவிர யார்இருந்தார்கள்? நிங்கள் படித்து முடித்த லட்சக் கணக்கான புத்தகங்களையும் முடியுமானால் மீண்டும் புரட்டிப் பாருங்கள்.

பல தலைவர்களின் வரலாற்றைப் படித்து உயர்ந்த பண்புகளை மட்டும் எடுத்து சொந்தமாக்கிக் கொண்டீர்கள். புரட்சியாளர்களின் போக்கையும், மிதவாதிகளின்தன்மையையும் கலந்து புதிய புதிய வரலாற்றையே படைத்தீர்கள். காலவெள்ளத்தில் மீளமுடியாதிருந்த கவிஞனை புரட்சிக் கவிஞன் எனப் பெயரிட்டு பொருளையும் சேர்த்துத் தந்தீர். பொருளைப் பெற்ற கவிஞரோ கடுமையாகத் தாக்கி எழுதியும் அவருக்கென்று ஓர் சிலை வைத்தீரே! இது ஒன்று போதும் உங்களது உயர்ந்த பண்பிற்கு எடுத்துக்காட்டு.

நினைத்ததெல்லாம் செய்து முடித்தது இந்த வையகத்தின் அரசியல் வரலாற்றில் தங்களை மிஞ்சிய தலைவன் யார்?

“சுயமரியாதைத் திருமணச் சட்டம். இருமொழித் திட்டம் தாய் நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரிடுதல்,” இதைச் செய்யவே நான் முதல் அமைச்சரானேன் என்றீர். முடித்தீர். முடித்ததும், அவசர அவசரமாகப் போய்விட்டீரே!

“தாய் நாட்டிற்குத் தமிழ்நாடு” என்று பெயரிடும் விழாவில் கலந்து கொண்டபோது, “இந்தத் திருவிழாவில் நான் கலந்து கொள்ளக்கூடாதென்று டாக்டர்கள் தடுத்தனர். உயிருக்கு ஆபத்து என்றனர். இந்தப்பெருவிழாவில் கலந்து கொள்வதற்கில்லாத உயிர் இருந்தென்ன அதை நான் இழந்தென்ன,” என்றீரே இது ஒன்று போதாதா தமிழ்நாட்டின் மீது தாங்கள் கொண்டிருந்த பற்றிற்கு.

அன்றொருநாள் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் பாதுகாப்புக் கைதியாக கனம் பக்தவத்சலத்தால் பூட்டப்பட்டுக்கிடந்த கலைஞரைக் காண விரைந்தீர்! பார்த்திர்! வழியாத கண்ணீர் வழிந்தோடிற்று. அன்று மாலை நெல்லைப் பொதுக் கூட்டத்தில் “தம்பி கருணாநிதி பூட்டப்பட்டுள்ள பாளையங்கோட்டை சிறைச்சாலை எனது புனித யாத்திரை ஸ்தலம் என்றீரே அது ஒன்று போதாதா அவர்மீது தாங்கள் கொண்டிருந்த பற்றை விளக்க!

அவர்தான் இன்றைய தினம் தாங்கள் மனமுவந்தந்திட்ட தங்களது இதயத்தை சொந்தமாக்கிக் கொண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்று தங்கள் தயாரிப்பு சோடையல்ல என்பதை நிரூபித்துக்கொ கொண்டிருக்கிறார். அவருக்கு அருகில் நாங்கள் அனைவரும் உள்ளோம். எனவே வங்கக் கடற்கரையோரம் உறங்கும் எங்கள் மன்னவனே, அண்ணா, அமைதியோடு உறங்குங்கள். நீங்கள் விட்டுச் சென்ற வேலைகளை முடித்துவிட்டு, விரைவில் வருகிறோம் உங்களைக் காண.





முகப்புப் படங்கள் : நன்றி ஹாரி மில்லர் இந்தியன் எக்ஸ்பிரஸ்



அவர்போல் ஒருவர் உண்டா?

தமிழ்நாட்டில் பெயர் பெற்ற தமிழ் நாளிதழான 'முரசொலி', தமிழகத்தின் முதலமைச்சராகவும் பிற வகையிலும் பெருஞ் சிறப்புற்றுத் திகழ்ந்த திரு சி.என். அண்ணுத்துரை அவர்களின் அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடும் முறைமையில் 1969, செப்டம்பர், 15-ம் நாளன்று சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

எல்லா மக்களிடையேயும் பலதரப்பட் டவகுப்பின ரிடையேயும் கட்சிகளிடையேயும் திரு அண்ணுதுரை அவர்களைப் போல் செல்வாக்குப் பெற்ற மற்ருெருவரை தமிழ்நாட்டில் நான் கண்டதில்லை. ''அண்ணு''வுடன் நெருக்கமாகப் பழகி அறியும் வாய்ப்பு, துரதிர்ஷ்ட வசமாக எனக்குக் கிட்டவில்லை; ஆனல் அவரைப் பல சமயங்களில் சந்தித்திருக்கிறேன். ஒரு முறை அவர், பம்பாய் அரசு மாளிகையில் என் விருந்தினராகத் தங்கி யிருந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர், நான் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிக்குச் சென்றிருந்த போதுதான் அவரை முதன் முதலாகச் சந்தித்தேன். திரு அண்ணுதுரை அவர்கள் மிகச் சிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவர்; அவரது சொற்பொழிவைக் கேட்கப் பல்லாயிரவர் கூடுவதைக் கொண்டே அவரது செல்வாக்கை நன்கறிய முடியும்.

தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பைப் பெரும் வெற்றிகரமாக அவர் நடாத்திச் சென்ருர். அவரிடம் அன்பு காட்டுவதில் எல்லாக் கட்சிகளும் ஒருமித்து இருந் தன. அவர், ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகச் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கிஞர்.

அவரது மறைவு, தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி இந்தியா முழுமைக்குமே பேரிழப்பாகும். ''கடவுள் எவரைநேசிக்கிருரோ அவரே இளமையில்இறக்கின்ருர்'' என்னும் முதுமொழி இந்தச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தக்கதாகும்.

''அவரது ஆன்மா அமையுறுக'' என இறைவனை வேண்டுகிறேன்.

''அவரது அடிச்சுவட்டை நமது மக்கள் பின்பற்று வார்களாக'' என்பதே என் வேண்டுகோளாகும்.

சிறு அளவினதான இச் செய்தியை அனுப்புவதில் நான் பெரிதும் உவகையடைகிறேன்.

ஆளுநர் செரியன்

GOVERNOR OF MAHARASHTRA

RAJ BHAVAN
POONA
16th August 1969.

அன்புள்ள திரு. மாறன்,

செப்டம்பர் 15-ந் தேதி வெளியிடப்படுகிற சிறப்பிதழுக்குச் செய்தி ஒன்றைக் கோரி தாங்கள் 5-ந் தேதியிட்டு எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள செய்தி தங்களுக்கு பொருத்தமானதாக இருக் கும் என்று நம்புகிறேன்.

தங்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.
தங்கள் உண்மையுள்ள,

பி. வி. செரியன்

இனி எங்கே காண்போம்

-முருகுவண்ணன்-

உலகமுதல் மொழியான தமிழ்ஞானக் குன்றே!
உலகப்பொது மறையான குறள்முல்லைக் காடே!
புலமையினை விளைவிக்கும் மருதப்பொன் நிலமே!
புதியபுது தத்துவங்கள் இசைக்குமதிக் கடலே!
பொலிவூட்டி எம்முணர்வில் உலவுகலை நிலவே!
பொற்காலத் தென்றலென வந்தபுதுக் கனவே!
தலைதூக்கி தமிழ்ஆட்சி செயவைத்த திறலே!
தனக்கென்று வாழாத தமிழ்மக்கள் நிதியே!

ஒருசொல்லில் ஒருநூறு இலக்கியம் படைத்தாய்!
உயிரன்ன தமிழ்த்தாயை புவிபோற்ற உழைத்தாய்!
உருவில்லா குறள்போன்ற உருவத்தைக் கொண்டாய்
மன்னுயிர்கள் இசைந்தேற்கும்குறள் பரவச்செய்தாய்!
திரையுள்ளே புதைந்திட்ட தமிழர் வரலாற்றை
தனித்துநின் றகழ்ந்தெடுத்து தனிப்பெருமைசேர்த்து
வரையில்லா உலகவர லாறுஎனும் ஏட்டில்

புதுவண்ணம் தீட்டியஎம் வரலாற்றுப் புகழே!
ஒருபணிகள் மக்கள்தம் பணியென்றே வாழ்ந்தாய்!
'உயிர்மூச்சு தமிழ்',என்ற உணர்வுதனை சேர்த்தாய்!
அறுபதினை தொடங்கும்முன், தமிழ்மக்கள் அன்ருய்....
அன்ருேர்நாள் எமைவிட்டுப் பிரிந்திட்டீர்! இல்லை..
ஒருபுகழாய் உலகத்துப் புகழெல்லாம் ஒன்ருய்
உனைவந்து மொய்ப்பதனை விரும்பாதோ மறைந்தாய்!
மறைபடியா தமிழ்த்தாயே! அண்ணு! எம் துரையே!
காலமெல்லாம் பாடலல்லால் காண்பதினி எங்கே-

B. நாகிரெட்டி அளிக்கும்
'புரட்சிநடிகர்' எம். ஜி. ஆர். நடிக்கும்
விஜயா இண்டர்நேஷனலின்
நம் நாடு
ஈஸ்ட்மன் கலர்
டைரக்ஷன்: ஜம்பு இசை: M.S. விஸ்வநாதன்
வசனம்: சொர்ணம் பாடல்கள்: வாலி

அண்ணா பிறந்திராவிட்டால்?
தூங்கிய தமிழகத்தை தட்டி / எழுப்ப ஆள் இருந்திருக்காது.
அக்ராசனாதிபதி அவர்களே!
தலைவர் அவர்களே!
மேடையில் தூய தமிழ் தவழ்ந்திருக்காது!
இவரே பெர்னாட்ஷா
நாடகத்தில் புதுமை இருக்காது.
திரையுலகில் திருப்பம் ஏற்பட்டிருக்காது.
இந்தி அரக்கி
தமிழ்த்தாய்
தமிழ்த்தாய் இந்திஅரக்கியால் கொல்லப்பட்டிருப்பாள்.
வடநாடு
தாழும் தெற்கு தூக்கி நிறுத்தப்பட்டு இருக்காது.
காங்கிரஸ்
காங்கிரசிற்கு மூக்கணாங் கயிறு போட நாதியிருக்காது.
நமக்கெல்லாம் தென்னகத்தில் பிறந்த தலைமை கிடைத்திருக்காது.
பெருந்தனக்காரர்களுக்குரிய அரசியல் மக்கள் மன்றத்திற்கு வந்திருக்காது.
கொலைக்காரப் புரட்சிக்கும் பிற போக்கு இருளுக்குமிடையே நடுவழி காட்டும் ஒளிவிளக்கு கிடைத்திருக்காது

கைத்தறி வாங்கலியோ... கைத்தறி!
தென்னகத்தின் மிகப்பெரிய தொழிலான கைத்தறி கல்லறை போயிருக்கும்.
சட்டமன்றத்தில் தமிழ்மணம் கமழ்ந்திருக்காது.
நேரு போன்றவர்கள் தென்னாட்டாரை நான்சென்ஸ் பட்டத்திற்குரியவராக்கியிருப்பார்கள்.
மக்களிடையே சாதிப்பிரிவும் மதப்பிரிவும் தலைவிரித்து ஆடியிருக்கும்.
ஒவ்வொரு துறையிலும் சிறந்துவிளங்கும் தம்பிமார் படை வரிசை கிடைத்திருக்காது.
முஸ்லிம் சமுதாயத்துடன் அன்புறவு ஏற்பட்டிருக்காது.
பொங்கலுக்கும் தமிழ் மக்களின் நாகரிகத்திற்கும் மதிப்பு வந்திருக்காது!
காந்தியாருக்குப்பின் அகிம்சை கொள்கையைக்காக்க ஆள் இருக்காது!
இத்தனைக்கும் மேலாக
அவர் இல்லையேல் நாம் இல்லை!

மறைந்தாரே அண்ணா!

புதுமைக் கவிஞர் வாணிதாசன்



வான்தோன்றி வளிதோன்றி என்றென்றும் மங்கா
வட்டமிடும் எரிமலையாம் உடுக்கூட்டம் தோன்றிக்
கான்தோன்றி மலைதோன்றிக் கார்முகில்கள் தோன்றிக்
கல்தோன்றி மண்தோன்றிக் கடலலைகள் தோன்றித்
தேன்தோன்றித் தேன்கசக்கச் செந்தமிழ்த்தாய் தோன்றித்
தென்னகத்தின் வாரிசுகள் பல்புலவர் தோன்றி
நான்தோன்றிக் கண்டறிந்த நல்லறிஞர் அண்ணா!
நற்றமிழ்த்தாய் மூத்தமகன்! மறைந்தாரே அந்தோ!

தத்துகின்ற மடையெல்லாம் முத்தினங்கள் தோயத்
தாமரையும் செந்நெல்லும் வாழைபலா மாவும்
கத்துகின்ற புள்ளினத்தைக் கைதட்டிக் கூவக்
கற்றோரும் மற்றோரும் களித்திருந்த நாள்போய்
தொத்துகின்ற பசிநோய்க்கே மருத்துவனாய் வந்து
தூயதமிழ் நாடெங்கும் படி-அரிசி தந்தார்!
கொத்துகின்ற பாம்பின்வாய் உயிர்பிழைக்கக் கூடும்
கூற்றின்வாய் யார்பிழைப்பார்? மறைந்தாரே அண்ணா!

குன்றுதவழ் கார்முகில்போல் குளிர்மைதவழ் முன்றில்
குடியிருந்த ஏழையெல்லாம் கொடுநெருப்புத் தீயின்
வென்றிதவழ் போழ்தினிலே மனம்வெந்தார் அண்ணா!
வேகாத வீடமைத்தார்; மேதைமா மேதை!
சென்றுதவழ் கடலலைகள் சீர்த்தமிகு சென்னைக்
கடற்கரையின் திசையடைந்தார்; உலகத்தார் உள்ளம்
இன்றுதவழ்ந்(து)எரிகிறதே; தீ! தீ! தீ! எங்கும்
எம்மண்ணா! உலகண்ணா! மறைந்தாரே அந்தோ!

வான்பார்த்து; வயல் உழுது; மழைபார்த்து வித்தி
வரகுதினை கம்பெள்ளும் புன்செயிலே காணத்
தேன்பார்த்து நிற்கின்ற முடவனைப்போல் பார்க்கும்
செந்தமிழ்த்தாய் ஏழைமகன், நல்உழவன் வாழக்
கூன்பார்த்து; நிலத்துவரிக் குறைபார்த்துப் போக்கிக்
குடிசையெல்லாம் களிபொங்கும் குளிர்மையினை எங்கும்
தான்பார்த்து மகிழுமுன்னர் முதலமைச்சர் அண்ணா!
தலைசாய்த்துப் போனாரே! கண்கள் அழுத தந்தோ!

முன்னகமும் புறங்கஃடும் முதுபுலவர் வாழ்ந்தும்
முடிமன்னர் வழிவந்தும் முக்கடலும் சூழ்ந்தும்
என்னகமும் என்னண்ணா அகமுலகும் போற்றும்
இசைபரப்பி என்றென்றும் வாழ்ந்திருக்கும் கன்னித்
தென்னகமே! திருநாடே! உன்றன்நல் வாழ்வின்
திசைதிருப்பம் 'தமிழ்நாடு' பெயர் சூட்டி வைத்தார்.
உன்னகத்தில் குடிகொண்டார்; உன்மகனே, மூத்த
ஒருமகனை உலகிழந்து வாடுதந்தோ! அந்தோ!

புன்னையிலே பொன்பூக்கள்! அப்பூக்கள் மொய்க்கும்
பொரிவண்டைத் தாலாட்டும் கடலலைகள் பாயும்
சென்னையிலே; அந்தந்தோ நான்கண்ட காட்சி;
தீந்தமிழ்த்தாய் அழுகின்றாள்; மக்களழுகின்றார்!
தென்னையிலே! வாழையிலே சிறகடித்துப் பாயும்
செம்மூக்குக் கிளிப்பிள்ளை புல்பூண்டு மாவும்
எந்நிலையோ! என்கண்கள் அழுதுக்கண் துஞ்சா!
எங்கெங்கும் ''எம்மண்ணா எனும் அழுகை'' அந்தோ!

தென்னவர் தெய்வம்

தென்னவரின் தெய்வமவர்; இனித்திருக்கும்
தேன்தமிழின் தந்தையவர்! அறிவுலகின்
மன்னவருள் மன்னரவர்; பதவிக்காய்த்தன்
மானந்தன்னை விற்றவரை வென்றவீரர்!
சின்னமொழி பேசிநின்ற மனிதர்தம்மின்
சினமழித்துச் சிந்தனையை பூட்டுவித்து
தன்னையவர் தலைவரென்று ஏற்கச்செய்த
தமிழினத்தின் தமைமைசால் வேந்தரவர்!

கொழுத்திருந்த கூட்டமதை எதிர்த்துவேர்வை
கொட்டிநின்ற மானிடர்க்குத் துணையானவர்!
பழுத்தறிவுப் பேராசான் காந்தியார்க்குப்
பக்கத்தில் நிறுத்துதற்கு இணையானவர்!
அழுத்தமாய்த் தன்கருத்தைக் கூறுங்காலை
அஞ்சாது; வரும்பகையை முறிக்கும்சூரர்!
எழுத்தாற்றல்—பேச்சாற்றல் இவையிரண்டின்
இலக்கியமாய்—இலக்கணமாய் வாழ்ந்த தீரர்!

எ.பரசுராமன்

பண்டிகைகள், விசேஷ காலங்களுக்கு ஏற்ற அநேக புதிய ரகங்கள்

பட்டுச் சேலைகள், பாவாடைத்துண்டுகள்
சோளி-பீஸ் ரகங்கள் மற்றும் பல ரக ஜவுளிகள்
தென்னிந்தியாவிலேயே பட்டுச் சேலைகளுக்கு நற்கியாதி பெற்ற ஸ்தாபனம்

நல்லி சின்னசாமி செட்டி

(பனகல் பார்க்)

தியாகராய நகர், சென்னை-17.

டெலிபோன்: 444115
444111

எமது நல் வாழ்த்துக்கள்!

யுனைடெட் இந்தியா ரோலர் பிளவர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்,

"கோபுரம் பிராண்ட்" மைதா & ரூஜி மற்றும்
"ஷிப் பிராண்ட்" ஆட்டோ & ப்ரான் தயாரிப்பாளர்கள்

மில்கள்: விற்பனை இலாகா

நெ. 1/4, சூரிய நாராயண செட்டிதெரு,
தண்டையார்பேட்டை,
சென்னை-21.

தொலைபேசி: 52671, 52672
& 52673

அலுவலகம்:

நெ. 1, அண்ணா பிள்ளை தெரு
சென்னை-1

தொலைபேசி: 23073

தந்தி: "MONARCH"

மௌனமாக இருந்த அண்ணா கேட்டாரே ஒரு சரியான கேள்வி!



அப்போது வேலைக்காரி படமாகிக் கொண்டிருந்த நேரம். தம் நண்பர்களுடன் அண்ணா அவர்கள் கோயமுத்தூரில் தங்கியிருந்தார்கள். அண்ணாத்ம் நண்பரை அவசரமாக விமானத்தில் அனுப்ப வேண்டி வந்தது. நான் தான் அந்த நண்பரையும், அண்ணா, சி. வி. ராசகோபால் ஆகியோரையும் பூளைமேடு விமான தளத்துக்குக் காரில் கொண்டுபோய்ச்சேர்த்தேன்.

அந்த நண்பர் விமானத்தில் ஏறிய பிறகு, நாங்கள் மூவரும் புறப்பட்டோம். பூளைமேடு விமான நிலையத்திலிருந்து அவிநாசி பாதையைவிட வலதுபுறமாகச் சென்ற பாதை ஸ்டுடியோவுக்குக் குறுக்கு வழியாகப் போகுமோ என்று எனக்கு ஒரு சந்தேகம். உடனே வண்டியை வலப்புறப் பாதையை நோக்கி ஓட்டினேன். அண்ணா அவர்களும், சி. வி. ஆரும் எந்தவித வின்னமும் ஏற்படாமல் விமானம் வளைந்து உயர்ந்துவிட்டது.

நாங்கள் நெடுமூச்சு விட்டபடி பின்னுக்குப் பார்த்தோம். அபாயகரமான நிலைமை எதுவும் இல்லை என்று தோன்றியதும் வண்டியைத் திருப்பினோம்.

அவிநாசிரோடு வழியாகவே போய்விடலாம்; குறுக்கு வழியும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று திரும்பிப் புறப்பட்டபோது பாதையைமறித்துக்கொண்டு ஏழெட்டுப் பேர் நின்றிருந்தார்கள். காரை ஓரடிகூட எடுக்கக் கூடாது என்று தடுத்தார்கள்.

விமானப் பாதையின் குறுக்காக ஒரு கார் நின்றிருந்ததைக் குறித்துத் தக்க நடவடிக்கையெடுக்குமாறு கூறி, புறப்பட்டுப்போன விமான அதிகாரி விமான நிலையத்துக்கு 'ஒயர்லஸ்' மூலம் செய்தி அடித்து விட்டார்.

இக்கட்டில். அண்ணா பேசக் கூடாதா என்று ஏங்கினோம் நாங்கள். அவர் பேசினால் கூட இதையே திருப்பிச் சொல்லிவிட்டால் என்ன ஆவது....? இப்படி வேறு ஒரு குழப்பம்.

எங்கள் நிலைமையைப் புரிந்து கொண்டவராக அண்ணா அவர்கள், அந்த அதிகாரியிடம் மெதுவாக—தமக்கே உரித்தான ஒரு அமைதியான அணுகலோடு—பேச ஆரம்பித்தார்கள்.

''நாங்கள் அந்த வழியாகக் காரை ஓட்டிக் கொண்டு போனது தப்புதான். அந்த வழியாக கார் போனதினால் விமானப் போக்குவரத்துக்குத் தடங்கலுண்டாகி விட்டது. இந்த எதிர்பாராத சம்பவம் நேரிடாமலிருக்க நாங்கள் முயன்றிருக்கலாம்., ஆனால் அந்தப் பாதையில் எந்த வாகனங்களும் போக கூடாது என்பதற்கான ஒரு அறிவிப்போ, அல்லது வேலியோ இருந்திருந்தால், இந்த அபாய நிலைமைதவிர்க்கப்பட்டிருக்கலாம்இல்லையா? அந்தத் தப்பு எங்களைஇப்படிவழி பிசகச் செய்துவிட்டதே!'' என்று அண்ணா கூறியதும் அந்த அதிகாரிகளின் வாயடங்கி விட்டது. எங்களை மேற்கொண்டு எதுவும் கேட்காமல் அனுப்பி விட்டார்கள்.

அதுமுதல் அந்தப் பாதையில் வேலியும் ஒரு அறிவிப்பும் போடப்பட்டதாகக் கேள்வி.

ஃ இதுவரை கேட்காத விபரம் ஃ

ஏதோ உரையாடிக்கொண்டே வந்தார்கள்.

வண்டி பாதையில் ஒரு பர்லாங்கூடச் சென்றிருக்காது. அதற்குள் ''உர்..'' என்ற சப்தம். இடதுபுறம் பார்த்தோம்.

அந்தப் பாதை, விமானம் ஓடி உயர்வதற்காக அமைக்கப்பட்டிருந்த பாதை! வண்டியை இப்படியும் அப்படியும் நகர்த்த முடியவில்லை. விமானம் வேகமாக வந்து கொண்டிருந்தது. அது எங்களைக் கடந்து ஒரு வளைசல் போட்டு உயர வேண்டும், வந்த வேகமோ குலை நடுக்கத்தை மட்டுமில்லை; வண்டியின் பேனட்களிலும் நடுக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

அண்ணா அவர்களும் நாங்களும் அப்படியே மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தோம். நல்லவேளையாகக் கார் மீது எந்தவித வின்னமும் ஏற்படாமல் விமானம் வளைந்து உயர்ந்துவிட்டது.

தள அதிகாரிகள் அதுகுறித்து ஏதாவது செய்தாக வேண்டுமென்று காரை மடக்கி விட்டார்கள்.

நாங்கள் எங்கள் பெயரைச் சொன்னோம். யாருடைய பெயரைப் பற்றியும் அவர்களுக்கு எந்தவிதக் கவலையோ, அனுதாபமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதிகாரிகளிடம் கொண்டுபோய் நிறுத்தி விட்டார்கள்.

நானும் சி. வி. ஆரும் எங்கள் தப்புக்கு எவ்வளவு தூரம் மன்னிப்புக் கேட்க முடியுமோ, அவ்வளவு தூரம் மன்னிப்புக் கேட்டோம். ஆனால் அவர்கள் விடுவதாகவேஇல்லை. ''ஒன்று நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிறீர்களா அல்லது போலீசாரை இங்கே வருவிக்கட்டுமா?'' என்றுகேட்டபடி இருந்தார்கள். இந்த இக்கட்டில்...

அண்ணாவின் வேலைக்காரி திரைப்பட இயக்குநர் ஏ. எஸ். ஏ. சாமி சொன்ன சுவையான தகவல் இது!



எமது நல் வாழ்த்துக்கள்!

SANKAR BRAND CALCIUM CARBIDE

இண்டஸ்டிரியல் கெமிகல்ஸ் லிமிடெட்

தயாரிப்பாளர்கள்:

"சங்கர் பிராண்ட்"

கால்ஷியம் கார்பைட்

I. S. ஸ்பெஸிபிகேஷன்களுக்கு இணங்க தயாரிக்கப்படுகிறது.

1040-1960 ஏ-கிரேடு

பதிவு பெற்ற அலுவலகம்:

175-1, மவுண்ட் ரோடு, சென்னை-2

தொழிற்சாலை

சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா

ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்:

ஸ்ரீ கிருஷ்ணா & சன்ஸ்,

"ஸைர் மான்ஷன்"

126, மவுண்ட் ரோடு, சென்னை-6.

8, ரிட்சி தெரு, கல்கத்தா-19.

133, ஜோர்பாக் நர்ஸரி, புதுடில்லி

26-203, மீனு சதன், சியான்,

மாதுங்கா, பம்பாய்-22.



ஒமேகா கேபிள்ஸ்

For Dependable Power Distribution Use

OMEGA CABLES

Manufacturers of:

ACSR & AA Conductors
PVC & Rubber Insulated and Polythene Insulated Cables and Flexibles to Relevant ISI Specifications

Registered Suppliers to:

DGS & D and on Rate Contracts.

THE OMEGA INSULATED CABLE CO (INDIA) LTD

ADMN: OFFICE: 1-A, NUNGAMBAKKAM HIGH ROAD, MADRAS-34.
REGD. OFFICE &. WORKS: AMBATTUR, MADRAS-58

BRANCHES AT

Bangalore, Secunderabad, Bombay & Delhi

மறைந்த மாமேதை அறிஞர் அண்ணு அவர்களின்
61-வது பிறந்த தின விழாவில்
எமது நல் வாழ்த்துக்கள்!

★

ஸ்பைடர் நிட்டிங் கம்பெனி

104, காமராஜர் சாலை
திருப்பூர்

தந்தி: "ஸ்பைடர்" தொலைபேசி: 160

டி. யு. சி. எஸ். லிமிடெட்

(நிறுவனம்: 1904)

109, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆசியாவிலேயே மிகப் பெரியதும் தலை சிறந்ததுமான உபயோகிப்போர் கூட்டுறவு சங்கம். இதில் 79,000 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

இதற்கு சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 71 கிளைகள் உள்ளன. இச்சங்கம் விலைவாசி உயர்வைத் தடுக்க முக்கிய ஸ்தாபனமாக இருக்கிறது.

"காமதேனு" கூட்டுறவு சிறப்பு அங்காடி (டி. யு. சி. எஸ். கிளை) நகருக்கொரு அணியாக விளங்குகிறது, இது குடும்பங்களுக்குத் தேவையான சாமான்கள் நல்ல சரக்குகளாகவும் நியாய விலையிலும் ஒரே இடத்தில் வாங்க உதவுகிறது.

எங்களுடைய கிளைகளுக்கோ, "காமதேனு" கூட்டுறவு சிறப்பு அங்காடிக்கோ விஜயம் செய்து திருப்தியுடன் தங்கள் தேவைகளை வாங்கிக்கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்

பேரறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்!



விநியோகஸ்தர்கள்:

வட தென்ஆற்காடு, பாண்டிச்சேரி ஜில்லாக்கள்: மெஸர்ஸ் கமலா மூவீஸ், 16, கந்தவார் அக்ரஹாரம் சென்னை-2 ❀ செங்கல்பட்டு ஜில்லா: மெஸர்ஸ் ஸ்ரீ மீனாட்சி மூவீஸ், செட்டி தெரு சின்ன காஞ்சிபுரம், ❀ திருச்சி. தஞ்சாவூர் ஜில்லாக்கள் (புதுக்கோட்டை காரைக்கால் உள்பட) மெஸர்ஸ் மங்களா மூவீஸ், சென்னை-18 (சுமதி பிக்சர்ஸ், 3, அரந்தாங்கி ரோடு, புதுக்கோட்டை மூலமாக வெளியீடு)

இதர விவரங்களுக்கு

ஸ்ரீ ரேணுகா கம்பைன்ஸ், சென்னை-18.

SATHYAM

டாக்டர் சந்திரசேகரின் வாழ்த்து!

அன்புதிரு. மாறன்

புகழும், அதிகாரமும் சில மனிதர்களுக்கு கொடை போல வழங்கப்படுகின்றன. மற்றும் பலர் இடையருத கடும் உழைப்பினுல்— சலியாதமுயற்சிகளால் அவற்றை அடைகிருர்கள். சாமானிய மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதில் தொடர்ந்த அக்கறை செலுத்தி முயற்சிகள் மேற்கொண்டவர் திரு. அண்ணதுரை. இதன் மூலம் அவர் தம் நாட்டு மக்களின் இதயங்களில் இடம் பிடித்தார்.

இசை நயம்மிக்க அடுக்குச் சொற்களும், நகைச் சுவையும் கலந்த அவரது சொல்லாற்றல் மக்களை அவர்பால் கவர்ந்திழுத்தது. அவர் மக்களின் மூத்த சகோதரராக 'அண்ணு'வாக ஆனுர்.

ஒரு அரசியல் கட்சி என்ற முறையில் தி.மு. கழகத்துக்கு திரு. அண்ணுதுரை உறுதியான அடித்தளம் அமைத்துக்கொடுத்தார். தி.மு. கழகம் அரசியலில் செல்ல வேண்டிய திசையை அவர் காட்டினுர். அதன் பொருளாதார லட்சியத்தை அவர் சுட்டிக் காட்டினுர். கடந்த 1967 பொதுத்தேர்தலில் அவரது கட்சி பெற்ற வெற்றி— அவரது தலைமையின் திறத்தை உலகுக்கு உணர்த்தியது.

திரு. அண்ணுதுரையின் அரசியல் மதிநுட்பம் இரு சந்தர்ப்பங்களில் நன்கு வெளிப்பட்டது. முதலாவது அவர் தி. மு. கழகத்தைத் துவக்கியபோது.

இரண்டாவதாக அவர் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டபோது.

''நமது குறிக்கோளை அடைவதற்கான சிறந்தவழி கூட்டாட்சிக் கொள்கையை மக்களிடம் எடுத்துக்கூறி விளக்குவதுதான்'' என்று திரு. அண்ணுதுரையே கூறியுள்ளார்.

அண்ணுவுக்கு அளிக்கப்படுகிற மிகச் சிறந்த பாராட்டு அவர் நடந்து சென்ற பாதையில் செல்வதும், அவர் முடிக்காமல் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றுவதும் தான்.

எல்லாத் துறைகளிலும் அவர் பெற்றிருந்த நிபுணத்துவத்தையும் திரு. அண்ணுதுரை அவர்களின் வாழ்வின் பல்வேறு கோணங்களையும் இந்த மலர் வெளிக்கொணரும் என்று நான் நம்புகிறேன்.

தங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

எஸ். சந்திரசேகர்

(மத்திய சுகாதார அமைச்சர்)

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அறிஞர் அண்ணு அவர்கள் பெரியார் அவர்களோடு மாயவரம் சென்றிருந்த போது எடுத்த படம்

மக்களின் உள்ளக் கிடக்கையை உணர்ந்தவர்!

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில்

பெரு மதிப்புக்கும், மாணபுக்குமுரிய பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக 'முரசொலி' ஆண்டுதோறும் கருவூலமான மலரை வெளியிடும் நல்வழக்கத்தைத் தொடர்ந்து இவ்வாண்டும் அண்ணு அவர்களது 61—வது பிறந்த நாளையொட்டி அதிக சிறப்புடன் மலர் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். அப்புனிதரைப் பற்றிய மலரும் புனிதமானதே.

தொன்மையும் அத்துடன் வலிமையும், முவப்ம் அழகும் பொருந்திய தமிழ் மொழிக்குச் சிறபுப்ள பெருக்கும் வலிமை மிகுதியும் சேர்த்தவர் அண்ணு அண்ணு அவர்கள்.

வாழ்வு முழுவதிலும் எளிக்மயும் அத்துடன் உள்ளத்தில் உன்னத எண்ணங்களும், இனிமை நிறைந்த குணங்களும் படைத்தவர் அண்ணு அவர்கள்

ஆழமும் விரிவுங்கொக்ட தம் அறிவினுலும் ஆராய்ச்சியினுலும் உண்மையெனக் கண்டதற்கு முதலிடமும் சிறப்பிடமும் கொடுத்த உயர் பண்புடையோர் உயர் திரு அண்ணு அவர்கள்.

மக்களின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து அவர்களின் வாழ்வு வளம்பெற அரும்பணி செய்து, அவர்களது மாருத அன்பு ஆதரவிலே ஊறித்திளைத்தவர் அருமை அண்ணு அவர்கள்.

தேசம் முழுவதும் பரவித் தன்னை வெல்ல முடியாதென்று அறைகூவி நின்ற காட்சியை வெல்லும்படி மக்களை நடத்தி தம் கொடியை இம்மாநிலத்தில் பெருமிதத்துடன் நிலை நாட்டிய அருந்திறன் படைத்தவர் அண்ணு அவர்கள்.

தோழர்களின் வலுக்கட்டாயத்தின் காரணமாக ஆட்சித் தலைமையை ஏற்றுக்கொண்ட அன்றே பழம் ஆட்சியாளர்களும் மதிக்கும் வண்ணம் ஆட்சியை ஆரம்பித்து நடாத்திய மங்காத பெருமை கொண்டவர் பெருமதிப்பிற்குரிய அண்ணு அவர்கள்.

நம் நாட்டவரேயன்றிப் பிற நாட்டவரும் மதித்து மரியாதை செய்யப்பெற்ற அருந்தலைவர் அண்ணு அவர்கள்.

அவ்வரும் பெரும் அண்ணு அவர்களதுஇனிய நினைவு சரித்திரத்திலும், மக்கள் மனதிலும் எப்பொழுதும் பொலிவுடன் நிலைத்திருக்கும்.

(மக்களவை இரங்கலுரையில்)



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக சென்னை 2 தினமணி அச்சகத்தில் ஆசிரியர் மாறனால் 4-128 மவுண்டு ரோடு சென்னையிலிருந்து வெளியிடப்படுகிறது

இந்தத் தமிழ் மண்ணின் தலைவனுக்கு டெல்லி நாடாளுமன்றத்தில் இரங்கற் கூட்டம் 17-2-69-ல் நடைபெற்றது. சர்வகட்சித் தலைவர்கள். ஆற்றிய இரங்கலுரைகள்......

தேச ஒற்றுமையை உணர்ந்தவர்!

திரு. பிரகாஷ் வீர்சாஸ்திரி சுயேச்சை உறுப்பினராக நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் 1957 லிருந்து தொடர்ந்து மூன்றாவது முறையாக நாடாளு மன்ற உறுப்பினராக இருக்கிறார். இப்போது பாரதிய கிரந்தி தளக் (பி. கே. டி.) கட்சியின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கிறார். இவர் பழுத்த இந்தி ஆதரவாளர் என்பது தெரிந்ததே.

காலஞ்சென்ற திரு. அண்ணாதுரையுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. ஆனால் தொலைவில் இருந்தே அவருடைய அரும்பெருங் குணங்களை நோக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அவருடைய குணங்கள் எனக்கு வழிகாட்டியாக அமைந்தன.

திரு அண்ணாதுரை ஒரு சீர்திருத்த வாதியாகத் தோன்றினார். ஆனால் சிறந்த அரசியல்வாதியாக அவர் மறைந்தார். அரசியலில், ஈடுபட்டிருந்த போதிலும் சமூக சீர்திருத்தத்தை அவர் ஒருபோதும் புறக்கணித்து விடவில்லை. சாதி, சமயம் ஆகியவற்றால் குறுகிய எல்லைக்குள் கட்டுண்டிருந்த நம் நாடு அவற்றிலிருந்து விடுபட்டு உயர்நிலை எய்த அவர் தம் வாழ்நாள் முழுதும் போராடினார். இது காந்தி நூற்றாண்டாகும்.

தற்போது மது விலக்கு நீடிப்பதென்பது பெரிய பிரச்னையாக உள்ளது. விடுதலை பெற்ற இந்தியாவில் நாம் எந்தெந்த செயல்களைச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டுள்ளோமோ அவைகளை நிறைவேற்றுவது நம் கடமையாகும். ஆகையால் மது விலக்கையும் நீடிக்கச்செய்ய வேண்டும் இந்தகைய கருத்து கொண்டிருந்தவர் திரு. அண்ணாதுரை.

மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்நடத்தவேண்டும்என்று எண்ணிய முதலமைச்சர்களுள் அவர் ஒருவர். பாகிஸ்தான் போர் தொடுத்த காலத்தில் திரு. லால்பகதூர் சாஸ்திரியிடம் அவர் கூறிய சொற்கள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. 'எனக்கும் உங்களுக்கு மிடையில் அரசியல் கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. ஆனால் அந்நியன் ஒருவன் நம் நாட்டை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் போது, நாடும், நாட்டின் ஒற்றுமையும்தான் முக்கியம். கன்னியாக்குமரியிலிருந்து காஷ்மீர்வரை விரிந்து பரந்துள்ள இந்நாடு ஒன்றே. ஆகையால் நீங்கள் எதற்கும் அஞ்சாமல் பகைவரை எதிர்த்து போராடும்படி, கேட்டுக் கொள்கிறேன்,'' இக் கூற்று திரு. அண்ணாதுரைக்கு இந்திய நாட்டின் மீதுள்ள ஆழ்ந்த பற்றை அறிவிக்கிறது. அண்ணாரின் மறைவு குறித்து நான் மிகவும் துயருறுகிறேன்.

அண்ணாவுக்கு நாடாளுமன்றத்தில் இரங்கலுரை தெரிவித்த சர்வக்கட்சித் தலைவர்கள்

சஞ்சீவ ரெட்டி
— முன்னாள் அவைத் தலைவர்

அடல் பிகாரி வாஜ்பாயி
— (இந்தியக் கம்யூ.)

ஹிரேன் முகர்ஜி
— (ஜனசங்கம்)

எஸ். எம். ஜோஷி
— (ச. சோஸலிஸ்ட்)

பி. ராமமூர்த்தி
—(மார்க்கிஸ்ட்)

பிராங் அந்தோனி
— ஆங்கிலோ — இந்திய சமூகத் தலைவர்

எஸ். என். துவிவேதி
— பி. சோஸலிஸ்ட்

பிரகாஷ் வீர் சாஸ்திரி
—பாரதி கிரந்தி தளம்

பெருந்தன்மையின் பிறப்பிடம்!

(திரு. பிராங்அந்தோனி ஆங்கிலோ—இந்திய சமூகத்தினர் சார்பில் நியமன உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பாரிஸ்டரான இவர் மும்முறை மக்களவை உறுப்பினராக இருந்து வருகிறார்)

(ஆர்)

திரு. அண்ணாதுரை அவர்களைப் பற்றி சிறப்பாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு அவரைத் தெரியும். அவர் முதலமைச்சரானபின் நான் பிரதிநிதியாக விளங்கும் எனது தொகுதியினரின் நலன்கள் குறித்து அவரிடம் பலமுறை பேச நேர்ந்திருக்கிறது. மக்களுடைய ஆதரவு அவருக்கு உச்சக் கட்டத்தில் இருந்த போது, அவர் அரசு கட்டில் ஏறினார். பதவியேற்றதும் அவரைக் கண்டேன். பதவியால் பாதிக்கப்படாமல்—பதவியால் முற்றுமாக மூழ்கிவிடாமல் அவர் விளங்கியதைக் கண்டேன்.

அவருடைய இயல்பான பெருந்தன்மைக்கு உதாரணம் ஒன்றை நான் கூறுவேன். தமிழகச் சட்டமன்றத்தில் எனது ஆங்கிலோ இந்திய சமூகத்திற்கு ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டியிருந்தது. எனது சமூகத்துக்கு உண்மையான பிரதிநிதியாக விளங்கக் கூடிய ஒருவரின் பெயரை நான் கூறினேன். துரதிர்ஷ்டவசமாக நான் சொன்ன நபர்— அண்ணாவையும் அவரது கட்சியையும் எதிர்த்துப் பிரசாரம் செய்தவர். ஆனால் நான் சொன்ன நபர்— எங்கள் சமூகத்தின் பிரதிநிதியாக எவ்வாறு திகழ்கிறார் என்பதை விளக்கியதும் அறிஞர் அண்ணா உடனே அதனை ஏற்றுக்கொண்டார்.

உண்மையில் வெளிப்படையாகச் சொல்கிறேன் —மிகச் சில முதலமைச்சர்களே அவ்வளவு பெருந்தன்மையோடு நடந்து கொள்ள முடியும்.

அவர் முதலமைச்சராக இருந்த மிகக் குறுகிய காலத்தில்— தமிழருக்கான ஒரு தனி மணத்தை— அருட்கொடைபோல் வந்த புகழொளியை— அவர் பரப்பினார்.

இலக்கியத்திலும், வரலாற்றிலும், நாகரிகத்திலும் புகழ்மிக்க வரலாற்றுக்காலத்தினைப் பற்றிமக்களுக்குஅவர் அக்கறையை ஏற்படுத்தினார்.

தமிழரல்லாத மக்களும் அவரைப் போற்றினர்.

ஏழை மக்களுக்கு அவர் தந்தையைப்போல் விளங்கினார். மிக உயர்வாக மக்கள் அவரை மதித்தார்கள் என்பது மட்டுமின்றி மக்கள் அவரை உண்மையாக நேசித்தார்கள். தங்களால் நம்பத் தகுந்தவர் என்று அவரை மக்கள் கருதினார்கள்.

புதிய இந்தியா கண்டு மதித்துப் போற்றி புகழ்ந்து பாராட்டத்தக்க— பின்பற்றத்தக்க— மாதிரித் தலைவராக அவர் விளங்கினார்.

தனது கட்சியின் பிரதம சிற்பி அவர். சக்தி வாய்ந்த சொற்பொழிவாளர்— மக்களை வசீகரித்த தலைவர்— எனினும் அவர் எதையும் எதிர்நோக்கியதில்லை. சந்தைக்கடை அரசியலின் குருரங்களை அவர் வெறுத்தார்.

மக்களின் மனிதர் அவர். அன்பின் உறைவிடம்— தன்னுள் ஆன்றவிந்தடங்கிய சான்றோன். அடிப்படையான தெளிவு பெற்றவர். அரசியலில் காணக்கிடைக்காத ஒருவர். அரசியலில் இயற்கையின் கொடையாக விளங்கிய பெருந்தகைமையாளர். அண்ணா.

மக்களுக்காக வாழ்ந்தவர்!

(திரு. தென்னேட்டி விஸ்வநாதன் பழம் பெரும் காங்கிரஸ் தூண், கருத்து வேறுபாடு காரணமாகக் கட்சியிலிருந்து விலகி சுயேச்சை உறுப்பினராக நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்.) (ஆ-ர்)

காங்கிரஸ் தலைவராக இருந்து சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கிய பெரியார் ராமசாமியின் தலைமையில் பொது வாழ்வில் நுழைந்தபோதே திரு அண்ணாதுரையிடம் உயர்வானதன்மைகள் வெளிப்பட்டன. அவர் தி.மு. கழகத்தைத் தோற்றுவித்த உடன் முன்னணி அரசியல்வாதிகளில் ஒருவராக விளங்கினார். அவர் முதலமைச்சரான உடன் பேதங்களுக்கிடமில்லாததோர் நிலைக்கு உயர்ந்து விட்டார். அண்மைக்கால சகாப்தங்களில் கண்டிராத மிக உயர்ந்த ராஜதந்திரி என அவரை இந்த நாடு அடையாளம் கண்டு கொண்டது.

அவர் மக்களோடு மக்களாக விளங்கியவர். மக்களிடமிருந்து உருவாகியவர். மக்களுக்காகஉழைத்தவர்.

முதலமைச்சராக இருந்து மக்களுக்கே தொண்டாற்றினார். இவற்றால்தான் அவர் மறைந்தபோது தங்கள் தந்தையை இழந்தது போல லட்சோபலட்சம் மக்கள் இரங்கினார்கள்.

சென்னையிலிருந்து வெகு தொலைவில் உள்ள விசாகப் பட்டினத்தில் ஒரு இரங்கற் கூட்டத்திற்கு நான் தலைமை வகித்தபோது, கூட்டத்தில் இருந்த தமிழ் அன்பர்கள் அழுது புலம்பினர். எல்லோருடைய இதயங்களிலும் அவர் குடி கொண்டிருந்தார் என்பதற்கு இது ஒரு அடையாளம்.

அவர் சிறந்த எழுத்தாளர். அதைக் காட்டிலும் சிறந்த பேச்சாளர். இரண்டு மூன்று முறைகளில் அவர் பேசிய மேடையில் நான் இருந்தது. உண்டு. பல்லாயிரக்கணக்கான மக்களின் முகங்கள் அவர் பேச எழுந்ததும் நம்பிக்கை ஒளியால் மலர்ச்சியடைந்ததை நான் கண்டிருக்கிறேன். தான் சொல்ல விரும்புவதை வன்மையோடு அவர் சொல்வார். அவர் பேசும்போது யாரோ ஒருவரின் குரலைக் கேட்பதாகவே மக்களுக்குத் தோன்றாது. மக்களோடு அவர் கலந்து விடுவார். மக்கள் அவரோடு ஒன்றிப் போய் இருப்பார்கள்.

இலக்கிய நிபுணராக விளங்கி தமிழை மிகஉயர்ந்த பீடத்துக்கு அவர் இட்டுச் சென்றார் எனத் தமிழறிந்தோர் என்னிடம் கூறியிருக்கிறார்கள். விவாதங்களிலும் அவர் தனது தனி முத்திரையைப் பொறித்தார். நான் அவருக்கு எனது இதயமார்ந்த பாராட்டுதல்களைக் குவிக்கிறேன்.

சிக்கனத்தின் சிகரமான எரிபொருள்

லீக்கோ

வீட்டு உபயோகத்துக்கான எரிபொருள்களில் 'லீக்கோ' தனித்தன்மை வாய்ந்தது, புகை யற்றது.

மற்றெந்த எரிபொருளையும் விட விலையான சூட்டை நீடித்துத்தருவது. சிறிதும் சேதாரம் கிடையாது.

இன்றே 'லீக்கோ' உபயோகித்துப் பாருங்கள். எரிபொருள் சிலவு லகுவாகக் குறையும். நீங்கள் வியப்புறுவது உறுதி.

'லீக்கோ', எங்கும் எளிதாகக் கிடைக்கிறது.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி-1

லீக்கோ



தமிழர்களை முன்னின்று நடத்திய முன்னோடி

திரு. எஸ், எம். ஜோஷி எஸ். எஸ். பி. கட்சித் தலைவர்களுள் ஒருவர். முன்பு பம்பாய் மாநில சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். (ஆர்)

1932'ம் ஆண்டில் தேசத் தந்தை காந்தி அடிகளுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. காந்தியடிகளிடமிருந்து எப்படிப்பட்ட தூண்டுதல் எனக்குக் கிடைத்ததோ, அப்படிப் பட்ட தூண்டுதல் திரு. அண்ணாதுரையிடமிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் கிடைத்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் அவர் மீது கொண்டிருந்த அன்பு, தமிழ் மக்கள் அன்புடன் அவரை ''அண்ணா'' என்றழைக்கும் பண்பு, அவருடைய எளிமை ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தன.

காந்தியிடமிருந்து கிடைத்த தூண்டுதல்!

இந்தியா விடுதலை அடைந்த பிறகு தற்போதுள்ள சூழலில் இந் நாட்டை முன்னின்று நடத்திச் செல்வதற்கும், நாட்டிலுள்ள பல பிரச்னைகளைத் தீர்வு காண்பதற்கும் பல தலைவர்கள் தேவைப் படுகின்றனர். அவர்களுள் திரு. அண்ணாதுரை மிகவும் முக்கியமானவர். அரசியலில் ஏற்படும் பிரச்னைகளையும், வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளையும் நுணுக்கத்துடன் தனக்கே உரிய பாணியில் ஆராய்ந்து தீர்வு காண்பதில் அவர் வல்லவர். இவ்வளவு புகழ் அடைந்தும் அவர் காட்டிய கர்வமின்மை போற்றற்குரியது. அவருடைய தலைமை நாட்டிற்கு மிகவும் தேவைப் படும் இத் தருணத்தில் காலம் அவரை நம்மிடமிருந்து பிரித்து விட்டது ஆனால் அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை பல உள்ளன. நாடு விடுதலை அடைந்தால் மட்டும் போதாது. நாட்டிலுள்ள மக்களும் வறுமையிலிருந்து விடுதலை பெற வேண்டும். அந்த லட்சியத்தை அடைவதற்காகவே உழைத்த அண்ணாரின் மறைவு குறித்து நான் மிகவும் வருத்தமடைகிறேன்.

[நாடாளு மன்ற இரங்கலுரையில்]

❋ நடுத்தர வகுப்பினர், ஏழைகளுமல்ல, பணக்காரர்களுமல்ல, இரண்டுமில்லாதவர்கள். ஓரளவு ஏழைகளைவிட வாழ்க்கை வசதி பெற்றவர்கள் ஆனால் பணக்காரர்களல்ல, முதலாளிகளும் அல்ல, என்றாவது ஓர் நாள் பணக்காரர்களாகி விடுவோம் என்ற ஆசையுடன் இருப்பவர்கள். அதே நேரத்தில், எங்கே உள்ளதும் போய் ஏழைகளாகி விடுவோமோ என்ற அச்சத்தோடும் கூடியிருப்பவர்கள், இவர்கள் தான் இந் நாட்டில் நூற்றுக்கு அறுபது பேர், மக்கள் தொகையில் பெரும் பகுதி.

\- அண்ணா



(நாடாளுமன்ற முன்னாள் அவைத் தலைவர் சஞ்சீவி ரெட்டி தம் இரங்கலுரையில்)

அடக்கம் நிறைந்த மாமனிதர்!

1967 பொதுத் தேர்தலில் தென் சென்னை நாடாளு மன்றத் தொகுதியிலிருந்து நான்காவது நாடாளு மன்றத்திற்கு திரு அண்ணாதுரை தேர்ந்தெடுக்கப் பட்டார். எனினும், தமிழ் நாட்டின் முதலமைச்சராக அவர் பதவியேற்றதும், அவர் தமிழ் நாட்டின் சட்ட மன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பாராளு மன்றத்தில் அவரது இடம் காலியாகியது. அவர் மிகுந்த மதிப்புப் பெற்ற தலை சிறந்த மக்கள் தலைவராவார். அவரது இறப்பிற்குச் சில நாட்களுக்கு முன்பு ஜனவரி, 17'ம் தேதி அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது இல்லத்தில் அவருடன் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

சில நாட்களில் அவரை இழந்து விடுவோம் என்று நான் நினைக்கவே இல்லை: கனவு கூடக் கண்டதில்லை. இவ்வாறு நிகழுமென்று. அவர் மிகுந்த மகிழ்வுடன் பல செய்திகளைப் பற்றிப் பேசினார். அவரது வீட்டை மாற்றிக் கொள்ளுமாறு அவருக்குத் தெரிவித்தேன். நாடு குறித்த பிரச்னைகளையும் நாங்கள் கலந்துரையாடினோம்.

அவர் நோய்வாய்ப் பட்டிருக்கிறார் என்று கேள்வியுற்றதும் நான் நம்பவேயில்லை; பின்னர் அவர், பிப்ரவரி 3'ம் நாள் இறந்து விட்டார்.

தமிழ்நாட்டில் அவர் மாபெருந் தலைவர்; மக்களால் மதிக்கப் பட்டவர். புன்சிரிப்புடன் காணப்படும் அன்பும் அடக்கமும் நிறைந்த மாமனிதர்; அத்தகைய தலைவரை நாம் இழந்து விட்டோம். திரு. அண்ணாதுரை போன்ற சிறந்த தலைவரின் திடீர் இறப்புச் செய்தி கேட்டு நான் உண்மையில் வருந்தினேன்.

இதயங்களை வென்றவர்!

திரு அண்ணாதுரை அவர்களின் மறைவு எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது; நமது நாட்டின் அரசியல்வாதிகளில் தலைசிறந்த பெருமகனாக அவர் திகழ்ந்தார் என்று சொல்லுவேன்; நமது நாட்டின் அரசியல், சிறுமைத் தன்மையுடையதாக இருப்பதாக நான் உணர்கிறேன்; ஆனால் சிலர்தான் அத்தகைய சிறுமை மனப்பான்மையிலிருந்து அரசியலில் உயர்த்தியுள்ளனர்; நமது நாட்டின்பொதுவாழ்க்கைத் துறை மேம்பட்ட நிலையில் காக்கப்படும் வகையில் தொண்டாற்றி அதில்வெற்றி கண்ட ஒரு சிலரில் திரு அண்ணாதுரை சிறப்பான இடம் பெறுகிறார் என்று கருதுகிறேன்.

அவர் சமுதாயத்தில் இன்றியமையாத மனிதர்; பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர்; எழுத்தாளர்களுக்கே உரித்தான நுட்பமான தன்மை படைத்தவர்; பத்திரிகையாளராகச் சிலகாலம் இருந்தார்; உரிமையற்ற நாட்டில் எந்த நாட்டிலும் ஓர் எழுத்தாளர் பத்திரிகைத் துறைக்குத்தான் ஈர்க்கப்படுகிறார். மூட நம்பிக்கையும் பழைமையும் நிறைந்ததாகக் கருதப்பட்ட தென்பகுதியில் பெரியாரால் பகுத்தறிவு இயக்கம் தொடங்கப்பட்டு தலைசிறந்த திரு அண்ணாதுரையால் மேற்கொண்டு நடத்தப்பட்டது எவ்வாறு என்று சில வேளைகளில் நான் வியப்படைந்திருக்கிறேன்.

பல்லாயிரக்கணக்கானமக்களின் அன்பைபெற்றுத்திகழ்வதென்பது கிடைத்தற்கரிய பேறாகும்; திரு அண்ணாதுரை மறைவெய்தியதும் எவ்வாறு மக்கள் இதயக் கண்ணீர் வடித்துத் துக்கித்தனர் என்பதை நாம் அறிவோம். அவர் அன்பு செலுத்திய மக்களின் இதயம் நின்று விட்டதோ என்று எண்ணும்படி இருந்தது.

திரு அண்ணாதுரை எத்தகைய கோட்பாடுகளை வகுத்து அவற்றை அடைய முயன்றாரோ அவற்றை உள்ளடக்கிய இயக்கத்தின்அடிப்படை நோக்கம் என்ன என்பதை நாம் அறிந்து தெளிவுறுவது நன்றெனக் கருதுகிறேன்.

மூட நம்பிக்கையும் சாதி வெறியும் தீண்டாமை போன்ற வெறுக்கத் தக்க சமுதாய நடைமுறையும், திரு அண்ணாதுரை தலைமையில் மேலோங்கிய தன்மான இயக்கத்தை மக்கள் பின்பற்றுவதன் மூலம் சமுதாயத்தினின்று தூக்கியெறியப்பட்டதென்றால் அத்தகைய முறைமையை இந்திய நாடுமுழுவதிலும் பரப்புவதற்கு என்ன வழியென்று நாம் ஆராய வேண்டும்; இதன் மூலம் மக்களிடையே நல்ல வகையான மனமாற்றமும் பேராசிரியர் ரங்கா கூறியதைப் போன்று சமுதாயப் புரட்சியும் ஏற்படுத்த இயலும்.

அடிப்படை நோக்கம்...

எங்களிடையே பல சமயங்களில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன; ஆனால் திரு அண்ணாதுரை எப்போதும் எவ்வாறு நாட்டுப் பற்றுள்ள தன்மையில் சிக்கல்களை அணுகினார் என்பதை நாங்கள் அறிவோம் .இந்திய நாகரிகத்துடன் ஒப்பிடுகையில் தமிழர்களின் தனித்த மரபுச் சிறப்பைத் தமிழர்களுக்கு உணர்த்தி எழுச்சி கொள்ளச் செய்வது அவசியமென்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர் கருதினார்.

இந்திய அரசியலின் ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டுமெனில், இந்தியாவினின்று பிரிவினை கோரும் உரிமைதான் சிறந்த வழியென்று குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் அவர் எவ்வாறு குரல் கொடுத்தார் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் ,இந்திய மக்களுடன் ஒருமித்து இணைந்து வாழ்வதற்கு உருவாகிய நிலைமைக்கேற்ப உயர்ந்து அரசியல் மேதையென்னும்வகையில் தமிழ் மக்களை எவ்வாறு அவரால் தட்டி யெழுப்ப முடிந்ததென்பதையும் நாம் கண்டோம்; இது வரலாற்றுச் சிறப்புள்ள நிகழ்ச்சியாகும்.

1940 ஆம்ஆண்டு பம்பாயில் ஜின்னாவைச்சந்திக்கப் பெரியார்சென்றபோது எடுத்தப்படம். இடமிருந்து வலம்— கே. எம். பாலசுப்பிரமணியம், டி. ஏ, வி. நாதன், பெரியார், [சண்டே அப்ஸர்வர்] பி. பாலசுப்பிரமணியம் அறிஞர் அண்ணா முதலியோர்.

திரு. ஹிரேந்திரநாத்முகர்ஜி நாடாளுமன்ற வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித்துணைத் தலைவர். ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்தில் பயின்றவர். பல கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியராக இருந்தவர். 1952லிருந்து தொடர்ந்து இப்போது நான்காவது முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.

இதயத் தூய்மையுள்ள தொடர்பு!

திரு அண்ணாதுரையின் கோட்பாடுகளில் சில நமக்கு உடன்பாடு இல்லையெனினும் நாம் அவரைப் பெருமளவு புகழ்வதற்கு இதுவே காரணமாகும். அவர் தமிழ் மக்களிடம் கொண்டிருந்த தொடர்பு அப்பழுக்கற்ற உண்மையானதென்பதையும் இதயத்தூய்மையுள்ளதென்பதையும் நாம் அறிவோம்; இத் தன்மைதான் அரசியலில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே, மிகுந்த வேறுபட்ட வகையைச் சேர்ந்த அரசியல் வாதியாக இருந்தவர் திரு அண்ணாதுரை அவர்கள். சாதாரணமாகக் குறிப்பிடும் அரசியல் வாதியல்லர் அவர். அவர் மக்கள் தலைவர்; மக்களின் இதயத்தில் அன்பால் ஆட்சி செய்யப்படும் உன்னதத் தலைவர்.

அவர் சொல்லாட்சியில் வல்லவர்; ஆனால் வார்த்தை ஜாலம் செய்பவர் அல்லர். அவர் தமிழ் மக்களின் இதயங்களை வென்றவர்; பொது வாழ்வில் இதற்கும் மேலாக ஒருவர்அடையும் சாதனை வேறு இருக்க முடியாது. அவர் அகால மறைவு எய்தியதைக் கேட்டு நாம் திகைத்தோம்; பெருந்திறன் மிக்க மாமனிதரை இந்தியா இழந்து விட்டது.

(நாடாளுமன்ற இரங்கலுரையில்)

திரு. அதல்பிகாரி வாஜ்பாய் பாரதிய ஜனசங்கத் தலைவராவார் அறிஞர் அண்ணா அவர்களோடு இவர் மாநிலங்கள் அவையில் உறுப்பினராக இருந்தார்; இப்போது இவர் நாடாளுமன்ற உறுப்பினர். நாடாளுமன்ற ஜனசங்கக் குழுவின் தலைவருமாவார். (ஆ-ர்)

வேற்றுமையில் ஒற்றுமை காண விழைந்தவர்

அண்ணாதுரை பாரதத் தாயின் அருமை மைந்தர். பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழ் மொழியின் காவலராய், ஒளி வீசும் விளக்காய் அவர் திகழ்ந்தார்.

நமது வாழ்க்கை பல வேற்றுமைகள் நிறைந்தது. வேற்றுமைகள் மிகுந்த இவ் வாழ்க்கையிலும் அவர் ஒற்றுமையைக் கண்டார். (Unity in diversity) நமது நாடு அந்நியர்களின் படையெடுப்பிற்கு உள்ளான போதும், எல்லையில் நெருக்கடி நிலைமை நிலவிய போதும் அவர், மொழி, இனம் முதலியவைகளுக்கு அப்பாற்பட்டு தேச நலனையே பெரிதாகக் கருதினார். பாகிஸ்தான் இந்தியாவின் மீது போர் தொடுத்தக் காலத்தில், காலஞ்சென்ற மதிப்பிற்குரிய திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தில் திரு. அண்ணாதுரை ஆற்றிய உத்வேகம் நிரம்பிய சொற்பொழிவு இன்னும் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டுப் பற்று அவருடைய ஒவ்வோர் அணுவிலும் நிறைந்திருந்தது. நமது நாட்டின் பண்டைய கலாச்சாரத்தின் மீது அவருக்குள்ள பற்றும் மதிப்பும் விவரிக்க இயலாதது. அவர் ஒரு இலக்கிய கர்த்தா, எழுத்தாளர், பத்திரிகையாளர். லட்சக் கணக்கான மக்களை மந்திரத்தில் கட்டுண்டது போல் வைத்திருக்கும் திறமை அவரிடம் இருந்தது.

அரசியல் வானில் அவர் எவ்வாறு திடீரென்று தோன்றினாரோ அவ்வாறே திடீரென்றும் மறைந்துவிட்டார். புகழின் உச்ச நிலையை அடைந்த நேரத்தில் அவர் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டார். அவருடைய மறைவு நாட்டிற்கு பேரிழப்பாகும். இக் குறை சமீப காலத்திற்குள் பூர்த்தியாகும் வாய்ப்பு தென்படவில்லை. ஆனால் நாட்டின் மீது அவருக்குள்ள பற்று, பரந்த நோக்கம், வேற்றுமையில் ஒற்றுமை, தாழ்த்தப்பட்ட, கடைநிலையில் உள்ள மக்களிடம் அவர் காட்டிய பரிவு முதலிய அவருடைய அரும் பெருங் குணங்கள் என்றென்றும் நமக்கு வழிக் காட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மறைந்த தலைவருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

[நாடாளுமன்ற இரங்கலுரையில்]

காந்தியாருக்குப் பிறகு....

திரு அண்ணாதுரையை நான் நன்கறிவேன். திரு அண்ணாதுரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டபின் நியூயார்க் மருத்துவமனையில் அவரைச் சந்தித்தேன் — அவரை எதிர்நோக்கியிருந்தகெட்டகாலம் முடிந்து விட்டதாகக் கருதினேன். அவரது உடல்நலம் பற்றி விசாரிக்கச் சென்றேன்; அதுபற்றி அவரிடம் கேட்பதற்கு முன்னர் அவர் என் நலம் பற்றி வினவினார். அவர் பேசக் கூடாதென்று மருத்துவர்கள் தடை செய்திருந்தும் அந்த நேரத்தில் கூட அவர் இவ்வாறு கேட்டார். பேச்சைத் தொடர வேண்டாமென்றும் இதனால் அவருக்குச் சோர்வு தட்டுமென்றும் என் நண்பர்கள் கேட்டுக் கொண்டனர். அதே நோய் மீண்டும் வந்து தொல்லைப் படுத்துவதாகக் கேள்விப் பட்டேன்; இத்தொல்லையும் கழிந்து விடுமென நினைத்தேன். ஆனால் அவ்வாறு முடியவில்லை; அவர் திடீரென்று மறைவெய்திய செய்தி கேட்டுத் திகைப்பில் ஆழ்ந்துள்ளோம்.

அவர் மக்கள் தலைவராவார்; மகாத்மா காந்தியடிகளுக்குப் பிறகு மக்களின் இதயத் துடிப்பை உண்மையில் உணர்ந்த தலைவர் இவரைத் தவிர வேறொருவர் இந்திய நாட்டில் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர், தமிழ் நாட்டைத் தன் செயற்களமாகத் தேர்ந்தெடுத்தார்; அவர், தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்ந்தார்;

திரு சுரேந்திரநாத்துவிவேதி நாடாளுமன்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவராவார். 1952-56-ல் மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்தார். அதற்குப் பிறகு தொடர்ந்து மூன்றுவதுமுறையாக மக்கள் சபை உறுப்பினராக இருக்கிறார். இவர் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்தவர்.

(ஆ-ர்)

தமிழ் நாகரிகத்தை உருவாக்க முனைந்தார் என்று கூடச் சொல்லுவேன். இதற்கும் மேலாக, தமிழ் மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் பிரதிபலிக்கும் பிரதிநிதியாக அவர் விளங்கினார். இதனால்தான் அவர் மறைவு கேட்டதும் மக்கள் துக்கத்தில் ஆழ்ந்து துடித்தனர்.

எவரையும் மிஞ்சிய நாட்டுப்பற்று

அவர் நாட்டுப் பற்று மிக்க தலைவர். பாகிஸ்தான் படையெடுப்பு முடிந்த பின்னர் மறைந்த தலைமை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி கூட்டிய மாநாட்டில் நாங்கள் சந்தித்தோம்; அண்ணாதுரையின் நிலை எந்த வகையில் அமையுமென்று நாங்கள் கவலையுடன் காத்திருந்தோம். ஆனால் அச்சமயத்தில் அவர் ஆற்றிய உரை, இந் நாட்டிலுள்ள நாட்டுப் பற்று மிக்க எவரையும் விட மிஞ்சி நின்றது என்றே கூறுவேன்.

நாட்டின் இப்போதைய அரசியல் சூழ்நிலையில் பிரிவினை உணர்வும் குறுகிய மனப்பாங்கும் பிறவும் தலைதூக்கியுள்ள வேளையில், இந் நாட்டில் வேற்றுமை வளராமல் உண்மையான ஒற்றுமை உணர்வு ஓங்குவதற்கு அண்ணாதுரை முக்கியப் பணியாற்றுவார் என்று நாம்பெரிதும் எதிர்பார்த்திருந்தோம். அவரது இழப்பு, தமிழகத்துக்கு மட்டுமின்றி இந்திய நாடு முழுமைக்குமே பேரிழப்பாகும்.

மக்களின் இதயத் துடிப்பை உணர்ந்த மாமேதை!

விஞ்ஞானத்தை முதலாளித்துவம் தன் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிரா விட்டால் எப்போதோ உலகம் இன்பபுரியாகி விட்டிருக்கும்.

\- அண்ணா



ஒடுக்கப் பட்டோரின் தூதல்

இடர்பட்டுத் துடிக்கும் ஏழையரைப்பற்றிச் சிந்தித்த ஏந்தல்!

திரு. அண்ணாதுரை அவர்களைப் பாராட்டிச் சிலசொல்வது அவசியமென்று நான் கருதவில்லை; திரு. அண்ணாதுரையைத் தங்கள் வாழ்வில் நேரே கண்டிராத பல்லாயிரம் தமிழ் மக்கள் இதயம் வெம்பி அழுது பாராட்டுத் தெரிவித்து விட்டதை ஒப்பிடுகையில் வார்த்தைகளால் கூறப்படும் பாராட்டிற்கு என்ன மதிப்பிருக்கப் போகிறது? அவரது இறப்புச் செய்தியைக் கேட்டவுடனும் மெரினா கடற்கரைக்கு சவ ஊர்வலம் சென்று கொண்டிருந்த போதும் கடலெனத் திரண்ட மக்கள், ஏழை எளியவர்கள், பாட்டாளி மக்கள், சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த ஊர்வலத்தை அமைதியுடன் பார்த்துக் கண்ணீர் மல்கிக் கதறி அழுதனர். அவர்களைக் கதறி அழச் செய்த சக்தி எது? திரு அண்ணாதுரை எழுச்சி மிக்க எழுத்தாளர் என்பதாலா? அல்லது திரு அண்ணாதுரை தலைசிறந்த சொற்பொழிவாளர் என்பதாலா? ஆம்; அவர் எழுச்சி மிக்க எழுத்தாளரும், தலைசிறந்த பேச்சாளரும் ஆவார். ஆனால், இவற்றிற்கும் மேலாக அவர் என்ன பேசினார் எ[illegible]

பி. ராமமூர்த்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவர். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துவருபவர்:

அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த போது இவரும் அந்த அவை உறுப்பினராக இருந்தார்.

(ஆ—ர்)

நோக்கத்துக்காக எழுதினார் என்பதேதமிழகத்தின் பல்லாயிரக்கணக்கான மக்களை அவர்பால் இணைத்தது. சமுதாயத்தில் தாழ்ந்து உழலும் மக்களை உயர்த்துவதற்காக, சாதாரண மக்களைத் தட்டியெழுப்புவதற்காக, சமூகத்தில், சாதி முறையில் தாழ்த்தப்பட்ட மக்களை ஊக்குவிப்பதற்காக, தற்போதைய பொருளாதார அமைப்பில் இடர்ப்பட்டு வருந்தும் மக்களுக்கு வழியமைத்துத் தருவதற்காக அவர் எழுதினார்; இத்தகைய தடைகளும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் கடவுளால் உண்டாக்கப் பட்டதன்று. மனிதனால் உருவாக்கப்பட்டதாகுமென அவர் மக்களைச் சிந்திக்கவைத்தார். மக்கள் ஒன்று சேர்ந்து அவற்றை எதிர்த்துப்போராடினால் இந்த உலகிலேயே சிறப்பான வாழ்க்கை வாழ முடியுமென்று அவர் மக்களைத் தட்டியெழுப்பி உணரச் செய்தார். இந்த நம்பிக்கையைத்தான் அவர் மக்களிடம் உருவாக்கினார்;; மக்கள் அவர் வழியைப்பின்பற்றத் தொடங்கினர்.

(நாடாளுமன்ற இரங்கலுரையில்)

அண்ணா சில உயரிய சிந்தனைகள்

அண்ணாவுக்குப்பேராசிரியராய் இருந்த

என். ஜி. ரங்கா

புகழ்பெற்ற சென்னை பச்சையப்பன் கல்லூரியில் அண்ணா, பி.ஏ., எம்.ஏ., வகுப்புகளில் படித்தார். அப்போது, வரலாறு, அரசியல் பொருளாதாரம் ஆகிய பாடங்களை அவருக்குக் கற்பிக்கும் பேராசிரியராகநான் இருந்தேன். எங்கள் இருவருக்கும் அது மகிழ்வூட்டும் அனுபவமாக அமைந்தது. அவர், தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்கு வழிகோலிய அறிஞராகவும் வருந்தி உழைத்து வாழும் பல்லாயிர மக்களின் ஒரு பெருந் தலைவராகவும் உயர்ந்தார்; நமது சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட, நீண்ட நெடுங் காலமாகச் சமூகத்தின் அடித்தளத்தில் உழன்று தவிக்கும் ஏழை, எளிய மக்களின் ஒப்பற்ற தலைவராக வெற்றிவாகை சூடி, ஆட்சிப் பொறுப்பேற்ற போது 1967'ல் அவரை நான் பாராட்டினேன்.

அவர் எப்போதும் அடக்கமாகவும், புன்முறுவல் காட்டியும் ஊக்கமுடன் படிக்கும் மாணவராக இருப்பார். உழவர்களும் உழைக்கும் வர்க்கத்தினரும் நமது நாட்டின் சமுதாய மேம்பாட்டிற்கு எவ்வகையில் சிறப்பான சேவை செய்துள்ளனர் என்று எப்போதேனும் நான் சொல்ல நேரும்போது, அவரது கண்களில் ஒளி பரவும்; உடனே அவரது முகம் பளிச்சிடும்; பிறர், அவரது இந்த மாற்றத்தை நன்கறிய முடியும்.

பிரபுக்களின் சூழ்ச்சி வலையில் சிக்கித் தவறாக வழி நடத்தப்பட்ட பொதுமக்கள், அதே பொதுமக்களின் சார்பாக ஆட்சி சபைக்குச் சென்ற உன்னத ரோம் நாட்டு கிராசிஸ்சகோதரர்கள் இருவரை— உழைப்பாளர்களுக்கு அவர்கள் எத்தகைய சிறந்த சேவை செய்துள்ளனர் என்பதை முற்றும் மறந்தவர்களாய் அவர்களை எவ்வாறு கொன்றனர் என்பதை நான் விளக்கினேன்; பின்னர்ஒருநாள் திருவல்லிக்கேணி கடற்கரையில் பல மாணவர்களுடன் நான் இருந்தபோது இது பற்றி அண்ணா தனது கருத்தைக் கூறினார். சைவச் சான்றோர்கள் பலர் தமிழ் நாட்டிலும் இதுபோன்ற கொடுமையான முறைக்கு ஆளாயினர் என்பதை அண்ணா குறிப்பிட்டார்.

தேசிய இளைஞர் படைக்கு எதிராகப் பிராமணர் அல்லாதார்—இளைஞர் இயக்கம் ஒன்றை அமைக்கச் சில நீதிக் கட்சியினர் முயன்று வந்ததை எதிர்த்து அப்போது வெளிவந்த ஆங்கில நாளிதழான 'சுயராஜ்யா' வில் கட்டுரைகள் எழுதி வந்தேன். அண்ணாவும் அவரது நண்பர்களும் ஏன் அவ்வாறு செய்கிறீர் என்று வினவினர். தேசிய இளைஞர் அமைப்பு அளவில் எல்லோருடனும் போட்டியிட்டும் ஒத்துழைத்தும் போட்டியில் வெற்றிபெற்றுத் தங்கள் திறமையை நிலைநாட்டுவது தான் பிராமணர் அல்லாத இளைஞர்களுக்குச் சிறப்பாக அமையுமென்று நான் அவர்களுக்கு அறிவுரை நல்கினேன். தன்னம்பிக்கை மிக்க இந்தக் கருத்தைப் பாராட்டியவர்களில் அண்ணா முதல் வரிசையில் இருந்தார்.

நமது இதிகாசங்களைநன்கு பகுத்தறிந்து ஆராயும் முறையைஅண்ணா பாராட்டினார். ஒரு நாள் மாலை அவர் நான் அப்போது வசித்த ராயப்பேட்டை இல்லத்திற்கு வந்து, தமிழ் நாட்டில் பெரும் செல்வாக்குப் பெற்றுவந்த தன்மான இயக்கத்தைப் பற்றி நான் என்ன கருதுகிறேன் என்று கேட்டார். புகழ் பெற்ற ஆந்திரச் சமூக சீர்திருத்தவாதியான மறைந்த ராமசுவாமி சவுத்ரியைப் பற்றி அவரிடம் கூறினேன்; திராவிட— ஆரியச் சமூக, அரசியல் முரண்பாடுகள் கோணத்தில் அவர் எவ்வாறு இந்து இதிகாசங்களை ஆராய்ந்தார் என்பதையும் ஆந்திராவிலுள்ள எங்களில் பலர், 1917 முதல் எங்களது தன்மான இயக்கத்தையும், இளைஞர் இயக்கத்தையும் எவ்வாறு நடத்தி வந்தோம்என்பதையும் அண்ணாவிடம் விளக்கினேன். அந்த இயக்கம் பற்றி ஆராய்வதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவ்வப்போது அவர், அவரது மாணவத் தோழர்களுடன் என்னிடம் வருவார்; திருவல்லிக்கேணி கடற்கரையில் பொதுவாக ஞாயிற்றுக் கிழமை மாலை நேரங்களில் எங்கள் பேச்சைத் தொடருவோம்; சூத்திரர்கள் எனப்பட்டவர் எவ்வாறு பௌத்த சமயத்தினராகவோ சமண சமயத்தினராகவோ இருந்தனர் என்பது குறித்தும், பின்னர் எவ்வாறு சைவர்களாக இருந்தனர் என்பது குறித்தும் விவாதித்தோம.

அரசர்களின் வற்புறுத்தல் காரணமாகவும அவர்களின் பண்டிதர்கள் தூண்டுதல் காரணமாகவும் அவர்கள் இந்து சமயத்தினரான பின்னர் இந்து சமூக அமைப்பில் அவர்கள் புரோகிதர்களால் எவ்வாறு நான்காவது சாதியினராக மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டனர் என்பது பற்றியும் நாங்கள் விவாதித்தோம் அப்போது அண்ணா இளைஞர்; ஒருமுறை உணர்ச்சி பொங்கும் குரலில் கூறினார்: ''ஐயா, இந்தக் குறைபாடுகளை எதிர்த்து நாம் போராட வேண்டும்,'' என்றார். தன்மான இயக்கம் இதற்கு விடையாக அன்றோ அமைந்தது?

மற்றொரு சமயத்தில், ஆந்திராவில் உள்ள நாங்கள், படிக்கவும், வேதங்களையும் உபஷநித்துக்களையும் ஓதவும் பெண்டிருக்கும் சூத்திரர்களுக்கும் பஞ்சமாக்களுக்கும் (இப்போது அரிசனங்கள் எனப்படுபவர்) உள்ள உரிமை குறித்து எவ்வாறு பிரச்சாரம் செய்து வந்தோம் என்பது பற்றியும் அவர்களிடம் கூறினேன்; பிராமணர் அல்லாத இளைஞர்களுக்குக் கற்பிக்க எங்கள் தலைவர்களில் சிலர் ஏற்கனவே சம்ஸ்கிருத பள்ளிகளைத் திறந்துள்ளனர் என்னும் சீர்திருத்தக் கருத்தையும் குறிப்பிட்டேன். இத்தகைய புரட்சி மனப்பான்மை பாபகாரியமன்று என்பதை எவ்வாறு நமது மக்களிடம் எடுத்துக்கூறி ஒப்புக்கொள்ளச் செய்ய முடியும் என்று அண்ணா கேட்டார். நமது சாஸ்திரங்கள் இத்தகைய சீர்திருத்தங்களை அனுமதிக்கின்றன என்று மக்களுக்கு எடுத்துச்சொல்ல ஆந்திரத்தில் பாரிஸ்டரான ராமசுவாமி சவுத்ரியும் வேதத்தில் திளைத்த முனிவரான சரஸ்வதிசுவாமிகளும் உள்ளனர் என்று கூறினேன்

> **நான் பச்சையப்பன் கல்லூரியில் பயின்ற போது பேராசிரியர் ரங்கா அவர்கள் கிராமப் பொருளாதாரத் துறைப் பேராசிரியராய் இருந்தார். அவர் கல்லூரியில் ஆற்றிய உரைகள் கிராமப்புறத்தின்முக்கியத்துவத்தை எங்களுக்கு உணர்த்தின.**
>
> **- அறிஞர் அண்ணா**

ஒருநாள் சில மாணவர்களுடன் அண்ணா என்னிடம் வந்து, காஞ்சிபுரத்தில் சில நாட்களில் நடைபெறவிருக்கும் தன்மான இயக்க மாநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டு நான் அம் மாநாட்டுக்கு வர இயலுமா என்று கேட்டார். நான் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவன் என்பதாலும் அந்த மாநாட்டை நடத்துபவர்கள் காங்கிரஸ் இயக்கத்திற்குப் பெரும் எதிர்ப்பாளர்களாக இருப்பதாலும் அதில் நான் எவ்வாறு கலந்து கொள்ள முடியுமென்று திகைத்தேன். அம் மாநாடு நீதிக்கட்சியினரின் அரசியல் மேடையல்லவென்றும், அது பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு ஆதரவு அளிக்காதென்றும் அவர்கள் கூறினர். ''ஐயா, பனகல் ராஜா இப்போது பிரிட்டிஷ் கவர்னரை எதிர்க்கிறார்,'' என்று அப்போது அண்ணா கூறினார் என்று கருதுகிறேன்.

மூட நம்பிக்கையுள்ள பிராமணச் சாதிப் பாகுபாட்டையும் பாகுபாடின்றி உணவு கொள்ளுதல், சாதி வேறுபாடு பாராது திருமணம் செய்து கொள்ளுதல் கற்றல், படித்தல் இவற்றுக்கும் வேதங்களைக் கேட்டலுக்கும் உரிய சம உரிமை இவற்றுக்கு எதிரான கோட்பாடுகள்போன்ற சமூகச் சமத்துவத்தின் மீது விதிக்கப்பட்ட அதன் 18 நிபந்தனைகளையும் நான்பெரிதும் எதிர்த்தேன்.

இத் தடைகளையும் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் போக்கவும் பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தை அணைத்துச் செல்ல சமூக, பொருளாதாரச்சமத்துவம் எய்துவதற்கும் தொடங்கப்பட்ட அத்தகைய இயக்கத்தை அனுமதிப்பது நாட்டுப் பற்றற்ற செய்கையாகுமென்றும் நான் கூறினேன். அரசியல் சுதந்திரம் பெறுவது சமூக நீதியை எய்தும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது ஆகுமென்று எனது ஐரோப்பியச் சுற்றுப் பயணத்திலிருந்து நான் அறிந்துகொண்டேன். இருப்பினும் காஞ்சிபுரம் மாநாட்டிற்குச் செல்ல வேண்டுமென்று என்னைமுழு நம்பிக்கையுடன் வற்புறுத்த வந்த அண்ணா மற்றும் அவரது இரண்டு, மூன்றுநண்பர்கள் ஆகியோரின் உண்மையான ஆர்வத்தை நான் பெரிதும் பாராட்டினேன். எனவே, அவர்களை ஒன்றும் இல்லாமல் அனுப்ப நான் விரும்பவில்லை. ஆகவே, அந்த மாநாட்டில் படிப்பதற்குச் செய்தி ஒன்றினை அவர்களிடம் எழுதித் தந்தேன். சமூக நீதிக்கும் அரசியல் விடுதலைக்கும் அந்த மாநாடு போராட முன்வர வேண்டுமென்று குறிப்பிட்டும் சமுதாயச் சமத்துவத்தை அடையவும்சாதிப் பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடவும் அம்மாநாடு வலியுறுத்தும் கருத்துக்களைப் பாராட்டியும் அச் செய்தியில் எழுதியிருந்தேன்.

''வயது வந்தோர் வாக்குரிமை''யின் அவசியத்தை வலியுறுத்தும் எனதுகட்டுரை ''திரிவேணி'' என்னும் ஆங்கில மாத இதழில் வெளிவந்தபோதும் வீடற்ற மக்களுக்கு வீட்டு வசதியும் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டுமென்னும் எனது வேண்டுகோள் ''சுயராஜ்யாவில்'' வெளிவந்தபோது தங்கள் மகிழ்ச்சியைத்தெரிவிக்க என்னிடம் விரைந்து வந்த பல மாணவர்களில் அண்ணாவும் ஒருவராவார்; ''நமது மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்ல உங்கள் கருத்துக்கள் வழிகாட்டியாகும்'' என்று அண்ணா கூறியதுடன் இத்தகைய முயற்சியில் என்னுடன் ஒத்துழைப்பதாக உறுதியளித்தார். எனவே, சேரிகளுக்குப் போகும்போதும் சென்னையைச் சுற்றிலுமுள்ள பகுதிகளுக்குச் செல்லும்போதும் அவரை என்னுடன் அழைத்துச் செல்வேன்; சமுதாயத்தில் பிற்பட்ட நிலையிலுள்ள ஏழை, எளிய மக்களின்சமுதாய, பொருளாதார நிலைமைகளையும் வீட்டு வசதி, பிற சூழ்நிலைகள் இவ நீறையும் நாம் கேட்டறிவோம். என் குறிப்புகளைத் தயாரிப்பதிலும் அத்தகைய பொருள் குறித்துக் கட்டுரை எழுதுவதிலும் அண்ணா எனக்குத் துணை புரிவார். அந்த அறிக்கைகளை நாளிதழான சுயராஜ்யாவில் நான் வெளியிட்டேன்; அவற்றை ஒய். எம். சி. ஏ. ஆய்வுக் குழுக்களிடம் அளித்தேன். இவ்வாறு) அண்ணாவின் கூட்டுறவுடனும் சமுதாயச் சீர்திருத்த எண்ணம் கொண்ட பிற மாணவர்களின் ஒத்துழைப்புடனும் பச்சையப்பன் சமூக ஆய்வுக் குழு உருவாகியது.

பின்னர், காந்தியடிகள் உப்புச் சத்தியாக்ரகம் தொடங்க அழைப்புக் கொடுத்தபோது, சமூகக் குழுவிலும் தன்மான இயக்கத்திலும் கோகலே மண்டபத்திலுள்ள ஒய். எம். சி. ஏ. மாணவர் மாதிரி நாடாளுமன்றத்திலும் பங்குபெற்று எனக்குப் பழக்கமுள்ள பழைய மாணவர்களையும் அப்போது படித்த மாணவர்களையும் அந்தத் தேசிய இயக்கத்தில் என்னுடன் பங்குகொள்ளக் கேட்டுக் கொண்டேன். நான்அண்ணாவை நேசித்த காரணத்தாலும் அவருக்கு நாட்டுப் பற்று அதிகம் உள்ளதென்பதாலும் அவரும் என்னுடன் இருக்க வேண்டுமென்று விரும்பினேன்; ஆனால்இதில் அவர் பங்குகொள்ள இயலாமைக்கு வருத்தம் தெரிவித்தார்; சமுதாய மறுமலர்ச்சிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கும் பெரிதும் முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்று அண்ணா உணர்ந்து செயல்பட்டார்.

சமுதாயத்தின் மேல் நிலையில் உள்ளவர்களாலும்உயர் சாதியைச் சேர்ந்தவர்களாலும் காங்கிரஸ் ஆட்சி செய்யப்படுவதாக அண்ணா கருதினார். அச்சமயத்தில், பெரியார் அவர்களின் கருத்து அவரிடம் மேலோங்

கத் தொடங்கியது; அவர் என்னிடம் அவ்வாறு கூற வில்லை. யெனினும், சமூக நீதிக்காகப் போராடும் அவ சியத்தை அவர் உணர்ந்துள் ளார் என்று நான் அறிந் தேன். கல்லூரியிலிருந்து நான் விலகி காந்தி அடி களுடன் சேர்ந்து போராட முடிவு செய்தபோது அவர் தேற்றமுடியாத அளவு வருத்தமடைந்தார்; தன் மானஇயக்கமும் மட்டுமின்றி அவரும் நான் கல்லூரியிலி ருந்துவிலகியபோது வலிமை பொருந்திய தலைவரையும் நல்ல நண்பரையும் இழப்ப தாக வருந்திஞர்

பல ஆண்டுகளுக்குப்பிறகு நாங்கள் ரயிலில் சந்திக்கும் வாய்ப்புப் பெற்ருேம். அவ ரைப் பின்பற்றுவோரும் அவ ரது நண்பர்களும் அவரை விட்டுச் சென்றதும் என்னி டம் விரைந்து வந்தார் எங்களது அனுபவம் குறித்து நாங்கள் உரையாடிஞேம் அப்போது நான், பாரத உழவர் சங்கத்தின் தலைவ ராக இருந்தேன்; அண்ணு, தலைசிறந்த சொற்பொழி வாளராகவும், பெரியாரின் வலதுகையாகவும் திகழ்ந் தார். தமிழ்நாட்டில் நான் ஏற்பாடு செய்துவந்த உழ வர் அணியிலும் சங்கங்களி லும் சேரலாமா என்று அவரது நண்பர்கள் பலர் அவரைக் கேட்பதாகவும், காங்கிரசில் சேராமலும், காங்கிரஸ் கொள்கைகளை உழவர் பிரச்சினைகளில் திணிக்காமலும் இருந்தால் அவர்கள் சேர்ந்து பணி யாற்றுவதில் தாம் மகிழ்ச்சி யடைவதாகவும் அண்ணு கூறிஞர். நான் உழவர்களுக் குப் பணியாற்றுவதில் அவர் முழு நம்பிக்கை தெரிவித் தார்; மக்களின் பொருளா தாரமேம்பாட்டிற்குத் துணை செய்யுமென்றும் தங்களின் தன்மான இயக்கத்தை அது வலுப்படுத்துமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். அவர் தனக்கே உரித்தான புன்முறுவலுடன் கூறிஞர்: ''ஐயா, எவ்வாருயி னும் உங்களுக்கோ உங்க ளின் காங்கிரஸ் நடவடிக் கைகளுக்கோ எதிராக நான் எதுவும் கூறியதில்லை; உங்க ளின் உழவர் பணியையும் நான் எதிர்த்ததில்லை. உங்க ளுடன் பணியாற்ற இயலா மைக்கு எனக்கு வருத்தம் உண்டு; காங்கிரஸ் மூலம் பணியாற்றுவது அவசிய மென்று நீங்கள் கருதுகிறீர் கள். நமது நாட்டு அரசிய லில் தங்களுக்கு ஏற்படும் சிறப்பு குறித்து என்றும் நான் பெருமைப்படுவேன்.''
அவருடைய தலைவரும் கட்சி யும் எங்கள் காங்கிரஸ் கோட்பாடுகளினின்றும் மாறுபட்டவர்கள் ஆயினும் மகாத்மா காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்புத் திட் டத்திற்கும், சமூகச் சீர் திருத்தக் கருத்திற்கும் ஏற் பவே பெரியார்—அண்ணு வின் பணி அமைந்திருப்ப தாக காங்கிரஸிலுள்ளசமூ கச் சீர்திருத்தவாதிகள் உணர்ந்துள்ளனர் என்று நான் அண்ணுவிடம் உறுதி யளித்தேன்.

மறைந்த ராமசுவாமி சவுத்ரியின் நினைவாக அஞ் சலி செலுத்த இரண்டு முறை அண்ணு தெஞலிக்கு வந்தார் என்று நினைக் கிறேன். சவுத்ரியின் குறிக் கோளை நிறைவேற்ற தி.மு.க முயன்று வருவதாக சவுத்ரி யைப் பின்பற்றும் தொண் டர்களுக்கு அவர் உறுதி யளித்தார்.

தி.மு.க.வின் தன்னிகரற்ற தலைவராக அவர் உயர்ந்த பின்னர் நானும் காங்கிரஸ் கட்சியைவிட்டு நீங்கினேன்; காங்கிரஸ் கட்சியின் வளர்ச் சியையும் பொதுவுடைமை யாளரின் வளர்ச்சியையும் தடுப்பதில் அவரது ஒத் துழைப்பை நான் நாடி னேன். ஆனல், ஒரே சம யத்தில் இருவரை எதிர்க்க இயலாதென்று அண்ணு கருதிஞர்.

காமராஜ் நாடாரின் தலை மையின் கீழும் அவரது முத லியார், நாயுடு, ரெட்டி, செட்டி நண்பர்களின் தலை மையின் கீழும் உழவர்கள் பெருமக்கள் காங்கிரஸில்சேர ஈர்க்கப்பட்ட காரணத்தால் நமது சமுதாயத்தில் தாழ்த் தப்பட்ட மக்களிடை பொரு ளாதாரத்தில் பின்தங்கிய நிலமற்ற ஏழைகளின் நல னிற்குப் பாடுபட அண்ணு பெரிதும் முற்பட்டார். ஆகவே, தி.மு.க. பொது வுடைமையாளர்களுடன் நட்புறவு பாராட்டியது. காங்கிரஸ் கட்சிக்கு வாக் களித்து வந்த மக்களில் பெரும்பகுதியினர், அண்ணு வின் ஆற்றலிலும் தலைமை யிலும் நம்பிக்கையுற்று அவ ரால் மேம்பாடு காண முடியு மென்று உறுதி கொண்ட னர்.

பெரியாரும் அண்ணுவும் இந்தி வெறியர்களின் நோக் கங்கள் குறித்துச் செயலாற்றினர். எனவே, 1936—37'ம் ஆண்டிலேயே அவர்கள் இந்தித்திணிப்பை எதிர்த்துப் போராட்டம் தொடங்கினர்; அப்போது சென்னை மாநில முதலமைச் சராக இருந்த ராஜாஜி, காந்தியடிகளின் இந்தித் திட் டத்தை நிறைவேற்ற முனைந் தார். இந்திய அரசியலமைப் புச்சட்டத்தில் வேண்டப் படாதபகுதிகளை நீக்கவேண்டு மென்று அண்ணு தொடுத்த கிளர்ச்சிக்கு அவரது கட்சி யினரும் ஆயிரக் கணக்கான தமிழ் அன்பர்களும் அமைதி யாகப் போராட முன்வந்த வரலாறு பற்றிப் பக்கம்பக்க மாக எழுத முடியும்; அண்ணுவின் தனித் தலை மைக்கும் அவர் கட்சியின ரிடையே கொண்டிருந்த மதிப்பிற்கும் எடுத்துக்காட் டாய் அமைந்திருந்தது. அவர் கள் அரசாங்கத்திற்கு எதி ராகக் கிளர்ச்சி செய்தது நாங்கள். அரசியல் சுதந் திரத்திற்குப் போராடி மகிழ்ச்சியுடன் சிறைக்குச் சென்றதுபோல் பல்லாயிர வர் ஆர்வம் பொங்கச் சிறைக்கு ஏகினர்.

ஒரு தலைவனின் சிலையை இன்னெரு தலைவன் திறப்பது ஜனநாயகம். ஒரு தலைவனுக்கு இன்னெரு தலைவன் கல்லறை அமைப்பது சர்வாதிகாரம்.

-அறிஞர் அண்ணு

எனக்கு அண்ணுவிடம் உள்ள அன்பும் பெருமை யும் தமிழ்நாட்டில் சமூகத் திலும் பொருளாதார நிலை யிலும் தாழ்த்தப்பட்ட மக் களின் நலனிற்காக அவர் உண்மையாகத் தொடர்ந்து பணி செய்யும் திறனும், அவரது பல கோட்பாடுகள் எனக்கு உடன்பாடில்லை யெனினும் அவருடன் பூசல் கொள்ளாமல் தவிர்க்கக் காரணமாய் அமைந்தன. நான் இந்த முறையில் அமைதி காத்திருப்பதை அவர் பாராட்டுவார்.

அவரது செல்வாக்கு விரைந்து பரவத் தொடங் கியது. அவரது அன்பிற் குரிய முன்னுள் தலைவரான பெரியார், திரு. காமராஜ் அவர்களை ஆதரித்தும் அவ ரது மக்களாட்சிக்கு ஒவ் வாத காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தெரிவித்தும் இருந் தது அண்ணுவிற்கு வருத் தத்தையும் இடர்ப்பாட்டை யும் அளித்திருக்கும். இருப் பினும் பெரியாரிடம், அண்ணு தொடர்ந்து அன்பு செலுத்திஞர்; 1967—68ல் அவர்கள் மீண்டும் இணைந்த காட்சி மறக்க ஒண்ணுத தாகும். என்னுடைய செயல் கள் எதன் காரணமாகவும் அவருக்கு வருத்தமோ இழப்போ ஏற்படவில்லை யென்பதை அவர் மூலம் அறிந்து நான் மகிழ்ந்தேன். நான் சித்தூர் தொகுதியில் உப-தேர்தலுக்கு நின்ற போது அவர் தமது செய்தி யைச் சிறையினின்றும்எழுதி அனுப்பிஞர்; சித்தூரிலுள்ள தி.மு.க. தொண்டர்கள் அவரை அணுகி அவரது அறிவுரையைக் கேட்டனர். என்னை ஆதரிக்க வேண்டு மென்று சிறையிலிருந்து அவ ரது செய்தியை அனுப்பி வைத்தார். சென்னையி லுள்ள பிற தலைவர்களை எனக் காக அங்குதங்கிப்பிரச்சாரம் செய்யக் கேட்டுக் கொண் டார். நான் அவரது அன் பிற்குரிய பேராசிரியராக இருந்ததுதான் காரணமா கும்.

1962ல் நடந்த பொதுத் தேர்தல்களில் காஞ்சிபுரத் தில் அண்ணு தேர்தலுக்கு நின்ருர்; காங்கிரஸ் கட்சி யினரின் அடாத செயல் கள் காரணமாகவும், ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் படத் தில் சத்தியம் செய்து வாக் களிக்க உறுதி வாங்கிய காங்கிரசாரின் விரும்பத் தகாத காரியத்திஞலும் அண்ணு தோல்வி காண நேர்ந்ததை அவர் அரசிய லில் ஏற்பட்ட மரண அடி யாக எடுத்துக்கொள்ள வில்லையென்றும் ரங்காவும் மற்றவர்களும் காங்கிரசின் இழி செயல்கள் காரண மாகத் தோற்கடிக்கப்பட்டி ருக்கின்றனர் என்றும் அவர் விளக்கம் அளித்தார்; அத்த கைய நெருக்கடியான தரு ணத்திலும் அண்ணு தனது பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியரை நினைவில் கொண்டிருந்தாரே என்று நான் மனநிம்மதி கொண் டேன். 167ல் தென் சென்னையில் சுதந்திராக் கட் சித் தலைவர் டாக்டர் ஹாண்டே ஏற்பாடு செய்த தேர்தல் கூட்டத்தில் நாங் கள் இறுதியாகச் சந்தித் தோம். அண்ணு பேசவிருந்த கூட்டமாகையால் பெருந் திரளான மக்கள் குழுமி யிருந்தனர்.

அண்ணு பச்சையப்பன் - கல்லூரி மாணவராயிருந்த போதே, பொதுமக்களின் மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டுமென்னும் அவரது உண்மையான ஆர்வத்தை எவ்வாறு கண்டு மகிழ்ந் தேன் என்பதையும் பிற் பட்ட மக்களுக்காக அவர் தொடர்ந்து, அயராது செய் யும் பணியை நினைந்து

அண்ணன்-பள்ளிச் சிறுவனுக!



அண்ணு சிறு வயதில் குடுமியுடன் சீவி சிங்காரிக்கப் பட்டிருப்பார். அந்தக் குடுமியுடனேயே பள்ளிக்கூடம் போவார்.

பள்ளியில் கிராப்புத் தலையுடனிருக்கும் பையன்கள் இவரையும் இவரைப் போன்றிருப்போரையும் கேலி செய்வார்கள்.

இதைத் தன் தொத்தாவிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தார்.

அன்ஞெரு நாள் — பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்த அண்ணு தனது சிறிய கரும்பலகையைத் தொத்தாவிடம் காட்டிஞர்.

'' என்ன துரை இது ?''

'' மார்க்கு! நூத்துக்கு நூறு !''

'' அப்படிஃா ?''

பூரித்துப் போஞர் தொத்தா. இதுதான் சமயம் என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார் அண்ணு.

'' தொத்தா !''

'' என்ன துரை ?''

'' நான் ஒன்று கேட்பேன்; செய்வியா ?''

'' சொல்லு! நீதான் இன்னிக்கு நூத்துக்கு நூறு மார்க் வாங்கியிருக்கி ருயே! எது வேணும்? மிட்டாயா? மிக்சரா? தூள் பக்கடாவா ?''

'' ஊஹூம் !''

'' பின்னே....என்னவேணும் சொல்லு ?''

'' எங்க பள்ளிக்கூடத்திலே எல்லாரும் கிராப் வச்சிருக்காங்க! எனக்கு இதுதாஞ ?'' என்று தனது சடையை இழுத்துக் காட்டிஞர். அண்ணு.

வாய்விட்டுச் சிரித்த தொத்தா, '' இதை அப்பவே சொல்லியிருக்கலாமே கண்ணு! மார்க் வாங்கின பிறகு, நான் சந்தோஷமா இருக்கிறபோது சொல் லனுமின்னு நினேச்சியா? கெட்டிக்காரன் !'' என்று பாராட்டி முத்தமீந்தார்.



மையைக் காட்டினர்; இவ்வாறு முன்னேற்றப் பகுத்தறிவுப் பாதையில் சிறப்பெய்த நமது மக்களுக்குத் துணை புரிய அவர் தொண்டர்களுக்கும், இந்து சமயச் சார்புடையோருக்கும், புதியதொரு பணியை நினைவுறுத்தினர்.

இந்திக்கு எதிர்ப்பு!

1936 — 49'ல் அண்ணாவும் திராவிடர் கழகத்தினரும் பின்னர் 1950'ம் ஆண்டிலிருந்து தி. மு. க. வினரும் அனைத்திந்திய ஒரே மொழியாக இந்திதான் இருக்க வேண்டுமென்னும் சுதந்திர இந்தியாவின் கோரிக்கைக்குக் கடும்எதிர்ப்பைக் கிளப்பினர். முன்பும் இந்தப் பத்தாண்டுக் காலப் பகுதியிலும் அவர்கள் பலமுறை சிறை ஏகினர். இந்திதான் இந்தியாவின் பொது மொழியாக— வேண்டுமென்னும் கோரிக்கை வெற்றியடைய முடியாதென்பதை அவர்கள் ராஜாஜிக்குத் தெளி செய்தனர். மூன்று மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஜவகர்லால் நேருவை இறங்கி வரச் செய்துறுத்தினர். இந்தி மொழி முக்கிய இணைப்பு மொழியாகவும் அனைத்திந்தியப் பணிகளுக்கான மொழியாகவும் இருக்க முடியாதென்று உரத்த குரல் எழுப்பி வந்தனர்; ஆனால், இப்போதுள்ள மாறுதல் யாதெனில், ராஜாஜியை நண்பராகக் கொண்டும் தமிழ்நாடு அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றும் உள்ள சிறப்பான நிலையை எய்தியுள்ளனர். இந்த இரண்டு சாதனைகளும் அண்ணாவால் எய்தப் பெற்றனவாகும்.

உண்மையான தொண்டுள்ளம்!

வட இந்தியர்களும்இந்தி பேசும் அரசியல்வாதிகளும் கங்கை — நர்மதா நதிக் கரையிலுள்ள இந்து — ஆரியக் கலாச்சாரத் தலைவர்களும் பெரும் பகுதியினராக உள்ள இந்திய நாடு, தென்னகப் பண்பாட்டையும் திராவிட மொழிச் சிறப்பையும் புறக்கணிப்பதுடன் மொகஞ்சதாரா — ஹாரப்பா திராவிட நாகரிகம் மறைக்கப்பட்ட நாளிலிருந்து செய்யப்பட்டது போன்றே தங்களுக்கு உரித்தான முன்னேற்றம் தடுக்கப் பட்டும் புறக்கணிக்கப் பட்டும் வருவதாகத் திராவிட முன்னேற்றக் கழகம் விடா முயற்சியுடனும், உண்மைத் தொண்டுள்ளத்துடனும் செயலாற்றி வந்தது. எனவே தென் இந்தியா, குறைந்தது தமிழ் நாடேனும் வட இந்தியாவிலிருந்து பிரிந்து தனித்தியங்க வேண்டுமென்று விரும்பினர். இது போன்ற கோரிக்கையை, எழுப்பி மாஸ்டர் தாரா சிங் மட்டுமே அரசியல் தலைமை ஏற்று உறுதியாக இருந்தார். சர். சி. பி. இராமசாமி ஐயர், திருவாங்கூர் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார்'

ஒருமைப் பாட்டுக்கு உறுதுணை!

நிஜாம்,ஹைதராபாத் பிரிவினைக் கொள்கையையும் விட்டு விட்டார். ஆனால் அண்ணாவும் பெரியாரும் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கொண்டு மிகுந்த செல்வாக்குப் பெற்று மக்களிடையே ஆதரவைப் பெருக்கித் தங்கள் கட்சிகளை வலுப் படுத்தினர். இதுவே மிகச் சிறந்த சாதனையாகும்; குறிப்பாகத் தென்னகத்திலுள்ள நம்மில் பலரும் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் உழைத்து வரும் வேளையில் அண்ணா இத்தகைய கோரிக்கைக்கு வலிவும் பொலிவும் தேடி வெற்றி கண்டது பெரும் சாதனையே ஆகும். ஆதிக்க வெறி கொண்ட பொதுவுடைமை சீனா பெரும் படையுடன் இந்தியாவின் மீது படையெடுத்த செய்தி எட்டியதுமே, இந்தியா முழுமைக்கும் ஊறு நேராவண்ணம் இந்திய மக்கள் அனைவருடனும் தோழமை கொண்டு நேர்மையுடன் கூட்டுறவு கொள்ள முனைந்தனர் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்; இது அண்ணா, அவரது கட்சித் தலைவர்கள் ஆகியோரின் அரசியல் தெளிவையும் தூய்மையையும் காட்டி நிற்கின்றது. பிரிவினைக்குக் குரலெழுப்பி வந்த அண்ணா இந்தியக் குடியரசில் தமிழ் நாட்டிற்குச் சீரிய இடத்தை மிகுந்த மதி நுட்பத்துடன் ஏற்படுத்தியதுடன் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டிற்கும் சிறந்த சேவை செய்தார். அவரது கட்சியினரையும் ஏற்றவாறு இசைய வைத்தார். இது அண்ணாவின் உயரிய தலைமைக்கு எடுத்துக் காட்டாகும்.

அரசியல் மதி நுட்பம்!

தமிழ் நாட்டு அரசியல்—உலகில்மீண்டும்ராஜாஜி சுதந்திரக்கட்சித்தலைவராகநுழைந்தமையால் ஏற்பட்ட புதிய அரசியல் சூழ்நிலையில் எவ்வாறு தனது கட்சி இயங்குவதென்பதை அண்ணா சிந்திக்க வேண்டியிருந்தது. காங்கிரஸ் கொள்கை,கோட்பாடுகளுடன் ஒத்துச் செல்லக்கூடிய அவரது முன்னைய அரசியல் ஆயுதங்கள், வலிவுற்றதாகவோ அந்த வேளைக்கு ஏற்றதாகவோ இல்லை. தி. மு. க.போன்று ராஜாஜியும்இந்தியை எதிர்த்தார்; அதுபோன்ற அவரும் காங்கிரஸ் ஆட்சியை முறியடிக்க விழைந்தார்.

ராஜாஜி முன்பிருந்ததுபோலன்றி இப்போது பொது மக்களிடம்கருத்துகளை விளக்கினார். அவருக்குத் துணையாக பல காந்தியவாதிகளும் உழவுத் தொழிலாளர்களும் உண்மையான ஜனநாயக வாதிகளும் இருந்தனர் இவர்கள் சில போது தி. க. விற்கு அல்லது தி. மு. க. விற்கு வேலை செய்தவர்களாயிருந்தனர். நானும் பத்தாண்டு காலத்திற்குமேல் பழகிய என் உழவுத்தொழில் நண்பர்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ராஜாஜி கட்டளைக்குப் பணி செய்யக் காத்திருந்தோம். அவரது மற்ற அரசியல் பகைவர்களுடன் எங்களையும்அண்ணா எதிர்க்கப் போகிறாரா? அண்ணா அரசியல் மதிநுட்பம் பொருந்தியவராதலின் ராஜாஜியுடன் அரசியல் உடன்பாடு காண வேண்டுமென்னும் பல நண்பர்களின் அறிவுரைக்குச் செவிமடுத்தார்.

எனவே அவர், வேட்பாளர்களின் தொகுதி உடன்பாடு செய்து கொள்வதன் மூலம் சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்ளலாமென அவரது கட்சியினருக்கு ஆலோசனை கூறினார். ஆனால், சமூக மூட நம்பிக்கைக்கு எதிராக நீண்ட காலமாக எதிர்ப்புக் காட்டியும் பொதுவுடைமைப் பொருளாதாரக் கருத்தை ஆதரித்தும் வந்த அவரது கட்சித் தொண்டர் பலர், அவரது அறிவுரையை ஒப்புக் கொள்ள இயலாத நிலையிலிருந்தனர். மேலும், 1962 பொதுத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பிடித்து விட முடியுமென்னும் தங்கள் திறத்தில்துடிப்புள்ள இளைஞர் சமுதாயம் முழு நம்பிக்கை கொண்டிருந்தது.

எனவே அவரது தி.மு.க. வும் எங்கள் சுதந்திரக்கட்சியும் தனித் தனியாகத்தேர்தலில் நின்றன; ஒன்றையொன்று எதிர்த்தும் நின்றன. இரண்டு கட்சிகளும் காங்கிரஸ் கட்சியினால் பெரும் தோல்வி காண நேர்ந்தது. தேர்தல் நிலைமைகளை ஆய்ந்தறியுமாறு தனது நண்பர்களை அண்ணா கேட்டுக் கொண்டார்; தி. மு. க.வுடன் சுதந்திரக் கட்சியும் ஒருங்கிணைந்து பணியாற்றஅழைக்கப்பட்டிருந்தால் காங்கிரஸ் கட்சியை வீழ்த்தி இரண்டு கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிட்டியிருக்குமென்று உணர வைத்தார்.

இதற்கிடையில் சென்னை மாநகராட்சித் தேர்தல் வந்தது: நிபந்தனையற்ற வகையிலும் பெருந்தன்மையுடனும் ராஜாஜி, தி. மு. க. வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்து தி.மு.க. அதன் பெரும்பான்மையைக் காத்துக் கொள்ள வழிவகுத்தார். இந்த அனுபவத்தை அறிவு நுட்பமிக்க அறிஞர் அண்ணா பயன்படுத்திக் கொண்டு அவரது தோழர்களை ராஜாஜியுடனும்சுதந்திரக் கட்சியுடனும் தேர்தல் உடன்பாடு செய்து கொள்ளும் ஏற்பாட்டிற்கு முனைந்தார். அண்ணாவின் அறிவுத் திறனும் சிறந்த அரசியல் தெளிவும் ராஜாஜி தி. மு.க. வைப் பலப்படுத்த வாய்ப்பாக அமைந்தது: இணைந்து இருவரும் பணியாற்றவும் ஏதுவாகியது. காங்கிரஸ்அல்லாத பிற அரசியல் சக்திகளின் ஆதரவை இப்பெரும் தலைவர்கள் பெற முடிந்தது! தமிழர்கள் ஒருமித்த வகையில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகக் கிளர்ந்து, காங்கிரஸ் கட்சியை ஆட்சிப் பீடத்தினின்றும் இறக்கக் காரணமாயிற்று.

நீண்ட காலமாக ஆளும் சக்தியாகக் காங்கிரஸ் கட்சி மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டதனால் ஏற்படும் அரசியல் விளைவு என்னவாகுமென்பதை நாம் கணிக்க இயலாது. ஆனால், அரசியலில் மாற்றம் ஏற்பட்டே தீர வேண்டுமென்று மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டனர் என்பது உண்மை;

ஆளும் கட்சியை அவ்வப்போது தேர்தல் காலங்களில் மாற்றியமைக்கும் அவசியத்தை உணர்ந்தனர்; மக்களாட்சி முறை தழைக்கவும் மாறிவரும் நிலைமைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் மக்களின் தேவைகளுக்கும் ஏற்ப மக்கள் நம்பிக்கை இழந்த ஆளும் கட்சியை மாற்றும் அவசியத்தைநன்குஉணர்ந்து விட்டனர். அத்தகையமாற்றம் வேண்டுமென்றுராஜாஜி வலிமையாக வாதாடினார். மிகவும் வேண்டப்பட்ட மாற்றத்தை எய்தும்வாய்ப்பு அண்ணாவிற்கும் அவர் வழி நடத்திச் செல்லும் தி.மு.க. விற்கும் கிட்டியது; மற்ற மாநிலங்களில் ஏற்பட்டது போன்ற சாதாரன மாற்றம் அன்று; ஆனால் தமிழகத்தில் உண்மையில் முன்னேற்றத்திற்கும் மக்கள் நல்வாழ்விற்கும் அடையப் பெற்ற சீரிய அரசியல் மாற்றமாக மலர்ந்தது. இத்தகைய மாற்றமே இந்தியாவின் மக்களாட்சி சிறப்புற காரணமாக அமைந்தது; மேலும், இந்திய மக்களின் வாழ்வு, அரசியல்,ஜனநாயக சுதந்திரத்தை நோக்கிநடை போடத் தொடங்கியதற்கும் எடுத்துக் காட்டாய் இது மிளிர்கிறது.

நான் திராவிட பாரம்பரியத்தைச் சார்ந்தவன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

—மாநிலங்களவையில்

அண்ணா



பொறுப்புகளை ஏற்கத் தயங்குவது என் சுபாவம். ஆனால் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளை என்னால் முடிந்த அளவு செய்வது என் பழக்கம்.

சுமந்து கொண்டிருக்கும் சிலுவையை குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க என்னால் முடிந்த வரை நடப்பேன்.

- அறிஞர் அண்ணா

நான் எந்தளவு பெருமை கொள்கிறேன் என்பதையும் அந்த இடத்தில் விளக்கிப் பேசினேன். வாக்காளர்கள் அவருக்குப் பெரும்பான்மை நிலையை அளித்தால், அரசியல் பெருந் தலைவர் ராஜாஜியின் துணையுடனும் ஆசியுடனும் அண்ணா மிகச் சிறந்த முதலமைச்சராக ஆட்சி செய்வார் என்றும் அவர்களுக்கு நான் உறுதியளித்தேன். அங்கு குழுமியிருந்த மக்கள் என் கருத்திற்கும் நம்பிக்கைக்கும் ஆதரவு தெரிவித்து ஒலி எழுப்பினர். அண்ணா தனது பதில் உரையில், மக்களின் கூட்டுறவுவைக் கொண்டு, அவரது ஆசிரியரின் நம்பிக்கைக்கும் மக்களின் எண்ணத்திற்கும் ஏற்ற வகையில் செயலாற்றுவேன் என்று உறுதியைத் தெரிவித்தார். சமுதாயத்தில் இடர்ப்பட்டு உழலும் எளிய பாட்டாளி மக்களுக்காகத் தொண்டாற்றி இறவாப் புகழ் பெற்றார் என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அண்ணாவை இழந்து தமிழகம் துக்கித்து நிற்கிறது; பெரியார், அண்ணா ஆகியோரால் புத்துயிர் ஊட்டப்பட்ட தொன்மைத்தமிழ் மொழிக்கு உற்ற தனித் தலைவன் மறைவு, தமிழ் மக்களைச் சோகத்தில் மூழ்கடித்துள்ளது. அண்ணா அவர்களின் சிந்தனை ஆற்றல் திறத்தாலும் எழுச்சியூட்டும் சாதனைகளாலும் அவரது உன்னதக் கருத்துக்களாலும் பிறரை ஈர்க்கும் அவரது இனிமைப் பண்பாலும் தமிழ்நாடும் தமிழ் இலக்கியமும் மேலும் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்வதுடன் எழுச்சியுற்ற தலைமையை உருவாக்கும் என்று நான் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளேன். அவரது பணியும் எடுத்துக் காட்டான வாழ்வும் அவரால் மறுமலர்ச்சி பெற்ற தமிழும் அவர் கண்ட தமிழகமும் பாரதத்தைத் தொடர்ந்து மேம்பட்டதாக்கும்; பாரத மக்களின் வாழ்வை உயர்த்தும்; காலங் காலமாக இனி வரப் போகும் சமூகச் சீர்திருத்தவாதிகளுக்கு அவரின் சீரிய பணி, சுடரொளியாய் என்றும் நின்றிலங்கி வழிகாட்டிடும். ★

தற்காலத்தில் ராஜாஜி.

அண்ணாவின் சாதனைகளைப் பற்றி...

பெரியாரின் தலைமையின் கீழ் திராவிடக் கழகம் வளர்ச்சியடைந்ததற்கும் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக்கழகம் செல்வாக்குப் பெற்று ஓங்கியதற்கும், அண்ணாவின் சீரிய சாதனைகளே காரணமாகும். காந்தியடிகளின், அரசியல், சமூக இயக்கங்களாலும் சோவியத் ருஷ்யாவும் பொதுவுடமைக் கட்சிகளான அதன் செயல்களும் பரப்பிய உலகம் முழுமைக்குமான எண்ணங்களாலும் கோட்பாடுகளாலும் 1930'ம் ஆண்டு தொடங்கி கடந்த நாற்பதாண்டுக் காலத்தில் எல்லா அரசியல் இயக்கங்களும் இங்கு அனைத்திந்திய ரீதியில் அமைந்து செயல்பட்டன.

தமிழ் நாட்டை மட்டும் எல்லையாகக் கொண்டு தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் தங்களது செயல் முறைக்கேற்ற தளமாக அமைத்து தமிழ் மக்களின் நலனையே அரசியல் அடிப்படைக் கருவியாக வைத்து தூய தமிழ்ப் பெயர்களைக் கொண்டு, சமூகத்தில் வளர்ச்சியும், மேம்பாடும் காண முனைந்து செயலாற்றுவதற்குத் துணிவும் தன்னம்பிக்கையும் வருவதென்பதே நினைத்துப் பார்க்க இயலாத ஒன்றாய் இருந்தது; மேலும், காங்கிரஸ் அல்லது பொதுவுடமையாளர் அல்லது சமதர்மக் கட்சியினர் கொண்டிருந்தது போல் அப்போது எழுச்சியூட்டும் அரசியல் நோக்கங்களைக் கொண்டிருக்காமல் தமிழ் நாட்டை மட்டுமே கருத்தில்கொண்டு செயல்படத் தொடங்கும் நிலையை எவரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. ஆனால், கற்பனையில் கூட சிந்தனைக்கு எட்டாததும் அரசியலில், அரிதானதுமான இந்தஅரும் பெரும் சாதனையை அண்ணா செய்து காட்டினார். பெரும் பான்மையான அரசியல் சீர்திருத்தவாதிகள் இதுபற்றி எண்ணிப் பார்க்கவே நடுக்கம் கொண்டிருப்பர். அவரது சிந்தனைக்கு உண்மை வடிவம் கொடுத்துச் செயல்படுத்துவதில் அண்ணா வெற்றியும் கண்டார். தன்னைப் பின்பற்றுவோருக்கு வலிவும் பெருமையும் ஏற்படச் செய்வதிலும் அவரது கட்சி அரசியல் ஆதிக்கம் பெறத் தக்க நிலையை உருவாக்குவதிலும் அண்ணா வெற்றி பெற்றார். முதலில் பெரியாரும், பின்னர் அண்ணாவும் மற்றும் கட்சித்தோழர்களும் இந்துசமய இதிகாசம், புராணம் இவற்றிற்கு ஏற்றவாறு மாற்றப் பொருள் விளக்கம் கொடுப்பதில் சமூகச் சீர்திருத்தம் தொடங்கினர்; ஆந்திரத்திலும் ராமசாமி சவுத்திரி இவ்வாறே செயலானார். பிராமணர்களின் கோட்பாடுகளையும் அவர்களின் சடங்குகள், பூசைகள், நம்பிக்கைகளையும் புறக்கணித்து இராமசாமிப் பெரியார் கண்ட சீர்திருத்தத் திருமண முறையை மேற் கொள்ளுமாறு மக்களிடம் பிரச்சாரம் செய்தனர்; அவர்களின் வழியில் ஆயிரக் கணக்கானவர்கள், சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டு மண வாழ்வைத் தொடங்கினர். ஆரியப் புராணங்களுக்கு எதிராகவும் பிராமணர்களின் நம்பிக்கைக்கும் கற்பனைகளுக்கும் முரணாகவும் அவர்களின் நோக்கங்களுக்கு ஏற்ற இலக்கியப் படைப்புக்களைப் படிப்படியாக உருவாக்கினர்

இலக்கியப் படைப்புகள் ...

இக்குறுகிய காலப்பகுதியான நாற்பது ஆண்டுக் காலத்தில், தமிழ் நாட்டின் ஏழை, எளிய, உழைப்பாளப் பெரு மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்று விட்டனர். இது எவ்வாறு முடிந்தது? வால்மீகி முனிவரும் வியாசரும் ஆரியர்களுக்கு அறிவியல் கோட்பாடுகளை உருவாக்கித் தந்தது போல் இந்தப் பகுத்தறிவாளர்களும் நீண்ட காலமாக இடர்ப்பட்டு வருந்தும் தமிழ் மக்களுக்குச் சமூக நியதிகளை உருவாக்கினர்.

திட்ட வட்டமாகக் கூற இயலாத ஆரிய திராவிடர் முரண்பாடுகள் குறித்து, உருவாக்கப் பட்ட நிலையைப் பாராட்டிய தமிழ் மக்கள், பழமையினின்று நீங்கிக் கற்பனை சார்ந்த புதிய கருத்துக்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார்கள் என்று பொருளா? அவ்வாறிருக்க வேண்டுமென்பதில்லை. இந்து சமயத்திலிருந்து, இந்து சமயம் அல்லாத பிற சமயங்களுக்கு மாறிய பலர், பழைய இந்துச் சாதி முறையை அங்கும் அறவே ஒதுக்கிவிடாத நிலையுள்ளதுபோன்றும், தெருவோரக் கடவுளுக்கு எப்போதேனும் வணக்கம் செலுத்திப் போவது போன்றும் நமது பழைய சுவடிகளில் உள் கருத்துக்கள் சந்திரமண்டல ஏவு கணையுடன் சில கருத்துக்கள் ஒத்துப் போவது போன்றும், அவர்கள் பிராமணியத்தில் ஊறியிருந்ததற்கும் மேலாக அதையும் மீறி அண்ணா, பெரியார் ஆகியோரின் புதிய பகுத்தறிவுக் கோட்பாடுகளைத் தழுவத் தொடங்கினர்.

புதிய பகுத்தறிவுக் கருத்துக்கள் ....

பெரியாரின் புதுமைக் கருத்துகளும் அண்ணாவின் பகுத்தறிவுச் சுடரும் முன்பு அவர்கள் தலைவிதியைப் பற்றியும், பாவ காரியங்களைப் பற்றியும் கொண்டிருந்த மூட நம்பிக்கையை விரட்டியது; நீண்ட நெடுங் காலமாக அவர்கள் கொண்டிருந்த புராணியக் கருத்துக்களுக்கு விடிவைக் காட்டியது. இது மிகப் பெரும் சாதனையாகும்; சோவியத்து நாட்டில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நடந்த இரத்தம் சிந்திய வெறியாட்டங்கள் போலன்றியும் சீனாவில் பல்லாயிரக்கணக்கான பாமர மக்களின் பிணங்களின் மீது நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி போலன்றியும், அமைதியாக அடையப் பெற்ற மாபெரும் சமுதாயப் புரட்சியாக அமைந்தது. இப் பகுத்தறிவுப் புரட்சி இன்னும் நடைபெற்று வருகிறது. அண்ணா தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தி இப் பகுத்தறிவு இயக்கத்தின் துணைத் தலைவராக இருந்தார். ஐயந்திரிபற்ற வேதாந்தியாகிய ராஜாஜியுடன் உடன்பாட்டு இணக்கம் கண்டதன் மூலம் அவர் தனது ஆன்மீக வலி

கடற்கரைப் புதையல்

சென்ற வசந்தத்தில்
சிந்துக்கள் இசைத்தகுயில்
இன்றில்லை! வண்டுகளின்
இரங்கல் கவிக்குரலைத்
தென்றலே! தென்னாட்டில்
திரியும் பெருமூச்சே!
மன்றங்கள் தோறும்நீ
வாய்விட்டுப் புலம்பிவா!
உதயமே! எங்கள்
உலகத்தின் இரவைப்பார்!
மதியமே! நீஎங்கள்
மனக்குமுதம் மலர்த்துவையோ?
இதயமே! நீஇனிமேல்
யாருக்குக் கடைதிறப்பாய்?
உதடுகளே! நீங்களினி
ஒலிப்பிணத்தின் பாடைகளோ?
ஆட்சிக் கிருந்தமன்னன்
அகன்றுவிட்டான்! இந்நாட்டின்
மீட்சிக் கெழுந்தமகன்
மீளாத துயில்கொண்டான்;
காட்சிக் கிருந்தஅண்ணன்
கதையானான்! நம்வழக்கின்
சாட்சிக்கு நின்றிருந்தான்
சரித்திரமாய் மாறிவிட்டான்!
பொன்னடக்கப் புத்தகத்தின்
பொருளடக்கம் ஆனமகன்
தன்னடக்கம் காட்டத்
தரையடக்கம் ஆகிவிட்டான்;
கடற்கரையில் சொற்பொழிவான்
கடலலையின் மீனாவோம்;
கடற்கரையில் தூங்கிவிட்டான்
கடற்கரையின் மீனானோம்!
திரைநடக்க உதவுகின்ற
தெப்பத்தைத் துணைப்படகைக்
கரையில் புதைத்துவிட்டுக்
கண்ணீரில் மிதக்கின்றோம்!
சென்னைக் கடற்கரையே!
சிறப்படைந்தாய்; இந்நாட்டில்
உன்னைப்போல் பெரும்புதையல்
உடையஇடம் வேறில்லை!
தியாகிகட்குச் சாவேது?
தேகம் புதையுமிடம்
மயானமல்ல, நெஞ்சே!
வளமான வயலதுதான்!
புதைத்துவிட்டோம் என்று
புலம்பாதே இனி, நெஞ்சே!
விதைத்துவிட்டோம் எனநினைப்பாய்;
விளைச்சலுக்குப் பாடுபடு!

- கவிஞர் அப்துல் ரகுமான்

வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்.,

வடபுதுப்பட்டு (அஞ்சல்) (ஆம்பூர்) (வழி) ஜோலார்பேட்டை.

தந்தி : " SUGARS " ஆம்பூர்.

தொலைபேசி எண்கள் { 264, 269 } ஆம்பூர்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறுபத்தொன்றுவது பிறந்த தின நன்னாளில்
அவரது தேனினுமிய கருத்துக் கருவூலங்கள் ஞாலம் உள்ளளவும் மிளிர நினைவு கொள்வோமாக!

இல்லந்தோறும் விரும்பி சுவைப்பது
தரத்திலில் உயர்ந்த ஆம்பூர் சர்க்கரையே!

சீர்மிகு தூய வெள்ளைச்சர்க்கரை உற்பத்தியாளர்கள்.

செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ரூ. 80,20,000

நாளொன்றுக்கு ஆலை கரும்பு அரைப்புத்திறன்: 1250 மெ. டன்கள்

ஆலையின் செயல்படு பகுதிகள்: வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் வட்டங்கள்

ப. சுந்தரம்,
பொது மேலாளர்,

ர. சம்பங்கி,
தலைவர்.

HEARTY GREETINGS

★

FROM

ASPY LITHO WORKS

MADRAS-2

ஆட்சிபீடத்தில் அண்ணா!

சி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. சி. எஸ்.

(தமிழக அரசு தலைமைச் செயலாளர்)

காலஞ்சென்ற டாக்டர் அண்ணாதுரை ஒரு நிர்வாகி என்ற முறையில் எப்படித் திகழ்ந்தார் என்பதனைக் கூறி எனது புகழுரையைச் சமர்ப்பிக்கக் கிடைத்த இந்த வாய்ப்பினை வரவேற்கிறேன். டாக்டர் சி. என். அண்ணாதுரை முதல் மந்திரியாக இருந்த காலம் முழுவதிலும் தமிழக அரசின் தலைமைச் செயலாளராக விளங்கும் பேரதிருஷ்டம் எனக்குக் கிடைத்தது. இது காரணமாக அவரை அடிக்கடி சந்திக்கவும், அரசாங்க விஷயங்கள் பற்றிப் பேசி விவாதிக்கவும் வாய்ப்புகள் எனக்குக் கிட்டின. ஒவ்வொரு முறை அவரைச் சந்திக்கும் போதும் அவரது மற்ற எல்லாக் குணங்களையும் விட இரு விஷயங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவை அவருடைய பொறுமையும் பிறர் நலனில் அவர் காட்டிய அக்கறையுமாகும். இவையே அவரது பிரதான குண இயல்புகளாகவும் அமைந்திருந்தன. எந்த ஒரு ஃபைலிலும் அல்லது எந்த ஒரு பிரச்னையிலும் பொதிந்துள்ள அடிப்படையான, முக்கியமான அம்சத்தை வெகு துரிதமாகப் புரிந்து கொண்டு விடுவார். அவர் நகைச்சுவை உணர்ச்சி மிக்கவர்.

என் கருத்திலிருந்து மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தாரானால் அதை நகைச்சுவை உணர்வோடு கலந்து வெளியிடுவாரேயன்றி, முதல் மந்திரிக்குள்ள உரிமை காரணமாக அதிகாரமாகப் பேச மாட்டார். அவர் முதல் மந்திரியாக இருந்த போது கணிசமான அளவுக்கு அரசாங்க ஊழியர்களின் க்ஷேம நலன் பெருகும் விதத்தில் பல முக்கிய நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலான காரியங்களில் அவர் ஒரு கால கட்டத்தை நிர்ணயிப்பார். அந்தக் கால கட்டத்துக்குள் காரியம் நிறைவேறி விட்டால் மட்டில்லா மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். தாமதமானாலோ நலனுக்கான காரியங்கள் தாமதாகின்றனவே என்ற எண்ணத்தில் அவர் முகத்தில் வேதனையின் அறிகுறிகள் படர்வதைக் காணலாம்.

புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் எடுத்த பிறகு, நான் விசேஷமாகக் கேட்டுக் கொண்டதன் பேரில், அன்று மாலையே டாக்டர் அண்ணாதுரை தலைமைச் செயலக ஊழியர்கள் அனைவரும் குழுமியிருந்த கூட்டத்தில் பேசினார். தலைமைச் செயலகத்தில் உள்ள 'பரேட் கிரௌண்ட்' மைதானம் நிரம்பி வழிந்தது. அந்தக் கூட்டத்தில் டாக்டர் அண்ணாதுரை தாமே குமாஸ்தாவாகவும், உபாத்தியாயராகவும் வாழ்க்கையைத் தொடங்கியவர் தாம் என்பதை ஞாபகப் படுத்தினார். குறைந்த வருமானமுடைய சர்க்கார் ஊழியர்களின் பிரச்சினைகளைத் தாம் நன்கு உணர்ந்திருப்பதாகச் சொன்னார். இந்த முதல் கூட்டத்திலேயே அண்ணாத்துரை சர்க்கார் ஊழியர்களின் அபிமானத்தைப் பெற்று விட்டார். பிரிதொரு முறை நான் மீண்டும் விசேஷ வேண்டுகோள் விடுத்ததின் பேரில் இந்தியப் பொது நிர்வாகக் கழகத்தின் சென்னைக் கிளை நடத்திய கருத்தரங்கில் சொற்பொழிவாற்றினார். 'மக்களின் குறைகளைத் தீர்ப்பது' என்ற தலைப்புக் கொண்ட இக் கருத்தரங்கில் அவர் மறக்க முடியாத ஓர் அரிய கருத்தை வெளியிட்டார். ''தம் மனத்தில் தோன்றிய உண்மையான எண்ணத்தை — அது எனக்கு ருசிக்காத யோசனையானாலும் — வெளியிட்டு ஆலோசனைக் கூறும் சர்க்கார் ஊழியரையே நான் நண்பனாகக் கருதுவேன்'' என்றார். மேலும், ''எனது கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினரேனும் ஒரு சர்க்கார் ஊழியரை அவரது கடமை காட்டும் பாதையிலிருந்து வழுவுதற்கு வற்புறுத்தினரேயானால் அந்த வற்புறுத்தலுக்குப் பணியாமல் இருக்கும் சர்க்கார் ஊழியருக்கு நான் முழுப் பாதுகாப்பு அளிப்பேன்'' என்றார்.

டாக்டர் அண்ணாதுரை முதல் மந்திரியாக இருந்த காலத்தில், அவர் சக்திக்கு மீறிய அளவு வேலை செய்தார் என்பதே என் எண்ணம். முதல் மந்திரி என்ற முறையில் ஆற்ற வேண்டிய பணிகளைத் தவிர வேறு பல பொறுப்புகளையும் அவர் ஏற்று முடித்து வைக்க வேண்டியதாயிருந்தது. ஏதோ ஒரு கால அளவை நிர்ணயித்து அதன்படி அன்றாடம் அரசாங்க அலுவல்களை முடித்துக் கொண்டு வரலாம் என்று அவர் எவ்வளவோ மனப்பூர்வமாகப் பிரயத்தனப்பட்டும் கூட வேறு பல காரியங்களின் சுமை அபரிமிதமாக இருந்ததால், அவரால் தினப்படி ஒரு திட்டவட்டமான கால கட்டத்தில் இயங்க முடியவில்லை. உடல் நிலை சரியாக இல்லாதபோதுகூட அவர் தமது பல்வேறு கடமைகளைக் கவனிக்கத் தம்மை மிகவும் வருத்திக் கொண்டார்.

அரசாங்கக் காரியங்களில் நேரில் உத்தர விடுவதானாலும் சரி, எழுத்து மூலமாக உத்தர விடுவதானாலும் சரி, டாக்டர் அண்ணாத்துரை கண்ணியமே உருவெடுத்தவராகத் திகழ்ந்தார். கடுயானதாக ஒரு வார்த்தைகூட அவர் பேசியதில்லை; எழுதியதும் இல்லை. அதிகாரிகளுக்குச் சொந்த முறையில் இருக்கக் கூடிய சில தாபங்களை அனுதாபத்துடன் அணுகுவார். அரசாங்க ஊழியரைச் சந்தோஷப் படுத்த மிகுந்த பிரயாசை எடுத்து கொள்வார். தவறிழைத்த சர்க்கார் ஊழியர்களைத் தண்டிக்கும் நிலை ஏற்பட்டால் அப்போது நீதியின் கடுமையை இரக்கத்தினால் தணித்து விடுவார்.

ஒரு நிர்வாகி என்ற முறையில் டாக்டர் அண்ணாதுரை தனித்தன்மை வாய்ந்தவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவரது மறைவு பொது மக்களுக்கு பெரிய நஷ்டம் என்றாலும் குறிப்பாகச் சர்க்கார் ஊழியர்களுக்குப் பேரிழப்பாகும்.

அண்ணன் குழந்தையாய்— தனது சிற்றன்னையான தொத்தாவின் இடுப்பில் அமர்ந்திருக்கிறார். அறுபது வருடமாய் அவர் முகத்தில் ஒளியேற்றிய அதே அடக்கம் — அப்போதும் இருக்கிறது.

எதிரே நிற்கும் வயதான மூதாட்டி கேட்கிறார்:

'' பையன் ரொம்ப சமத்து போலிருக்கு. குழைச்ச சந்தனம் வச்ச இடத்திலே அப்படியே இருக்கிறாப் போலே — அடக்கமா இருக்கானே !''

தொத்தாவுக்குப்பெருமிதம். திரும்பிப் பெரிதாகப் புன்னகை செய்து அண்ணனை முத்தமிட்டார்.

'' ஆமா . . . . என்ன செய்ய முடியும் — அதற்கு ?''

சிற்றன்னையின் கேள்வி.

'' மண்ணில் கால் அழுந்தினாத்தான் உயரமா வளருவாங்க ! நீங்க அப்படி இவனைப் புழுதி மண்ணிலே விட்டுப் பாருங்களேன் .'' என்று சொல்லிவிட்டு அந்த அம்மையார் போகிறார்.

பையன் வளர வேண்டுமே என்ற ஆசையால் அந்தப் பரிசோதனையையும் செய்து பார்க்கிறார் தொத்தா . மாலை நேரம் . தெருப் புழுதியில் அண்ணனின் கால்களை அளையவிட்டு நிற்கச் செய்து, '' துரை! இங்கேயே நில்லு; வந்துடறேன் !'' என்று கூவியவாறு உள்ளே செல்கிறார் தொத்தா.

அவர் உள்ளே சென்றதும் விடுவிடு என்று தெருவிலிருந்து ஒடிவந்து திண்ணையில் உட்கார்ந்து கொள்கிறார் அண்ணன்.

திரும்பி வந்த தொத்தா கோபத்துடன், ' உன்னை தெருவிலே நில்லுன்னா இங்கே வந்து உட்கார்ந்துகிட்டியா ?'' என்று அடிக்கக் கையோங்குகிறார்.

பரிதாபமாக அண்ணன் தொத்தாவைப் பார்த்து— தனது கால்களைக் காட்டி '' தொத்தா! தொத்தா! அழுக்கு !'' என்று மழலையில் கூறுகிறார்.

வாரியணைக்கிறார் சிற்றன்னை. '' என் கண்ணா ! அண்ணாதுரையல்லவா ? துரை மாதிரியே பேசறான் !'' என்று உச்சி முகர்ந்து முத்தமிடுகிறார்.

அண்ணன் கேட்கிறார், '' தொத்தா! எதுக்கு தெருவிலே நிக்கச் சொன்னே ?''

'' அப்படி தெருவிலே நின்னு காலிலே புழுதி பட்டாத்தான் உயரமா வளர முடியும் !'' என்கிறார் சிற்றன்னை.

அண்ணன் குறுகுறுவெனத்தொத்தாவைப் பார்க்கிறார்.

'' தொத்தா! நீ உயரம்தானே ?''

'' ஆமா! அதுக்கென்ன ?''

'' நீ நின்னியா — புழுதியிலே ?''

ஒரு கணம் திகைக்கிறார் தொத்தா. மகிழ்ச்சியோடு மறுபடியும் அணைத்து, '' துரை! என்னையே மடக்கிட்டியே !'' என்று கூறி ஆனந்தம் கொள்கிறார் தெரிவித்தார்!

அண்ணன்-குழந்தைப் பருவத்தில்!

பாராளுமன்றத்தில் முதல் முழக்கம்

இந்தியில் 'ராஜ்ய சபா' என்று அழைக்கப்படும் மாநிலங்களவையில் அண்ணா தமது கன்னிச் சொற்பொழிவை நிகழ்த்த 1.5.63 ஆம் நாளில் எழுந்தார்.

பத்திரிகைக் காலரியிலும் பொது மக்களின் காலரியிலும் அமர்ந்திருந்த எல்லாக் கண்களையும் கவரும் பொருளாக அவர்இருந்தார்.

ஏனெனில் — இந்த மனிதர்தான் தமிழக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அதிர்ச்சியைத் தந்தவர் என்று அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்.

அங்கவஸ்திரமும் அணிந்த அவர் — தோற்றத்தில் மனங்கவரும் வகையில் இல்லை. எனினும், இலட்சோப இலட்ச தமிழ் மக்கள் இந்த ஆடம்பரமற்ற உருவத்தின் பின்னால் இருக்கின்றன என்பதையும் அவர் எங்கு இட்டுச் சென்றாலும் தயாராக உள்ளனர்,என்பதையும் அறிகிற நேரத்தில் மனங்கவரும் தோற்றம்அவருக்கிருக்கிறது.

நண்பர்களுக்கு நம்பிக்கையூட்டி சந்தேகப் பிராணிகளுக்கும் குறை கூறுவோருக்கும்இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்து தமது

தமிழகத்துப் பொது மக்களின் கண்ணின் மணியாக அவர் இருக்கிறார் என்றும், இதையெல்லாம் விட பிரிவினைக் கொடியுயர்த்தி முழக்கமிடும் துணிச்சல் வாய்ந்த மனிதர் என்றும் அவர்கள் அறிந்திருந்ததால் அமைதியாக அமர்ந்து கூர்ந்து கவனித்தார்கள்.

தமிழில் பேசுவது போல் அவ்வளவு நன்றாக ஆங்கிலத்தில் அவரால் பேசமுடியுமா? இந்த ஐயத்திற்கு விடையாக — அவைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்— கேள்வி நேரத்திற்குப் பிறகு அவையில் இருந்தார். கேள்விகள் முடிந்தவுடனேயே அவர் — தமது இருக்கையை துணைத் தலைவருக்குத் தந்துவிட்டு வெளியேறுவது வழக்கம்.

ஆனால், அனைவரும்அண்ணா இன்று பேசுவதை நிறைந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

தமது பெயர் அவைத் தலைவரால் அழைக்கப்பட்டவுடன் அவர் (அண்ணாதுரை) எழுந்தார்.

நல்ல தேகக் கட்டும் எளிய வேட்டி — சட்டை

பேச்சின் மூலம்அண்ணாதுரை எழுந்துயர்ந்தார்.

அவரிடம் மக்கள் கூட்டம் ஒரு விஷயத்தில் ஏமாற்றம் அடைந்தார்கள். சிலர் பாராளு மன்றத்தில் செய்வது போல் இவரும் தீப்பொறி பறக்கும் பேச்சைப் பேசுவார்; உரக்கக் கூச்சலிடுவார்; ஜம்பப் பேச்சு பேசுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

அவரது பேச்சு — சொற்போர் வீரனின் பேச்சாக இருந்தது. காரணத்தோடும் புள்ளிவிவரங்களோடும் அவர் வாதாடினார். அவரது குறிக்கோளுக்காக எதிரிகளின் பேச்சிலுள்ள மேற்கோள்களைக் காட்டினார். கேட்போரின் உள் மனதிற்கு அவர் வேண்டுகோள் விடுத்தாரே தவிர — அவர்களது உணர்ச்சிக் கொந்தளிப்புக் கல்ல!

தவறுகளில்லாத ஆங்கிலத்தில் அடிக்கடி குறிப்பைப் பார்க்காமல் — பணிவோடு, விஷயத்தை விளக்கினார். தனது திராவிட நாட்டு விடுதலை கோரிக்கைக்கு எதிரிடையான வாதங்களுடன் போரிட்டார்.

மாநிலங்களிடையே நேசப்பான்மையும் அமைதியும் நிலவ வேண்டும் என்பதற்காக — பொருளாதார தொழில் வளர்ச்சி தென்னகத்தில் வேகமாக உருப்பெற வேண்டும் என்பதற்காக வடக்கிற்கும் தெற்கிற்குமான அரசியல் சமநிலை ஏற்படுத்துவதற்காக — இந்தியாவின் நிச்சயமான உறுதியான பாதுகாப்பிற்காகவும் அவர் தமது வழக்கை முன் வைத்தார். தகுந்த முறையில் காரணங்களை எடுத்து வைத்தார்;வாதாடினார்; சொற்போரிட்டார்— கோபமில்லாமல்; குரோதமில்லாமல்.

ஏனெனில், அவரது மூலக் கொள்கையை ஒப்புக் கொண்ட மக்கள் கூட்டத்தில் அவர் பேசவில்லை.

ஆயினும், அவரது பேச்சு கவனத்துடன் கேட்கப்பட்டது; மரியாதையுடன் கேட்கப்பட்டது; அப்போது ஒரு குறுக்கீடு கூட வரவில்லை. பேச்சு பற்றிய விமர்சனம் பின்னர்தான் வந்தது.

ஒரு மணி நேரப் பேச்சுக்குப் பின்னர்அவர்அமர்ந்த போது, நீண்ட கரவொலி எழுந்தது. வேறெந்த கன்னிச் சொற்பொழிவுக்ும் இவ்விதம் நிகழ்ந்ததில்லை.

பாராளு மன்றத்திலேயே அன்று ஒரு பெருநாள்!

அது ஒரு பெரிய பாராளு மன்ற நிகழ்ச்சிதான்.

ஃ

பேராசிரியர்
எம். ரத்தினசாமி
எம். பி



பெரியாரைக் காப்பாற்றினர் அண்ணா

அண்ணா அவர்களை "பெரியார்தான் வாழ வைத்தார்," என்று பலர் பேசி வருகிறார்கள். அண்ணா அவர்கள் பெரியாரைப் பாதுகாத்திருக்கிறார் என்பதற்கு பல நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

திருச்சி புத்தூர் மைதானத்தில் திராவிடகழக மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்போது ஆலயப் பிரவேசத் தீர்மானத்தை பெரியார் முன்மொழிந்தார்.

தூத்துக்குடி சிவசாமி அதை எதிர்த்தார். "கோயிலுக்குப் போவதை எதிர்த்து வருகிறோம். அங்கு போனால் மக்கள் அறிவு பாழாகும் என்று கூறுகிறோம். அப்படி இருக்கும்போது ஆதிதிராவிடர்களுக்கு ஆலயப் பிரவேசம் வேண்டுமென்பது சரியாகாது," என்று கூறினார். இதை ஆதரித்து நாவலர் நீண்ட நேரம் பேசி கூடியிருந்தோர் மனதைத் தன் பக்கம் திருப்பிவிட்டார்.

பெரியார் தீர்மானம் தோற்றுவிடும் நிலை ஏற்பட்டது. மேடைக்கு அருகில் இருந்த அண்ணா அவர்களை அழைத்து வந்தார்கள். அண்ணா பேசினார். சிவசாமி—நாவலர் பேசியதை ஆதரித்துப் பேசிவிட்டு, "கோவிலினுள் என்னதான் நடக்கிறதென்பதை அவர்களும் தெரிந்து கொள்ளட்டுமே" என்று பேசி பெரியார் தீர்மானத்தை ஆதரித்தார்—பெரியார் தீர்மானம் நிறைவேறியது. அன்று அண்ணா இல்லாவிட்டால் பெரியார் தீர்மானம் தோற்றிருக்கும்.

எனக்குப் பிடித்த அண்ணாவின் பண்பு

திரு. அண்ணாதுரையுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு இல்லை. ஆதலால், அவரது அந்தரங்கச் சிறப்புகளைப் பற்றி விவரிக்க எனக்கு ஆற்றலில்லை. அவர் தமது அரசியலுக்கும் பொது வாழ்வுக்கும் செய்த தொண்டை பற்றி சிலகுறிப்புகளை இங்கு எழுதுகிறேன்.

முன்னாள் லெப்டினென்ட் கவர்னர்
க. சந்தானம்

1962 லிருந்து இரண்டு ஆண்டுகள் அண்ணா அவர்களுடன் பார்லிமெண்டின் மேல் சபையான ராஜ்ய சபையில் அங்கத்தினராக இருந்தேன். எனக்கு அடுத்த ஆசனத்தை அவருக்குக் கொடுத்திருந்தார்கள். ஆயினும், அவர் வலிய என்னுடன் பேசுவதில்லை. எனக்கும் எப்பொழுதுமே பழக்கமில்லாதவர்களோடு காரணமில்லாமல் பேசுவதில் கூச்சம் அதிகம். ராஜ்யசபையின் அலுவல்களில் அவர் அதிக பங்கெடுத்துக் கொள்ளுவதில்லை.

அண்ணாவின் அழகிய ஆங்கிலச் சொற்பொழிவு!

ஆனால் முக்கிய அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் எழும் பொழுது மிகவும் திறமையுடன், ஆங்கிலத்தில் பேசுவார். கண்ணியமாகவும்



ஆனால் உணர்ச்சி ததும்ப கேட்போர் மனத்தில் பதியும்படி சிறந்த ஆங்கிலத்தில் அவர் பேசும்பொழுது சபையில் அனைவரும் மிகவும் கவனத்துடன் கேட்பார்கள். அவ்விதச் சொற்பொழிவுக்குப்பின் நான் அவரை மெச்சுவதுண்டு. புன்சிரிப்பாலேயே அதை ஏற்றுக் கொள்ளுவார். நான் அடிக்கடி விவாதங்களிலும், மசோதாக்களின் பரிசீலனைகளிலும் கலந்து கொள்ளுவது வழக்கம். காங்கிரஸ் கட்சி அங்கத்தினராகவிருந்தும், எனது மனச்சாட்சிக்கும் சிந்தனைக்கும் தோன்றிய கருத்துக்களையே கூறுவேன். அதற்காக என்னை அவர் அபூர்வமாகப் பாராட்டுவார். சாதாரணமாக அவரது முகக் குறிகளிலிருந்து என்னுடைய பேச்சு அவருக்குப் பிடித்ததா என்பது விளங்கும். முக்கியமாக மத்திய, ராஜ்ய அரசுகளின் உறவுகளைப் பற்றி நான் வாதிக்கும்பொழுது மிகவும் கவனத்துடன் கேட்பார்.

1964'ல் நான் ராஜ்ய சபையிலிருந்து விலகினேன். பின்னர் சில கமிட்டிகளில் ஈடுபட்டும், பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவதிலும், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் வெளியீட்டு நிலையத்திற்கு மக்கள் ஆட்சியைப் பற்றி ஒரு நூல் எழுதுவதிலும் எனது முழு கவனத்தைச் செலுத்தியிருந்தேன். வரப்போகும் தேர்தலுக்குக் கட்சிகளின் ஏற்பாடுகளைப் பற்றியும், பிரச்சாரச் சண்டைகளைப் பற்றியும் நான் பத்திரிகைகளில் கூட அதிகமாகப் படிப்பதில்லை. ஆனால் எனது மகன் திரு. ராமானுஜம் காங்கிரஸ்—தி.மு.க. மோதல்களின் விசேஷ சம்பவங்களைப் பற்றி எனக்குத் தினந்தோறும் கூறுவான். பல வருஷங்களாகவே காங்கிரஸ் தலைவர்கள் தாங்கள் ஆளப் பிறந்தவர்களென்று அகம்பாவம் கொண்டு மற்றக் கட்சிகளைத் துரும்புகளாக மதிப்பதை நான் கண்டிப்பதுண்டு. 1962 தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கும் பொழுது 20 அல்லது 10 சதவீதமுள்ள தொகுதிகளுக்குகாங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தாமலிருப்பது புத்திசாலித்தனமாகும் என்று திரு. ஜவஹர்லால் நேருவிடம் சொன்னேன். அப்படிச்செய்தால் காங்கிரஸ் போட்டியிடாத தொகுதிகளையே மற்றக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாடுவார்கள், எல்லோரும் சேர்ந்து காங்கிரசுக்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்யமாட்டார்களென்று வாதித்தேன்.

அகம்பாவத்துக்கு வீழ்ச்சி!

அவர் அதை ஏற்கவில்லை. அதன் பலன் அத்தேர்தலில் ஓரளவே தோன்றியபோதிலும், பல ராஜ்யங்களில் காங்கிரசின் பெரும்பான்மை குறைந்துவிட்டது. திரு. நேருவும் அவருக்குப்பின் திரு. லால் பகதூர் சாஸ்திரியும் இறந்து நாட்டின் பொருளாதார நிலை மிகவும் சீர்குலைந்திருந்த போதிலும் காங்கிரஸ் தலைவர்களுக்கு அறிவோ, பணிவோ அதிகரிக்கவில்லை. அதன் காரணமாக, 1967 தேர்தல்களில் பல ராஜ்யங்களில் காங்கிரஸ் தோற்றதோடு, நாடு எங்கும் அதன் செல்வாக்கு மிகவும் குறைந்துவிட்டது.

1967 தேர்தல் நடக்கும் பொழுதே தமிழ்நாட்டில் காங்கிரசுக்குச் சோதனை காலம் வந்துவிட்டதென்று எண்ணினேன். திரு. அண்ணாத்துரையையும், ராஜாஜியும் ஒன்றுசேர்ந்தால் தமிழ் மக்களுக்கு அவர்களை ஆதரிப்பதைவிட வேறு வழியில்லை. தீர்க்கதரிசனத்துடன் ராஜாஜி தி.மு.க.வை வலுப்படுத்தி, தனது சுதந்திராக் கட்சிக்கு அதன் ஆதரவுடன் சில ஸ்தானங்களோடு திருப்தியடைந்தார். தமிழ்நாட்டில் காங்கிரஸ் படுதோல்வியுற்றுத் திரு. அண்ணாத்துரை முக்கிய மந்திரியானதில் அண்ணாவைவிட ராஜாஜிக்கே அதிக மகிழ்ச்சி என்று எண்ணுகிறேன்.

பதவி ஏற்ற தினத்தன்று அண்ணா அவர்கள் என்னைப் பார்க்க வந்தார். நான் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நான் தேர்தல் பிரசாரத்தில் நேரிலோ மறைமுகமாகவோ ஈடுபடவில்லை. ஆதலால் அவர் வந்தது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. ஓரளவு எனது மகன் ராமானுஜம் செய்த பிரச்சார உதவிக்கான மறைமுக சன்மானமாகவிருக்கலாம். தனக்கு விரோதமில்லாதவர்களின் ஒத்துழைப்பை விரும்பியும் வந்திருக்கலாம். அவர் என் வீட்டிற்கு வந்ததுமே டில்லியிலிருந்து திருமதி இந்திரா காந்தி டெலிபோனில் பேச விரும்புவதாகவும் என் வீட்டிலேயே பேசலாமென்றும் செய்தி வந்தது. அவர் 10 நிமிஷம் பேசிக்கொண்டிருந்து, பின்னர் வேறு பல அலுவல்களால், சில நிமிஷங்களே அங்கிருந்தார். தி. மு. க. மந்திரிசபைக்கு என்னால் செய்யக்கூடிய உதவியிருந்தால் நான் அதற்குத் தயார் என்று மட்டும் கூறினேன்.

அதன் பிறகு, சிலபொது விழாக்களிலும், விருந்துகளிலுமே நான் அண்ணாவைச் சந்தித்தேன். மத்திய, ராஜ்ய விவகாரங்களைப் பற்றி என் யோசனைகளைப் பற்றிய ஓர்

∴ நான் எதிர்பார்க்காத சந்திப்பு!

∴ இன்னும் அவர் வாழ்ந்திருந்தால்!

குறிப்பு கேட்டார். அதையும், அப்பிரச்சினையின் மீது தான் பம்பாயில் நிகழ்த்திய கட்டுரையின் நகலையும் அனுப்பினேன். 1967 முடிவில் திரு. மாதவன் ஒரு நாள் என்னை அழைத்து, தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி ஓர் விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தப்போவதாகவும், அதற்கு என்னைத் தலைமை தாங்குவதற்கு அண்ணுவிரும்பியதாகவும் கூறினர். ஏற்றுக்கொண்டேன்.

வெண்ணெய் திரண்டபோது

தி. மு. க. பதவி ஏற்றது முதல் அண்ணுவின் போக்குகளை நான் பட்சபாதமின்றி நடுநிலையிலிருந்து கவனித்து வந்தேன். ஹிந்திக்கு விரோதமாக நடைபெற்ற கிளர்ச்சியில் மாணவர்களை கூடிய வரையில் வன்முறைகளில் போகாதபடி அவர் பார்க்க முயற்சி செய்ததாகக் கேள்விப்பட்டேன். அவருடைய நிலைமை சில விஷயங்களில் மிகவும் நாசூக்காக இருந்ததை உணர்வேன். மாகாண சுதந்திரத்தையும் வற்புறுத்துவதில் சிறிதும் தளராமல், மத்திய அரசோடு சுமுகமாக உறவு ஏற்படுத்த அவர் செய்த முயற்சியை மிகவும் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டு அரசின் நிதிநிலை கவலைக்கிடமாகவே இருந்தது. அதற்கு முன்னிருந்த அரசாங்கங்கள் தாராளமாகச் செலவு செய்ய வசதிகள் இருந்தன. திரு. அண்ணுத்துரையும், தனது கட்சியின் பெருமைக்காக அவசரப்பட்டு பல கோடிகளை விரயம் செய்திருக்கலாம். ஆனல் அதை அவர் விரும்பவில்லை. சிக்கனமாக ராஜ்யத்தை நடத்தவே விரும்பினர். திட்டங்களை நன்கு ஆராய்ந்து முடிவு செய்யும் தருவாயில் நோய்வாய்ப் பட்டுவிட்டார். வெண்ணெய் திரண்டு வரும் பொழுது குடமுடைந்து போவதுபோல் மறைந்தும் விட்டார்.

இன்னும் ஐந்தாறு ஆண்டுகளாவது இருந்திருந்தால், தமிழ் நாட்டின் அரசியலுக்கு இரண்டாவது திடமான ஆணிவேர் கொடுத்து இந்த ராஜ்யத்தை பாரதத்தில் மிகச் சிறந்த ஜனநாயகமாகச் செய்திருப்பார். தமிழையும் ஆங்கிலத்தையும் நமது மக்களின் முன்னேற்றத்திற்கு இரண்டு ஒப்பற்ற கருவிகளாகச் செய்திருப்பார்.

பல சமூகப் பிரச்சினைகளில் அவர் மிகத் தீவிரவாதியாகவிருந்தும், பெரும்பாலான மக்களைப் பயமுறுத்தி, பலாத்காரமாக எவ்விதச் சீர்திருத்தமும் செய்ய முடியாதென்பதை அவர் முற்றிலும் உணர்ந்தார்.

அவர் இறந்தார் என்று கேட்டு எப்படித் தமிழ் நாடு கொதித்தெழுந்தது என்பதை மற்றவர்களைப் போல் நானும் நேரில் கண்டேன். சென்னையில் கூடிய கூட்டங்கள் 1948 ஜனவரி 30'ம் தேதி காந்தியடிகள் கொல்லப்பட்டார் என்று செய்தி பரவியவுடன் டில்லியின் மக்கள் துக்கம் தாங்காமல் பிர்லா மாளிகையை முற்றுகை போட்டது நினைவுக்கு வந்தது. மகாபாரத யுத்தத்தில் 10 நாள் போர் புரிந்து பீஷ்மர் பெற்ற புகழை சில மணிகளில் அபிமன்யூ பெற்ருன். மக்கள் மனத்தைக் கவர்வதற்கு நீண்ட ஆண்டுகளோ, பெரிய சாதனைகளோ தேவையில்லை. பெரிய காரியங்களைச் சாதிக்க ஆற்றலும், ஆவலும், குணமும் தைரியமும் இருப்பதாக அவர்களுக்குத் தெரிந்தால் போதும். அண்ணுத்துரை ஜீவித்திருந்தால் தமிழ்நாட்டுக்கும், பாரதத்திற்கும் பெரிய சேவைகள் செய்திருப்பார் என்பது நிச்சயம். அதை எண்ணியே அவரை எல்லாத் தமிழ் மக்களும் என்றும் நன்றியுடன் நினைத்துப் போற்றுவார்கள்.

உற்ற தோழன்

மேட்டூர்—மலைமீது! கோலார்! பாதாளத்தில்! மலைமேல் இருக்கும் நீரைக் கொண்டு பாதாளத்தில் இருக்கும் சுரங்கத்தைப் பட்டப் பகல் போலாக்கியுள்ளன—மின்சார விளக்குகள்! இந்த அற்புதத்தைச் சாதித்துள்ளன விஞ்ஞானத்தைவிட நமக்கு உற்ற தோழன் வேறுயார்?

வானம்பாடி பறந்ததே

1 விண்மீன்கள் புடைசூழ்ந்து நிற்க வான
வெளியினிலே முழுமதியொன் ருெளிரக் கண்டோம்
மண்மீது பயிர்தளிர்க்க உயிர்த ளிர்க்க
வளர்நிலவைப் பாய்ச்சியது மகிழ்ந்தோம்; அந்தத்
தண்மதியை முகிலொன்று வந்து சூழத்
தயங்கொளியும் மங்கியது மயங்கி நின்ருேம்;
கொண்மூதான் விலகிவிடும் மேலைக் காற்றுக்
கூடிவரும் காலமிதென் றெண்ணி நின்ருேம்.

2 காற்றடித்த வேகத்தாற் கொடிய மேகம்
கலைந்ததுகண் டொருவாறு தேறி நின்ருேம்;
கூற்றெடுத்த படையெடுப்பில் தோற்று விட்டோம்;
குளிர்மதியைக் கருணையிலான் விழுங்கி விட்டான்!
காற்றடிக்கச் சிதறுண்ட மேகம் எங்கள்
கண்களிலே புகுந்துநிலை நின்ற தம்மா!
கூற்றுவற்குப் பசிஎடுத்தால் இந்த நாட்டைக்
குளிர்விக்கும் முழுமதிதான் கிடைத்த தேயோ?

3 தமிழ்வானில் வட்டமிட்டுச் சுற்றிச் சுற்றித்
தனக்குநிகர் இல்லையெனப் பாடிப் பாடி
அமிழ்தனைய இசைபரப்பி நம்மை எல்லாம்
அகம்மகிழச் செய்ததொரு வானம் பாடி.
இமிழ்கடலுக் கப்பாலும் பறந்து சென்றே
இனியதமிழ் பாடிவரக் கண்டு வந்தோம்;
உமிழ்சினத்துக் காலனெனும் வேடன் கண்டான்
ஒருசிறிதும் இரக்கமின்றி வீழ்த்தி விட்டான்.

4 வடிவமைந்த யாழொன்று தனது கையில்
வைத்திருந்தாள் தமிழன்னை; அதனை மீட்டிப்
படிமுழுதும் இசைமயமாப் படைத்து நின்ருள்;
படர்ந்துவரும் இசைத்தேனைப் பருகி மாந்தர்
உடல்நிமிர்ந்தார் உளம்நிமிர்ந்தார் உயர்வும் உற்ருர்
உயர்விதனைப் பொறுக்கிலாக் காலன் என்னும்
கொடிய ஒரு பாவியவன் யாழ்வறிந்தான்
குலைத்துவிட்டான் முகாரிப்பண் பாடு கின்ருேன்.

5 வித்தாகி முளையாகிக் கழனி எங்கும்
விளைகின்ற பயிராகிச் செழித்து நல்ல
கொத்தாகிப் பயனுகிக் கூடுங் காலைக்
கொள்பயனைச் சிதைத்தானேர் கொடிய பாவி!
பித்தாகித் திரிகின்ருேம் துன்ப மென்னும்
பேராழி மூழ்குகின்ருேம் தமிழர் வாழ்வின்
சொத்தாகி வந்தானை அண்ணு என்னும்
சொல்லுக்கே உரியானைப் பறித்தான் அம்மா!

—கவிஞர் முடியரசன்



அவர் அறிஞர்தான்!

1945-ல் அறிஞர் அண்ணா அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி: ‘ஜின்னா ஆரியரா? திராவிடரா? முஸ்லிமா?’ அதற்கு அண்ணா சொன்ன பதில் என்ன?

★

★

★

நாஞ்சில் நாடு, திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலத்தில், கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலை பகுத்தறிவுப் பணி புரிவதில் தலைசிறந்து விளங்கியது. 1945-ம் ஆண்டின் முற்பகுதியில் அதன் ஆண்டு விழா நிகழ்ச்சி யொன்று வழக்கம் போல் சிறப்பான ஏற்பாடுகளுடன் நடக்கஇருந்தது.

அந்த விழாவுக்கான வரவேற்புக் குழு என் தலைமையில் செயல்பட்டது. திராவிட நாடு கொள்கையும் இராமாயண எதிர்ப்புப் பிரசாரமும் உச்சக் கட்டத்திலிருந்த நேரமாகும் அது. அப்போது திராவிட இயக்கத்தின் தளபதியாகவும் வாதத் திறமையில் ஈடும் எடுப்பும் அற்றவராகவும் விளங்கி வந்த அறிஞர் அண்ணா அவர்களைப் பிரதம பேச்சாளராக அழைத்திருந்தோம்; அவர்களும் திருநெல்வேலியிலிருந்துபஸ்ஸில் வருவதாகப்பதில் விடுத்திருந்தார்கள்.

விழா நிகழ்ச்சியன்று அதிகாலையிலேயே, என் தலைமையில் அமைந்திருந்த இளைஞர் பட்டாளத்துடனும், ஏராளமான மலர் மாலைகளுடனும் பேருந்து நிலையம் சென்று காத்திருந்தோம்.

திருநெல்வேலியிலிருந்து, வண்டி வந்து சேர்ந்தது, ‘பெரியார் வாழ்க; அண்ணா வாழ்க’ என்ற [illegible]முழக்கம் விண்ணை எட்ட, நான் என் மாலை, முதல்மா[illegible] விழ வேண்டும் என்ற ஆவலுடன் முன்னே சென்[illegible], நாகரீகமாக உடை யணிந்து வந்தஒருவர் கழுத்தில் மாலைசூட்டினேன். அவ்வளவுதான் என்னை தொடர்ந்து இதர தொண்டர்களும் அவருக்கு மாலைகள் அணிவித்தனர். ஆனால் அவரோ திகைத்துப் போய் ‘‘அடடே! என்ன தவறு செய்து விட்டீர்கள்? அண்ணா பின்னால் அல்லவா வருகிறார்!’’ என்று வருந்திய குரலில் தெரிவித்ததும் எனக்கு எப்படியிருந்திருக்கும்.

ஏமாற்றத்துடன் பின்னால் சென்றேன். மிக மிக எளிய உடைகள் — நீண்ட பயணத்தின் விளைவால் அழுக்கடைந்த நிலையில் — தலையெல்லாம் கலைந்து — சோர்வுடன் காணப்பட்டஅந்த உருவம்தான் அறிஞர்அண்ணா அவர்கள் என்பதை அறிந்து — அவர்களின் அறிவாற்றலை பற்றிக் கேள்விப்பட்ட நான், அவர்களை முன்னதாக நேரில் பார்த்தறியாத நான் — வரவேற்கப் போய் — திருநெல்வேலி தமிழர் உணவு விடுதி உரிமையாளரும் நமது இயக்கத்தின் அந்நாள் பிரமுகருமான திரு பிரமநாயகம் அவர்களுக்கு மாலை சூட்டியதை எண்ணி வெட்கப்பட்டேன்.

என்ன செய்வது? என்னிடம் அவ்வமயம் வேறு மாலை இல்லை. அண்ணா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விழாவுக்கு அழைத்துச் சென்றேன்.

விழா துவங்கியது. இந்த விழாவைச் சிறப்பிக்குமாறு மதுரை தமிழ்ச் சங்க புலவர் தேவாமிர்தப் பிரசாங்கக் களஞ்சியம்—சதாவதானி — டாக்டர் —அல்லாமா செய்குத்தம்பிப் பாவலர் அவர்களை அழைத்திருந்தோம். உடல் நலிவுற்ற நிலையிலும் அன்னார் வருகை தந்து மேடையில் வீற்றிருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். அவ்வளவுதான். எராளமான ம[illegible] தோழர்கள் கியூ வரிசையில் வந்து நின்[illegible] தாள்களை அளிக்கத் தொடங்கினார்கள்.

அண்ணாஅவர்கள் ‘‘எப்பொருள் யார், யார் வாய் கேட்பினும்’’ என்ற குறளைக் கூறி, இவ்வளவு தமிழறிவு படைத்த நாஞ்சில் மக்கள் வள்ளுவர் கூறியவாறு கேட்பவர் எந்தக் கருத்து உள்ளவரானாலும், சொல்பவன் எந்தக் கருத்தைக் கூறினாலும் அதனைக் கேட்டறிந்து அதிலுள்ள உண்மைப் பொருளை அறிய வேண்டும் என்பதையும் மறந்தீரோ என்று, குறளுக்குப் புது விளக்கம் கூறினார்கள்.

அது ஒன்றை மட்டும் செவிமடுத்த பெரும்புலவர் செய்குத் தம்பிப் பாவலர் அவர்கள் ஆகா இவர் அறிஞர் தான். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதுமடா. நான் இனி வருகிறேனய்யா’’ என்று விடை பெற்றுச் சென்று விட்டார்.

சுமார் 3 மணி நேரம் அண்ணா அவர்கள், கேள்விகளுக்கு அடுக்கடுக்காய் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். கேள்விகளைக் கொண்டே கேட்டவரை மடக்கியும் ஏற்ற பதில்களை உடனடியாய் உரைத்தும் தடைபடாத அவர்கள் சொற்பொழிவைக் கேட்ட அனைவரும் வியப்புக் கடலில் மூழ்கினர்.

அன்று கேட்கப்பட்ட கேள்விகளில் சில இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளன.

ஜின்னா ஆரியரா திராவிடரா முஸ்லிமா என்று ஒரு கேள்வி. எங்களுக்கெல்லாம் ஒரே திகைப்பு; அண்ணா என்ன பதில் சொல்ல முடியும் என்று.

கேள்வியைப்படித் தமறுகணமே பதில் துள்ளி வந்து விழுந்தது.

ஸ்ரீ ஜின்னா ஆரியர்.
ஜனாப் ஜின்னா முஸ்லிம்.
திரு ஜின்னா திராவிடர்.

அப்போது ஏற்பட்ட கையொலி அடங்கப் பத்து நிமிடம் பிடித்தது.

திருக்குறளைச் சட்டமாக இயற்றினால் ஏற்றுக் கொள்வீர்களா? என்பது மற்றொரு வினா.

அதற்கு விடை: மனு நீதியைச் சட்டமாக ஏற்றுக் கொண்டிருக்கிற நாங்கள் திருக்குறளையா சட்டமாக ஏற்கமறுப்போம்? ஆனால் சட்டம் உண்மையான சட்டமாக இருக்க வேண்டும்.

அவ்வளவு கேள்விகளுக்கும் விடையளித்த பிறகே அண்ணா அவர்கள் அன்றைய அரசியல் நிலை பற்றித் தமது சொற்பொழிவைத் தொடங்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களை நான் அறிமுகம் செய்து கொண்ட நிகழ்ச்சியை நினைத்தால், இன்றும் என்னையறியாமல் பூரிப்படைகிறேன்.

- நீலநாராயணன்



★

உங்களது அசல் மற்றும் வட்டிக்கு
தமிழ்நாடு அரசு உத்திரவாதமளிக்கிறது

பிக்ஸட் டிபாசிட்டுகள் :- ரூ. 50,000 வரை (உட்பட) கீழ்க்கண்ட விசேஷ மற்றும் மிக்க கவர்ச்சியான வட்டி விகிதங்கள் அளிக்கப்படுகின்றன.

1 ஆண்டு மற்றும் அதற்கு மேலும் -
ஆனால் 2 ஆண்டுகளுக்கு உட்பட்டு - ஆண்டுக்கு 5¾ சதவிகிதம்

2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் -
ஆனால் 3 ஆண்டுகளுக்கு உட்பட்டு - ஆண்டுக்கு 6 சதவிகிதம்

3 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும் -
ஆனால் 5 ஆண்டுகளுக்கு உட்பட்டு - ஆண்டுக்கு 6¼ சதவிகிதம்

5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் - ஆண்டுக்கு 6¾ சதவிகிதம்

ஏற்றுக்கொள்ளப்படும் குறைந்த பட்ச டிபாசிட் ரூ. 1000

MIIC

தி மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிட்.,

LLA கட்டிடம், 150/A, மவுண்ட் ரோடு, சென்னை-2.
கிளை: 1231 தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்.

தொலைபேசி: 83079

டி. வி. நரசிம்மன் M.A., C.A.I.I.B.
செயலாளர்

சக்தி ஷுகர்ஸ் லிமிடெட்,

உயர்ந்தரக வெள்ளை ஸ்படிக சர்க்கரை (White Crystal Sugar)
தயாரிப்பாளர்கள்

Producers of:
QUALITY SEEDS OF HYBRID SORGHUM, MAIZE, BAJRA, I. R. 5 PADDY Etc., (Certified by NSC)

பதிவு பெற்ற தலைமை அலுவலகம்:

72, சென்குப்தா தெரு, தபால் பெட்டி நெ. 960, ராம்நகர், கோயமுத்தூர்-9.

தொலைபேசி: 2555
(3 லைன்கள்)

தந்தி: Sugarking
டெலக்ஸ்: 042/333

புதுமைகள் குலுங்கும் புதிய தமிழகம்!

காலம் மாறிவிட்டது; புதிய பொற்காலம் அரும்பிவிட்டது! புத்துணர்ச்சி, சமூகநீதி, மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு, அறிவியல் வளர்ச்சி ஆகியன நிறைந்த புதிய தமிழகம் இன்று உருப்பெற்று வருகின்றது.

கோட்டையில் தமிழ்

★ இந்த ஆட்சியில் தமிழ்நாடு தன் பெயரினைப் பெற்றது.
அரசாங்கத் தலைமைச் செயலகத்திலிருந்து ஊராட்சி மன்றம் வரை எங்கும் எதிலும் தமிழ்!

★ படி அரிசி! புன்செய் நிலங்களுக்கு நிலவரி ரத்து!
மக்களின் குறைகள் உடனுக்குடன் களைய மனுநீதி முறை!

★ விவசாயப் பெருக்கத்துக்கு உடனுக்குடன் உதவி.
"வறட்சித் துயர் துடைப்புப்" பணிகளில் மட்டும் இதுவரை ரூ. 15 கோடிக்கு மேல் பெறுமான வேலைகள்!

★ இரண்டரை ஆண்டுகளில் புதிதாக ஒன்றரை லட்சம் பம்பு செட்டுகளுககு மின்சார இணைப்பு!

★ ஊர்ப் பொது நன்மைக்கு உழைக்க - சீரணி

★ அரிசன மக்கள் முன்னேற்றத்துக்கான உதவிகள்! பின்னடைந்த மக்கள் நலனுக்கர்க தனித்துறை; தனி அக்கரை! கலப்பு மணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம்! சுய மரியாதை திருமணச் சட்டம்! எண்ணற்ற மாற்றங்கள்! எத்தனை ஏற்றங்கள்!

மலைச்சாலை அமைக்கும் சீரணிப் படையினர்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மரபோடு வளரும் நல்ல பணிகளின் சிறப்புக்களை மக்கள் உணருகின்றனர்.

குறள் நெறியைக் கடைப்பிடிக்கும் இன்றைய அரசுக்கு ஊக்கமூட்டுகின்றனர்.

தமிழ்நாடு செய்தித்துறை இயக்குநர் வெளியிட்டது.

ARC

தேய்ந்த டயரை 12 முறை புதுப்பித்து டயர் புதுப்பிக்கும் தொழிலிலேயே ஒரு சாதனையைச் செய்துள்ளோம் என்பதை லாரி, பஸ் உரிமையாளர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்களுடைய தேய்ந்த டயர்களையும் எங்களுடைய தொழிற்சாலையில் புதுப்பித்து அதிக லாபம் அடையுங்கள்.

★ ★ ★

ஆனைமலை ரிட்ரெடிங் கம்பெனி,

தலைமை அலுவலகம் : கோயமுத்தூர். கிளை : திருநெல்வேலி.

திருச்சியில் எமது புதிய கிளை விரைவில் திறக்கப்படும் என மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

மறைந்த மாமேதை தமிழக முதலமைச்சர், மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை அவர்களின் 61-வது பிறந்ததின விழாவிற்கு எமது அஞ்சலி!



சுகுணு இண்டஸ்ட்ரீஸ்,

ஒற்றைஃபேஸ் மற்றும் மூன்றுஃபேஸ் மின்சார மோட்டார் உற்பத்தியாளர்கள்
வீட்டு உபயோகத்திற்கான பம்பு செட்டுகளில் ஸ்பெஷலிஸ்டுகள்.

தொழிற்சாலை :
148, படேல் ரோடு, கோவை-9
போன் : 25117

தலைமை அலுவலகம் :
316, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை - 1.
போன் : 22273

அண்ணு அறுபது நாம துதி

தில்லை வில்லாளன் எம்.பி.

அண்ணு பிறந்து அறுபதாண்டுகள் முடிந்து விட்டன.
தமிழ் ஆண்டுகள் என்று அறுபதாண்டுகளைத் தான் குறிப்பிடுகிருர்கள்.
அண்ணு, சௌமிய ஆண்டில் பிறந்தவர் என்பதால், சௌமியன் என்ற புனைபெயரில் எழுதி வந்திருக்கிருர்.
கழகத் தலைவர் கலைஞரும், பொதுச் செயலாளர் நாவலரும், அதனுல்
அறுபது சிலைகள், அறுபது இடங்களில் என்று அறிவித்து உள்ளனர்.
வைதீகர்கள், திருமாலை அறுபது பெயர்கூறி வணங்கிடுவர்—
அதுபோல், நம் அண்ணனை, அறுபது பெயரால் அழைத்து, வணங்கி மகிழ்கின்றேன்.

அண்ணு வாழ்க!
அறிஞர் வாழ்க!
கலை வல்லவரே வாழ்க!
இசைத்தமிழ் வளர்த்தவரே வாழ்க!
நாடக மன்னரே வாழ்க!
திரைப்பட எழுத்து வேந்தரே வாழ்க!
நடிகர் பெருமகனுரே வாழ்க!
காஞ்சிக் கருவூலமே வாழ்க!
'திராவிடநாடு' கண்ட ஆசிரியரே வாழ்க!
'ஓம்ரூல்' 'ஓம்லாண்ட்' தந்த ஆங்கில மேதையே வாழ்க!
கழகம் கண்டவரே வாழ்க!
கழகம் வளர்த்தவரே வாழ்க!
பொதுச் செயலாளரே, வாழ்க!
புதுமை விளைத்தவரே வாழ்க!
போராட்டங்கள் புரிந்தவரே வாழ்க!
தனிநாடு கேட்டவரே வாழ்க!
தமிழர் உரிமைப்போர்த்தளபதியே வாழ்க!
திராவிடர் உரிமைக்குரலே வாழ்க!
தென்னுட்டு மன்னவரே வாழ்க!
பெரியாரின் தலைமகனே வாழ்க!
ராசாசி உளங்கவர்ந்தவரே வாழ்க!
இசுமாயில் புகழ்ந்தவரே வாழ்க!
எக்கட்சித் தலைவரும் ஏற்றவரே வாழ்க!
எதிர்க்கட்சித் தலைவரும் போற்றியவரே வாழ்க!
கூட்டணி அமைத்தவரே வாழ்க!
காங்கிரசை வேரொடு வீழ்த்தியவரே வாழ்க!
தமிழகத்தின் முதல்வரே வாழ்க!
அகில உலகப்புகழ் பெற்றவரே வாழ்க!
டாக்டர் அண்ணுவே வாழ்க
ஆங்கிலப் புலவரேவாழ்க!
தமிழ்த் தென்றலே வாழ்க!
தமிழகத்து பெர்னுட்ஷாவே வாழ்க!
அடுக்குச் சொல்அழகரே வாழ்க!
ஆற்றல் மிக்க பேச்சாளரே வாழ்க!
இளைஞர் படைத்தலைவரே வாழ்க!
முதியோரும் புகழும் பெருமை பெற்றவரே வாழ்க
தம்பியுடையுயவரே வாழ்க!
எப்போதும் தோற்காத இளம்படையைவரே! வாழ்க!
எதையும் தாங்கும் இதயம் தந்தவரே வாழ்க!
உருவில் சிறியவரே வாழ்க!
உள்ளத்தால் இமயமானவரே வாழ்க!
அன்பின் பிறப்பிடமே வாழ்க!
அருளின் திருவுருவே வாழ்க!
அடக்கத்தின் உருவகமே வாழ்க!
எளிமையின் எடுத்துக்காட்டே வாழ்க!
தூய்மையின் சிலையே வாழ்க!
வாய்மையின் உருவே வாழ்க!
தோழமையின் ஊற்றே வாழ்க!
ஏழ்மை கண்டு இரங்குபவரே வாழ்க!
எளியவரின் பிரதிநிதியே வாழ்க!
தாழ்ந்தவரின் தனிப்பெருங்குரலே வாழ்க!
சீர்திருத்தச் செம்மலே வாழ்க!
புரட்சிக் கனலே வாழ்க!
புதுமைப் புனலே வாழ்க!
ஆற்றல் அரசரே வாழ்க!
மக்கள் மனங் கவர்ந்தவரே வாழ்க!
ஏழைகள் மனங்குளிர்வித்தவரே வாழ்க!
இந்நாட்டின் இணையற்ற தலைவரே வாழ்க!
எங்கள் அண்ணனே வாழ்க!

இனி உழைப்பாளி விஞ்ஞானி பொதுநல ஊழியன் என்பவரை ஆதரிக்கும் புதியவழியில் நடவுங்கள். உலகம் சீர்திருந்தும்!

- அண்ணு



'முரசொலி' நமதண்ணு!

தமிழகம் செழித்திடத்
    தமிழ்மொழி தழைத்திட உழைப்பவர் 'தமிழ்'அண்ணு
அமிழ்தெனும் மொழிதனில்
    அருவியின் நடையினை அளிப்பவர் 'இதழ்'அண்ணு
கமழ்ந்திடும் இலக்கியக்
    கவின்மலர்ப் பொழில்தனில் உலாவரும் 'குறள்'அண்ணு
தமிழ்தனை இகழ்ந்திடும்
    தருக்கரை ஒடுக்கிடப் பிறந்தவர் பெயர் அண்ணு!

இடிகுரல் முழக்கென
    எரிமலை வெடிப்பென உரைதரும் 'திறம்'அண்ணு.
பொடிகலந்(து) உரையுடன்
    எதிர்ப்பவர் இடுப்பினை ஒடிப்பவர் எழில் அண்ணு.
நொடியினில் நகைச்சுவை
    வெடியினைக் கனிவுடன் வெடிப்பவர் பெயர் அண்ணு
தடியுடன் வருபவர்
    அடிபணிந்(து) அடங்கிட அணைப்பவர் நமதண்ணு!
மொழிமரக் கலம்கரை
    அமைந்திட உதவிடும் கலங்கரை விளக்(கு) அண்ணு
எழுகதிர்ச் சுடரென
    அழிவிலாத் தமிழ்இனத் தலைமகன் பெயர்அண்ணு
விழிநிகர் தலைவனுய்
    வழிபடும் இறைவனுய் விளங்கிடும் இறைஅண்ணு
தடைபல உடைபடப்
    படைபல நடத்திய தளபதி அவர் அண்ணு
படைபலம் பெருகிட
    மறத்தமிழ்ச் சரித்திரம் படைத்திடும் புலிஅண்ணு
நடையிலே தமிழினம்
    பகைக்குலம் நடுங்கிட நடந்திடும் 'மறம்'அண்ணு.
உடையிலே எளிமையாய்
    உணர்விலே இமயமாய் ஒளிர்பவர் பெயர்அண்ணு.
துணிவுடன் வடபுலத்
    துரைத்தனம் எதிர்த்திடும் துரைமகன் நமதண்ணு
கனிவுடன் துணிவுடன்
    தெளிவுடன் கருத்தினை வழங்கிடும் நமதண்ணு
முனிவுடன் வரும்வினுக்
    களின்முனை முறிந்திடப் பதில்விடை தரும்அண்ணு.
அணியுடன் உவமையின்
    அழகுடன் உரைதரும் அறிஞராம் நமதண்ணு!
அரசினை நடத்திடும்
    திறமுடன் விளங்கிய முதல்வராம் நமதண்ணு!
தரிசெலாம் விளைநிலம்
    பரிசெலாம் 'இலட்சியம்' செழித்திடச் செயும் அண்ணு
அரிசியின் விலைக்கனம்
    அடங்கினும் தலைக்கனம் இலாதவர் பெயர்அண்ணு
முரசெழும் ஒலியென
    முழங்கிடும் முழக்கினில் 'முரசொலி' நமதண்ணு!

கவிஞர் மணிவேந்தன் எம். ஏ.

RISING SUN BRAND

எங்களுடைய உதய சூரியன் மார்க்

மைதா, சூஜி, ஆட்டா

இப்பொழுது தாராளமாக எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிட்.,

330, தம்பு செட்டி தெரு, சென்னை-1.

போன்: ஆபீஸ்: 21043 (3 லைன்கள்)
மில்ஸ் : 61701 & 62579

மறைந்த மாமேதை அறிஞர் பெருந்தகை

அண்ணா அவர்களுக்கு

எங்கள்

அஞ்சலி!

எங்கள் சொந்தத் தறியில் தயாரித்த
காஞ்சிபுரம் பட்டு சேலைகள் மற்றும்
கைத்தறி நூல் & மில் ஜவுளிகள்
நியாய விலைக்கு கிடைக்கும்

கற்பகம் & கோ

177. காந்திரோட், காஞ்சிபுரம்.

தொலைபேசி: கடை 259 இல்லம்: 365

எமது அஞ்சலி!

கீவ்ராஜ்
ஆட்டோமோபைல்ஸ்,

122/123, மவுண்ட் ரோடு, சென்னை-6





வெஸ்பாஸ் கூட்டர்கள், கமர்ஷியல் ஆட்டோ ரிக்ஷாக்கள், வெஸ்பா பிக்-அப் வான், டெம்போ மூன்று சக்கர வண்டி மற்றும் வைகிங் நான்கு சக்கர பெட்ரோல் வண்டி மற்றும் பல்லேறு ரேஞ்சுகளில் மடாடோர் டீசல் வண்டிகள் மற்றும் அசலான ஸ்பேர் சாமான்கள் ஆகியவற்றுக்கு டீலர்கள்.

★

'விற்பனைக்குப் பின் சேவை' எமது குறிக்கோள்

அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலி

முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம்



முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் அண்ணாவின் பெருமைகளைப் பற்றி மனந்திறந்து சொல்கிறார்:

இந்தச் செப்டம்பர் 15'ம் தேதி அறிஞர் அண்ணா அவர்களின் 61—வது பிறந் நாள் வருகிறது. ஆனால் அதற்குள்ளேயே அவர்கள் மறைந்துவிட்டது அளவு கடந்த துயரத்துக்குரியது.

அவர் ஆட்சிபீடத்தில் அமர்ந்து இரண்டு ஆண்டுகள்கூட ஆகவில்லை. எனினும் காலஞ்சென்ற முதலமைச்சர் தாம் அமைத்து வளர்த்த கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் அனைவருடைய பாராட்டுதலையும், போற்றுதலையும் பெற்று இருந்தார்.

10 ஆண்டுகட்கு முன்பு அறிஞர் அவர்களைப் பற்றி ஒரு பிறந்தநாள் மலருக்கு நான் எழுதிய கட்டுரையில் கட்சி உறுப்பினர்கள் தம் தலைவரிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். அப்பொழுது திரு. அண்ணாதுரை அவர்கள் தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில் தி.மு.க. தலைவராக வீற்றிருந்தார்.

அவர் திறனை அப்போதே நான் உணர்ந்தேன். அவர் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்கவில்லையென்றாலும் அண்ணா சொல்லுக்கு மிஞ்சி வேறு சொல் இல்லை என்ற வகையில் நடந்து கொண்டு வந்தது என் கவனத்தைக் கவர்ந்தது. அது ஒரு ஒப்புயர்வற்ற தலைவருக்குள்ள தகுதியைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் நான் கவனித்த அளவில் அண்ணா அவர்கள் கடுமையான தலைவரல்ல. அவர் கொஞ்சம் தாட்சண்யம் உடையவர் என்பதைக்கூட நான் உணர்ந்திருக்கிறேன். எனினும் சிறிதளவும் வேறுபாடின்றி அண்ணாவின் தலைமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

நான் முதல் முதல் அறிஞர் அவர்களை நேரில் சந்தித்தது 20 ஆண்டுகளுக்கு முன்.

சென்னை ஒய். எம். சி. ஏ. யில் ஒரு பட்டிமன்றக் கூட்டம். கூட்டத்தில் நான் தலைமை வகிக்கச் சென்றிருந்தேன். அறிஞர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் முக்கியமான பேச்சாளர். நான் போனபோதே ஏராளமான கூட்டம் மண்டபத்துக்கு உள்ளும் வெளியிலும் கூடியிருந்தது.

அண்ணா அவர்கள் முக்கியமாக இளைஞர்களைக் கவர்ந்த பேச்சாளர் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் இருவரும் ஒரு மேடையில் பேசுவதில் கருத்து வேற்றுமை எந்த அளவுக்கு வெளிப்படுத்தப்படுமோ, அதனால் என்ன சங்கடம் ஏற்படக்கூடுமோ என்றெல்லாம் எனக்குச் சிறிது கவலை இருந்தது.



என்னைப் பொறுத்த மட்டில் அரசியல் துறையிலோ, மற்ற துறைகளிலோ உள்ள கருத்து வேற்றுமைகள் எப்பொழுதும் குறுக்கே நிற்க வேண்டியதில்லை என்பதே என் கருத்து.

அன்று அறிஞர் அவர்கள் பேசிய பேச்சில் நான் ஒப்புக்கொள்ளக் கூடாதது—மறுக்கக்கூடியது ஒன்றுமே இல்லை.

இதைத் தொடர்ந்து கல்வித்துறை சம்பந்தமானதும் வேறுவிதமான கூட்டங்களில் நானும் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. எந்தக் கூட்டத்திலும் கருத்துவேற்றுமைக்குஇடமே இருந்ததில்லை. அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே நான் கண்ட முக்கியமான சிறப்பு இதுதான். வேறு கருத்து உள்ளவர்கள் சேர்ந்துரையாடும்பொழுது, அண்ணா அவர்கள் பிறருக்குச் சங்கடம்விளைவிக்கக்கூடிய நிலைக்குச் சிறிதும் இடம் கொடுக்கமாட்டார். அவரிடம் உரையாடுவதில் மிகவும் இன்பகரமாக இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஸ்தாபிக்கப்பட்ட இருபதாண்டுகளில் பெருவாரியான ஸ்தானங்களைச் சட்டசபையில் பெற்று வேறு கட்சியின் உதவியின்றியே ஆட்சிபீடத்தில் அமர்ந்தது முக்கியமாகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய பெரிய சாதனையேயாகும்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சமயத்தில் அவர்களோடு உரையாடும் வாய்ப்பு எனக்கிருந்தது. அந்தப் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியைவிடக் கவலையே அவரிடம் குடிகொண்டிருந்தது.

அவர் ஆட்சிப் பீடத்தில் அமர்கின்றபொழுது நான் அவரைச் சந்தித்த போதெல்லாம் நான் தவறாமல் கண்டது தான் மக்களுக்குத் தீமையோ, அநீதியோ ஏற்படக்கூடிய தவறு ஒன்றும் ஏற்படக்கூடாது என்ற கவலைதான்.

அறிஞர் அவர்கட்கு கட்சிப் பற்றும், கொள்கை மிகுதியாக உண்டு. எனினும் மாற்றுக் கட்சிகளிடம் அவர் நடந்து கொண்ட முறை மற்றவர்கள் பின்பற்றுவதற்குரியது. அவர்கள் அடிக்கடி கூறுவார்கள், 'நாம் நாகரீக அரசியலை அமைத்துக் கொள்ள வேண்டும்' என்று.

முதன் முறை அவர்கள் அமெரிக்கா சென்றிருந்த போது, ஏல் பல்கலைக் கழகக் கூட்டத்தில் அவர் தெரிவித்த ஒரு கருத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அங்கிருந்த ஒரு மாணவனோ, ஆசிரியரோ கேட்ட கேள்விக்கு விடையளிக்கையில், "அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்கு ஈடான ஒரு அகில இந்திய தேசீய ஸ்தாபனம் வேறொன்று இல்லை என்றும், எதிர்காலத்தில் அவ்வாறு ஒன்று அமையக்கூடும் என்று சொல்வதற்கில்லையென்றும் அவர் கூறினார்.

கட்சியை நடத்துவதிலும் தன் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் சமுதாயத்தில் புகுத்துவதிலும் அறிஞர் அவர்களுடைய தலைசிறந்த ஆற்றலை மக்கள் நன்கு உணர்வார்கள்.

ஆனால், தலைவர் அவர்களே கூறியபடி எதிர்பாரா வகையில் மக்கள் வாக்கைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்து நிர்வாகத்தை நடத்துவதில் போதிய திறனை மக்கள் கண்டார்கள். நிர்வாக எந்திரத்தில் ஊறி இருக்கின்ற அதிகாரிகளும், அண்ணா அவர்களைப் பாராட்ட முற்பட்டார்கள். இந்த அதிகாரிகளுக்கு ஆட்சித் தலைமையில் பரிபூரண நம்பிக்கையும் இருந்தது.

ஆனால் ஒன்று, நிர்வாகத்தில் சில சமயங்களில் தாமதம் ஏற்பட்டிருக்கும். அதற்குக் காரணம் அண்ணா அவர்கள் தவறுதலுக்கு இடம் கொடாமல் சீரான முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்' என்ற கவலைதான்

அவர் முதலமைச்சராக இருந்த பொழுது அவரைச் சந்திக்க நேர்ந்த கட்சிப் பற்றற்றவர்கள்கூட அவருடைய இளகிய மனதைக் கண்டார்கள். பிறர் மனம் புண்பட இடம் கொடாமல், தன்னைக் காணவந்தவர்களிடம் மிகச் சுகமுமாகப் பழகி வந்தார்.

எனவே, எல்லா மட்டங்களிலும் பொதுமக்கள், அண்ணா மறைந்துவிட்ட செய்தியைக் கேட்டுப் பெரும் துக்கத்தில் ஆழ்ந்தது இயற்கையே!

அவருடைய 61'வது பிறந்த நாளன்று நேரில் கண்டு வாழ்த்த முடியவில்லையென்றாலும், அவர் விட்டுச் சென்ற உயர்ந்த மரபுகளை மற்றவர்கள் மனதிலே கொள்வதுதான் மறைந்த அறிஞருக்குச் செலுத்தப்படும் அஞ்சலியாகும்.

> அஞ்சாநெஞ்சு படைத்த இலட்சியவாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள் ஏனெனில், பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப்பெட்டிகள்தோறும் நடமாடுவார்கள்.
>
> - அண்ணா



காஞ்சிப் பிள்ளையார்!

கையொன்று செய்ய; விழியொன்று நாடக்;
கருத்தொன்றை எண்ண; வாய் வேறு பேச;
மெய்யென்று மற்றவர்கள் மிரட்சி கொள்ள
மேலெழுந்த வாரியாகக் கடவு ளுக்குச்
செய்கின்ற பூசைதனை எவ்வா றேற்பார்?
செகப்புரட்டு வேண்டாமென் றுரைத்த சொற்கள்
பொய்யென்று நினையாதீர் என்ப தற்குப்
பொதுமன்றில் கதையொன்று சொன்னர் அண்ணு:—

சக்தியுள்ள கடவுளெல்லாம் நிறைந்த காஞ்சித்
தலத்தினிலே, கடைவீதி தன்னி லே,ஓர்
சித்திரமாய்ப் பிள்ளையாரின் சிறிய கோயில்
சிறப்பான மகிமையோடு விளங்கல் உண்டு.
கைத்தறிக்குப் பெயர்போன நகர மன்ருே?
கனவான்கள் பட்டாடை உடுப்பர்! மற்ருேர்
சுத்தமான நூலாடை வாங்கிக் கொள்ளச்—
சுற்றிவந்து தெருத்தெருவாய்க் கூவிவிற்போர்
மூட்டைகளைத் தலைமீது சுமந்த வண்ணம்
முன்னேநம் விநாயகரை வணங்கிவிட்டுப்
பாட்டையோடு செல்வார்கள் காலைநேரம்!
பார்ப்பதற்கு வரிசையுடன் அழகாய்த் தோன்றும்!
கூட்டமாகப் போகிறவர் பேச்சின் ஓசை
கூச்சலாக மாறுவதும் உண்டு! பின்னர்,
போட்டமுதல் பெருகுமாறு லாபம் பெற்ருல்,
போய்வந்தும் காற்செருப்பைக் கழற்றி நின்று,

கணபதியைக் கும்பிட்டு வீடு செல்வர்!
காலத்தின் சுழற்சியிலே, நாள டைவில்—
பணமதிகம் பார்ப்பதிலே நாட்டமுள்ளோர்,
பக்கத்தில் வருபவர்பால் பேசிக்கொண்டே,
கனமுடைய சுமைதலையில் வைத்த வாறு,
கடைவீதி ஓரத்தில் வெளியூர்க் காரர்
மனமகிழ்வில் ஏமாறு வாராஎன்று
மங்காத பார்வையினைச் சுழலவிட்டுக்,
கரமிரண்டும் புகையிலையைக் கிள்ளிப்போடக்,
காற்செருப்பு தாஞகக் கழன்று கொள்ள,
வரமருளும் யானைமுகன் கோவில் முன்னே
மனத்தினிலே வணங்குகின்ற எண்ணமின்றி
உரமுடனே சிறுபொழுது நின்று, மீண்டும்
உரத்தக்குரல் சத்தமிடச் செருப்பை மாட்டிப்
பரபரப்பாய்ப் புறப்படுவார்! இவர்கள் நெஞ்சில்
பக்தியுண்டா? கடவுள்தான் நம்பு வாரா?

-கவிஞர் ஆனந்தம்

அண்ணு அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில்படித்துக் கொண்டிருந்தார். அப்போது அக்கல்லூரி சைனு பஜாரில் இருந்தது. எப்போது பார்த்தாலும் வெளியே ஓயாத இரைச்சலாக இருக்கும்.

''எதையெடுத்தாலும் ஒன்றரையணு: இரண்டரை யணு என்று கூவி விற்போன்கத்துவான்!

ஒருமுறை சரித்திரப் பேராசிரியர் ஒருவர் ஜெருசலத்தின் புனிதப்போர் பற்றிய விளக்கத்தைக் கூறிக் கொண்டிருந்தார்.

வெளியே வழக்கம்போல், ''ஒன்றரையணு; இரண்டரையணு'' சப்தம்! மாணவர்களின் கவனமெல்லாம் வெளியே இருந்தது.

திடீரெனப் பேராசிரிசர், ''ஜெருசலத்தின் உள்ளே அனுமதிக்கப்படாத மன்னன் யார்?'' என்று கேட்டார்.

எங்கோ நினைவாய் இருந்த மாணவர் ஒருவர் திடீரென எழுந்து. ''ஒன்றரையணு!'' என்ருர். வகுப்பில் ஒரே சிரிப்பு.

பேராசிரியர் உடனே அண்ணுவைப் பதில் சொல்லுமாறு பணித்தார்.

''ரிச்சர்டு மன்னன்'' என்று தெளிவாகக் கூறினர் அண்ணு.

மகிழ்ந்து போனர் பேராசிரியர். அவர் கொஞ்சம் வடமொழிப் பிரியர். எனவே கீதையிலிருந்து ஒரு மேற்கோள் காட்டி, ''எவன் ஒருவன் சுற்றுப்புறச் சார்பின் சப்தங்களைக் கேட்காமல் தனது காரியத்திலேயே நிலையான அறிவைச் செலுத்துகிருனே அவன் ஸ்திதப்பிரக்ஞன்—நிலையான ஞானம் பெற்றவன்—அத்தகைய நிலையான ஞானத்தைப் பெற்றவனய்த் திகழ்வாய்!'' என்று பாராட்டினர்.

அண்ணன்-கல்லூரிப் பருவத்தில்!

ஓரிரண்டு குழந்தைகள் போதுமே



அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம்

★

நாட்டுக்குப் பெருந்தொல்லை கணக்காய் வாழ்தல்,
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்.
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்று இரண்டா உரைத்திடவே முடியாது,
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்ப நலம்
போற்றிடுவோம்.

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை ... ஆரம்ப சுகாதார நிலையம்-குடும்பநலத்திட்ட நிலையம் ஒன்றை அணுகி தேவையான தகவல்களைத் தெரிந்து செயல் படுங்கள்.

▼

வெளியீடு:— சுகாதாரம் ... குடும்ப நலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை—6.

அண்ணாவின் பொருளாதாரக் கண்ணோட்டம்

பேராசிரியர் சபாபதி, எம்.ஏ.,எம்.லிட்., பொருளாதாரத் துறைத்தலைவர்

தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தனி மனிதரல்ல. அவர் ஒரு ஒளி உமிழும் பொறியாய்—நிறுவனமாய் விளங்கினார். தமிழ்நாட்டின் பல்வேறு நடவடிக்கைகளிலும், செயல் முறைகளிலும் அண்ணாஅவர்களின் அந்தப் பேரொளி பாய்ந்து பரவிற்று.

அண்ணா ஒரு மாபெரும் அமைப்பாளர்; ஆற்றல் மிக்கப் பேச்சாளர்; கற்றறிவாளர்; பெரும் பேரறிஞர்; தூய்மையான அரசியல்வாதி; விரைந்து வளர்ந்த ராஜ தந்திரி; சமூக நீதி கோரி அறப்போர் புரிந்தவர்; அண்ணா மிதவாதிகளிடையே தீவிரவாதியாக விளங்கினார். தீவிரவாதிகளுக்கிடையே மிதவாதியாகத் தோன்றினார். அவர் ஒரு உறுதி நிறைந்த சோசலிசவாதி. கண்ணியம் நிறைந்த ஜனநாயகவாதி. அவர் யாவரிடத்தும் மரியாதைக்குரியவர். விலக்க முடியாத கவர்ச்சியும், பாராட்டுக்குரிய எளிமையும், அடக்கமும் உடைய வழிகாட்டி அவர்.



அறிஞர் அண்ணா அவர்களின் பொருளாதாரக்கருத்துக்கள், சம்பந்தமான பின்விளைவுகள், உறுபயன்கள் முதலியன பற்றிய மதிப்பீடு செய்வதற்கான முயற்சியொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பச்சையப்பா கல்லூரியில் படித்த பழைய மாணவர்களின் வரிசை நீண்டதொருபெரிய வரிசையாகும். அந்தப் பழைய மாணவர் வரிசையில் அண்ணா அவர்கள் முக்கியமானவராவார். அவர் 1928 முதல் 1933 வரை பச்சையப்பா கல்லூரியில் படித்தார். அந்தக் காலம்தான் அவரிடம் பொருளாதாரக் கருத்துக்களை உருவாக்கிய காலம்.

1931—32'ல் அவர் கல்லூரிச் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார். 1932—33'ல் கல்லூரிப் பொருளாதாரச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார்

அவர் பொருளாதாரத்தில் ஆனர்ஸ் வகுப்புமாணவராக இருந்த காரணத்தால் எல்லாப் பேராசிரியர்களிடையிலேயும் அவரைப் பற்றிப் பொன்னான கருத்து நிலவியது.

'உழைப்பு எல்லா இடையூறுகளையும் வெற்றி கொள்கிறது' என்பதே அவரது செயல்முறை வாசகம்.

அண்ணாவின்பொருளாதாரப் பேராசிரியர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.:

''முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னே போட்டியொன்றில் நான் நீதிபதியாகச் செயல்பட வேண்டியிருந்தது. மேல்நாட்டு உடையில் சிறப்பான தோற்றத்தோடு விளங்கிய இளைஞர் ஒருவர் நீதிபதிகள் முன்னர் தோன்றினார். எல்லாரையும் கவர்ந்தார். போட்டிக்கான பரிசினைத் தட்டிச் சென்றார்.

அது வேறு யாருமல்ல; இளம் அண்ணாதுரைதான். அவர் பொருளாதாரத்தில் ஆனர்ஸ் எடுத்துப் படித்தது எனக்கு மகிழ்ச்சியூட்டியது.

நான் அந்தக் கல்லூரியில் சேர்ந்த பிறகு வந்த இரண்டாண்டு காலத்திலும் அண்ணாதுரையே எல்லாப் பரிசுகளையும் தட்டிச் சென்றார்.''

இவ்வாறு அண்ணா அவர்கள் மாணவப் பருவத்திலேயே சிறப்பு மிளிர விளங்கினார். தமது நேரத்தின் பெரும் பகுதியைக்கல்லூரிப் படிப்பகத்தில் செலவழித்ததன் மூலம், அந்தப்பெருமை பெற்ற பேரறிவுப் பெட்டகமாம் அறிவுக் கருவூலத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

அவர் சோசலிசத்தைப் பற்றிய பாபியன் இலக்கியங்களையும், மார்க்சின் மூலதனத்தையும், லெனினுடைய எழுத்துரைகளையும், பேச்சுக்களையும், கிப்ஸனுடைய வரலாறு,வெப்ஸின் தொழில் ரீதியான ஜனநாயகம், பெர்னார்ட்ஷா, கால்ஸ் ஓர்த் போன்றோரின் நாவல்கள் முதலியவைகளை அவர் அடிக்கடிபடித்தார். ஷெல்லி பைரன், கீட்ஸ்,கால்ரிட்ஜ், எமர்சன் கீட்ஸ், இமானுவல் பேக்கன் ஆகியோரது நூல்களையும் அவர் படித்தார். அந்த நூல்கள் எல்லாம் அவருக்குத் திருக்குறள் போன்று பழக்கமான நூல்கள்.

அண்ணா அவர்களின் பொருளாதாரக் கருத்துக்கள், கொள்கைகள், பகுத்தறிவுச் சிந்தனைகள், திட்டங்கள் முதலியன பற்றிய ஒரு வரைவினை அண்ணா அவர்கள் முதன் முதலாக கல்லூரிச் சஞ்சிகையில் வரைந்துள்ள ''மாஸ்கோவின் மக்கள்அணி,'' என்ற கட்டுரை மூலமும், பின்னர் 1969 ஜனவரியில் காஞ்சியில் அவர் கடைசியாகத் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் மூலமும் அறியலாம்.

இந்த இரண்டு கட்டுரைகளுக்கும் இடைப்பட்டகாலமான நாற்பதாண்டு காலத்தில் அண்ணா அவர்களின் பொருளாதாரக் கருத்துக்கள் அவரது சிறுகதைகள்,நாவல்கள், நாடகங்கள், படக்காட்சிகள் ஆகியன மூலமாகவும், நீண்ட சொற்பொழிவுகள் மூலமாகவும் எடுத்துக் கூறப்பட்டன.

அவர் 1957'க்குப் பின்னர் தமிழக சட்ட மன்றத்திலும், மாநிலங்கள் அவையிலும் நிகழ்த்திய தெளிவு நிறைந்த துல்லியமானத் தமிழ்—ஆங்கில உரைகள் அவரது சீர்திருத்த–பொருளாதாரக் கருத்துக்களுக்கு தக்க சான்றுகளாகும்.

இயல்பாலும், கருத்தாக்கத்தாலும் அண்ணா அவர்கள்வெறும் மாயாவாதமோ வெற்றுக்கொள்கை வாதமே கொண்டவரல்ல. அவரதுா கருத்துக்கள் ஒவ்வொன்றும் நடைமுறையில் செயல்படக் கூடிய கருத்துக்களாகவே இருந்தன.

சோசலிசப் படியமைப்பில் வெளிவாயிற்புறத்தில் நின்று கொண்டிருக்கும்—குறைந்த கூலி பெற்று உயிர் வாழும் ஏழை எளிய—மக்ளின் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற எண்ணமே அவரது கருத்தில் எப்போதும் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது.

''நான் ஒரு சராசரி மனிதன்,'' என்று அண்ணா அவர்கள் தம்மைப்பற்றிக் கூறியுள்ளார்.

''மாந்தர் இனத்தில் மூன்றில் இரண்டு பங்கு பேர் சராசரி மனிதர்களே அவர்கள் விசித்திரமான நிலையில் குடிசைகளில் வாழ்பவர்கள். அந்த சராசரியைச் சேர்ந்தவன் கல்வியறிவில்லாதவன். அவனது பலமும், ஆற்றலும் நோய்க்கிரையாகின்றன. அவன் நாளொன்றுக்குப் பதினைந்து மணி நேரம் உழைக்கிறான். அவன் தனக்குச் சொந்தமில்லாத நிலத்தில் பாடுபடுகிறான். அவனும், அவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் எப்போதும் பசியோ •



டும், பட்டினியோடும் கிடக்கின்றார்கள். அவன் இளமையிலேயே இறந்துவிடுகிறான். என்றாலும் அவன் தன் குழந்தைகளைப் பற்றிய நம்பிக்கையோடு— அவர்கள் உடல் நலத்தோடும், ஆற்றலோடும் விளங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு இருகிறான். தன் குழந்தைகள் கல்விபயில்வார்கள்; அமைதியான உலகில், உரிமையான வாழ்வு வாழ்வார்கள் என்றெல்லாம் அந்தச் சராசரி மனிதன் கனவு காண்கிறான்,'' என்றுஅண்ணு அவர்கள் உழைக்கின்ற சராசரி மனிதர்கள் பற்றிக்கூறியுள்ளார்கள்.

அந்த மக்களின் முன்னேற்றம் கருதியே அண்ணு அவர்கள் தமது நேரத்தின் பெரும் பகுதியையும், ஆற்றலையும் செலவிட்டார்.

சோஷலிசமே ஏழைகளை வாழ்விக்க ஒரே வழி என்று கூறிய அண்ணு அவர்கள் அந்தக் கருத்துக் கொண்டோர்க்கு ஆதரவு காட்டினர்.

சிக்கலான பொருளாதாரச் சிந்தனைகள் பற்றிய எந்தப் பிரச்சினையிலும் அவர் தெளிவான கருத்தோடும், தேர்ந்த அறிவோடுமே விளங்கிச் செயல்பட்டுள்ளார்.

அண்ணு அவர்கள் பொருளாதாரத்தில்துறைபோயவர் என்ற வகையில் ஆங்கில நாட்டில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டி.எச். ராபர்ட்சன் என்பாரின் பொருளாதாரத் கருத்துக்கள் அனைத்தையும் கொண்டிருந்தார்.

கருத்துக்களை இணைத்தல்—விளைவினை ஆய்ந்து கூறுதல்—போகும் வழியின் இடர்பாடுகள் உள்ளதை உணர்ந்து எச்சரிக்கைபுரிதல்—கருத்து நிறைந்த சுருங்கிய உரை—விளக்கமான கதை அல்லது உருவகம்—உரைப்பதை எழுச்சியூட்டும் வகையில் உரைபது—சொல்வது வெற்று வார்த்தை அமைப்புக்கள் அல்ல; கருத்துச் செறிவான செய்திகள் என்பதை விளங்வைப்பது இவையெல்லாம் அண்ணு அவர்களிடமிருந்த உயர்ந்த ஆற்றல்கள்.

சோஷலிசம்என்றால்என்ன என்றது பற்றிய அண்ணு அவர்கள் கூறிய விளக்கத்தைப் பார்ப்போம்.

''சோசலிசம் என்பதுபல்வேறு பொருளாதார நடவடிக்கை முறைகளில் ஒன்ருகக் கருதக்கூடியதல்ல; அது நூலில் மட்டும் காணக்கூடியதல்ல. அது துன்பச் சூழலில் அழுந்தி, மிதியுண்டு உழன்று கிடக்கும் ஏழை எளிய மக்களின் இதயக் குமுறலின் எச்சரிக்கையொலி.''

காங்கிரசின் சோசலிசக் கொள்கை பற்றி அண்ணு அவர்கள் மாநிலங்களவையில் விமர்சிக்கும்போது கீழ்க்கண்டவாறு கூறினர்:

''சோசலிசம் என்பது வெறும் வாழ்க்கை நலம் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல; அது சமத்துவம் உண்டாக்கப் பயன்படுகிறது. அது வாழ்க்கை நலத்தை உறுதி படுத்துவதைவிட மேம்பட்ட ஒன்று! நான் அறிவேன் — பேராசிரியர் லாஸ்கியின் கருத்துப்படி சமத்துவம் என்பது அனைவரையும் சமமாகப் பாவிப்பது மட்டுமல்ல; அனைவருக்கும் சம வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகும்! எல்லாருக்கும் சமவாய்ப்புஅளிப்பதன் மூலமே சமத்துவத்தை அளிக்க முடியும்!''

இந்தியாவில் சோசலிசம் பற்றிக் கொடுக்கப்படும் விளக்கமும் அதற்கான நடவடிக்கையும் நம்மை சோச

லிசத்தை நோக்கி இட்டுச் செல்வதாய் இல்லை. கால் பிரய்த் கூற்றுப்படி இது அஞ்சலக சோசலிசம்,'' ''என்று அண்ணு அவர்கள் கூறியுள்ளார்கள்.

அண்ணு அவர்கள் அறிவியல், தேசிய அடிப்படையிலான சோசலிசத்தைப் பற்றி— எப்போதும் ஜனநாயகம், ஒழுங்கு முறை, கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில்தான் எடுத்துக் கூறியுள்ளார்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்வற்றுள் எல்லாந் தலை' என்றவள்ளுவரின் கொள்கை அடிப்படையிலே சமுதாயம் அமைய வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறியுள்ளார்.

சமுதாயத்தைப் குத்துண்டு வாழும் சமுதாயமாக மட்டுமல்லாமல் படித்த சமுதாயமாகவும் ஆக்குவதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். படிப்பு நல்வாழ்விற்கு அவசியமானது;பொருளாதார வளர்ச்சிக்கு அறிவு, இயக்குகின்ற பொறி போன்றது. மனிதனின் ஒரே நம்பிக்கையின் முக்கிய கருவி கல்விதான் என்று அமெரிக்க குடியரசுத் தலைவராயிருந்த லிண்டன் ஜான் சனைப்போல் அண்ணுவும் எண்ணினர். அது அனைத்துலகின் நிரந்தர அமைதிக்கு அவசியமானது.

உலகில் எந்தப் பகுதியில் பசியும், வறுமையும், நீதியின்மையும் இருந்தாலும் அவற்றை எதிர்த்துப் போர் இட்டு முன்னேறும் வழியைத் திறப்பதற்கான திறவுகோல் அந்தக் கல்விதான். கல்விச் செல்வம் எல்லாருக்கும் கிட்ட வேண்டும் என்பதில் அண்ணு அவர்கள் பெரும் விருப்பு கொண்டிருந்தார்.

மற்ற செல்வம் எல்லாம் செல்வமல்ல; கல்வியே அழியாச் செல்வம். கல்வி பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் என்று அண்ணு கருதினர்.

அரசாங்கத்தின் வருவாயில் 25 சதவிகிதத்தைக் தமது ஆட்சிக் காலத்தில் கல்விக்காகவே செலவிட்டுள்ளதாக அண்ணு கூறியுள்ளார். இன்னும் செலவிடவேண்டுமென்பது அவர் விருப்பு. கல்வியே வேறுபாட்டைக் களையும், சமத்துவத்தை உண்டாக்கும் நல்வாழ்வுக்கு வழியாகும் என்பது அவர் கருத்து.

திட்டத்தைப் பற்றிக் கூறும்போது, ''திட்டத்தை அதுவும் பொதுத் துறையில் அமைந்த திட்டத்தை நான் பெரிதும் விரும்புகிறேன்.

''மக்களின்விருப்புக்கேற்ப திட்டங்கள் அமைய வேண்டும். அப்போதுதான் நல்ல பயன் கிடைக்கும். திட்டம் முதலில் கிராமத்திலும் பின்னர் மாநிலத் தலைநகரிலும், முடிவில் மத்திய மட்டத்திலும் அமைந்ததாக வேண்டும். கிராமங்களில் நடைபெறும் வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க மாநிலங்களால் முடியும். நம்முடைய திட்டங்களை நாமே வகுக்க விரும்புகிறோம்.'' என்று கூறியுள்ளார்.

இப்படித் திட்டமிடுவதன் தத்துவத்தையும், அதன் செயல்பூர்வமான இயக்கத்தையும் அவர் முழுதும் நம்பினர்.

திட்டமென்பது பெருமளவிலான விரைந்த பொருளாதாரமுன்னேற்றத்திற்குத் தேவையானதொரு நுட்பத் திறனும், வழி முறையுமே யாகும். இந்தியாவைப் போன்றதொரு பெரிய நாட்டுக்கு வட்டார வாரியாக

திட்டமிடுவதே நல்லதென்பது அவர் கருத்து. மத்திய மட்டத்தில் திட்டமிடுவதன் மூலம் வட்டார ஏற்றத் தாழ்வுகளும், பொருளாதாரத் தேக்கங்களும் ஏற்படும்

இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சி என்பது மத்திய அரசும், மாநில அரசும் கூட்டாக எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சியாகும். இதில் மத்திய அரசு பெரிய பாகத்தையும், மாநில அரசு சிறிய பாகத்தையும் வகிக்கின்றது. தேசியத் திட்டத்திற்கும் வட்டார வளர்ச்சிக்கும் பதிலாக அண்ணு அவர்கள் வட்டாரத் திட்டமும், தேசிய வளர்ச்சியும் தேவை என்றார்.

பொதுத்துறை வளர்ச்சி சம்பந்தமாகக் கூறும்போது பொருள்கள் வீணக்கப்படுவது, லஞ்சம், தவருன நிர்வாகம் ஆகியவற்றைக் கண்டித்து அவர் எச்சரிக்கை விடுத்தார். இவை சம்பந்தபட்ட வகையில் எடுக்கப்படும் முயற்சி ஒன்ருக இருந்தால் அனுப்பப்படும் விவரம் ஒன்ருக உள்ளது.

பின்தங்கிக் கிடக்கும் பகுதிகளில் பொதுத் துறை முயற்சியானது பலனளிக்கக் கூடிய சமூக மேம்பாட்டுக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் நல்ல கருவியாக அமைய வேண்டும். பொதுத் துறையில் கிடைக்கின்ற லாபத்தை அந்தத் துறையிலேயே பயன்படுத்தி மக்களுக்கு நன்மை உண்டாகச் செய்ய வேண்டும். இல்லையேல் இந்தியத் தொழில் வளர்ச்சியில் ஒரு பிடிப்பை உண்டாக்கியுள்ள பொதுத் துறை ஏவியவனையே திருப்பித் தாக்கும் ஒரு பயங்கரப் பூதமாக இந்தியத் திட்டங்களை மாற்றிவிடும்.

பிறகு, ஜனநாயகம் உருக் குலைந்துவிடும். சோசலிசம் நசிந்துபோய்விடும். மக்களின் நம்பிக்கை துன்பமயமாகிவிடும்.

கனரகத் தொழில் சம்பந்தமாக அவர் கூறும் போது வட்டார அளவில் அவை உருவாக்கப்படுவதையும் சம வளர்ச்சி ஏற்படுவதையுமே அவர் விரும்பினர். குறிப்பிட்ட தொழில் அதற்குத் தேவையான மூலப் பொருட்கள், வள வாய்ப்புக்கள், மனிதசக்திகள் முதலியன கிடைக்கும் இடத்திலேயே அமைய வேண்டுமென்று அவர் விரும்பினர்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று கோருவதில் அண்ணு அவர்கள் எப்போதுமே முன்னால் நின்றுள்ளார்.

மத்திய—மாநில நிதி சம்பந்தப்பட்ட அடிப்படைத் தொடர்பில் குறிப்பிடும் அளவு மாற்றம் உண்டாகியுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது எதிர்பாராத நெருக்கடிகளும், நிலை மாற்றங்களும் பெருமளவில் எப்போது உண்டாகியுள்ளன இந்தப் புதிய மாற்றம் பொருளாதாரத் திட்டங்கள் வகுப்பதிலும், அவற்றைஒவ்வோரிடத்திலும் புழக்கத்தில் கொண்டு வருவதிலும்,பகுத்துத் தருவதிலும், அதன் வள வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் முறையிலும் உண்டான தொடர்பு சம்பந்தமாக ஏற்பட்ட மாற்றமாகும்.

நாணய முறையில் ஒழுங்கை உண்டாக்குவது, வங்கித் தொழில், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றிற்கு மத்திய அரசே பொறுப்பாகும்.

பற்றாக்குறை நிதிநிலையோ பணவீக்கமோ ஏற்பட்டால்



அதற்குப் பதில் சொல்ல வேண்டியது மத்தியஅரசே. அரசியல் சட்டம் 36, 38-7'வது பிரிவுப்படி அதற்குரிய சட்டம் மத்திய அரசுக்குஉள்ளது.

மாநிலங்களைவிட மத்திய அரசுக்கு அதிகப்படியான வசதி வாய்ப்புக்கள் உள்ளன. மத்திய உதவி தேக்கத்தை உண்டாக்கும் வகையில் நிறுத்தவும், நின்றுவிடவும் கூடியதாக உள்ளது .. மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய வள வாய்ப்புக்களுக்கும், அவற்றிற்குள்ள பொறுப்புக்களுக்குமிடையே அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. அரசியல் சட்டப்படி மக்களின் குறைந்த அளவான தேவைகள் வழங்கப்பட்டு திருப்தியளிக்கப்பட வேண்டுமானுல் இந்த நிலைமை மாற்றப்பட்டாக வேண்டும்.

புதிய வாழ்க்கை முறையை நோக்கிச் செல்ல மக்களிடையே வளர்ந்து வரும் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் வருவாய்க்கான வாய்ப்புக்களை மாநிலங்கள் வளர்த்துக்கொள்ள வழி ஏற்பட வேண்டும்.

ஒரு ஒப்பந்த அடிப்படையில் இந்த வள வாய்ப்புக்களைத் திட்டமானது பகிர்ந்தளிக்க வேண்டும். மாநிலங்கள் அந்த வள வாய்ப்புக்களை தங்கள் தேவைக்கேற்பவும் முடிவுக்கேற்பவும் பயன்படுத்திக்கொள்ள முழு உரிமை அளிக்கப்பட வேண்டும்,'' என்றார் அண்ணு அவர்கள்.

அரசியல் சட்டம் 263-வது விதிப்படியாவதுஅண்ணு அவர்கள் ஒரு நிரந்தர நிதிக்குழு அமைவதை விரும்பினர். இது ஆஸ்திரேலியாவில் ஆண்டுக்கொருமுறை நிதி சம்பந்தமாக ஆய்வு புரியும் நிதிக் குழு போன்று இருக்கலாம் என்று அவர் எண்ணினர்.

மத்திய அரசாங்கத்தின் நான்கு நிதிக் குழுக்களும் நிதி சம்பந்தமான ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்குப் பயன்படவில்லை. மத்திய அரசினது உதவியின் அடிப்படையிலேயே மாநிலத்தின் வளர்ச்சி நிலை அமையும் வகையில்—மாநிலங்கள் மத்திய அரசை எதிர்பார்த்து நிற்கும் நிலையேதொடர்ந்து நிலையாகியுள்ளது. மத்திய அரசாங்கத்துக்கும் ,மாநிலங்களுக்குமிடையே உள்ள தொடர்புகள் வள வாய்ப்புக்கள் சம்பந்தமாக மறு ஆய்வும், மறு சிந்தனையும் செய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டதென்று அண்ணு அவர்கள் சட்டமன்றத்திலும் வெளியிலும் பேசினர்கள். கசப்புணர்ச்சியைப் போக்கி பயனுள்ள தொடர்பினை உருவாக்குவதற்கான அவசரத் தேவை உண்டாகியுள்ளது. மத்திய மாநில அரசுகள் ஒருவர்க்கொருவர் காட்டும் நல்லெண்ணம், ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் பயன்தரத்தக்க சகோதரப்பூர்வமானதொடர்பினை உண்டாக்க முடியும்.

அரசியல் அமைப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும். பெடரல் அமைப்புப் பற்றி மக்களறியச் செய்ய வேண் வேண்டும். இவை சட்டரீதியான தடங்கல்களைப் போக்கும். மாநிலங்கள் கீழ் நிலை அரசாங்கங்கள் அல்ல. அவை உடன் பிறப்பு அரசாங்கங்கள். அவற்றின் மீது கட்டளை போடக்கூடாது. அவற்ருேடு ஒருங்கிணைப்பு தேவை,'' என்று அண்ணு தெரிவித்துள்ளார்.

அண்ணு அவர்கள் 1968 பிப்ரவரி 28 அன்று தமது கடைசி நிதி நிலையறிக்கையில் பேசியது திரும்பத் திரும்பப்படிக்க வேண்டியது.

நான் கூறிய மறுஆய்வு மத்திய அரசை பலவீனப் படுத்தும். ஒற்றுமையைக் குலேக்கும் என்று அஞ்ச வேண்டியதில்லே. அதற்கு மாருக மாநிலங்களுக்குச் சட்ட ரீதியாக அதிக அளவு வசதியை அளிப்பதன் மூலம் அவை தம் பொறுப்புக் களேத் தாமே நிறைவேற்ற வகை செய்வதன் மூலம் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் குறைவதற்கு வழியேற்படும். நாட்டுக்குப் பொதுவான விஷயங்களில் இவை ஒருங்கிணேந்து செயல் பட வழியேற்படும்,''என்று கூறினர்.

'ஜமீன் இனும் ஒழிப்பு' என்ற நூல் மூலம் 20 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் விவசாய சம்பந்த மான விவாதத்தை மேற் கொண்டுள்ளார். உழுபவ னுக்கும், உரிமையாளனுக்கு மிடையே இடைத் தரகர் கூடாது என்ருர். தமிழ் நாட்டில் உற்பத்திக் குறை பற்றி அவர் ஒப்புக்கொண் டார். ஒரு நாள் நாட்டிலிருந்து வெளிநாட் டுக்கு ஏற்றுமதி செய்யும் அளவில் உணவு உற்பத்தி பெருகும் என்று நம்பினர்.

அவர் தமது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தின் போது கான்சாசில் கண்ட பெரு மளவு இயந்திரமய விவ சாயத்தை அவர் வியந்து விரும்பவில்லே. மாருக ஜப் பானிய விவசாய முறை யில் மின்சார உழு கருவி மின்சார—மருந்து இறைக் கும் கருவி முதலியவற்றை அவர் பாராட்டினர்.

பண்ணேகள் விருப்பத்துக் கேற்ருற்போல் திறமைக்கும் வசதிக்கும் மேற்பார்வையி டும் வாய்ப்புக்கும், உற் பத்தியைப் பெருக்குவதற் கும் வசதியான முறையில் அமைய வேண்டும்.

இந்தியாவைப் போன்ற பெரிய நாட்டில் திட்ட மிடுவதில் விவசாயத்துக்கே முதன்மை கொடுக்க வேண் டும் என்பது அவர் கருத்து.

அவரது சிறிது கால நிர் வாகத்துக்குள் விவசாயத் துக்கான பெரிய திட்டங் களேயெல்லாம் அவர் வகுத் தார். உற்பத்திப் பெருக்கு, தரமான விதை, உரம் பாசனத்துறை, செயற்கை மழை முதலியவை சம்பந்த மாக அவர் பெரிய திட்டங் கள் வகுத்தார்.

ஏழைகளேத் தட்டிக் கொடுக்க வேண்டும்; பண காரர்களிட ம்வசூலிக்கவேண் டும்' என்று அவர் ராஜாஜி மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலேவர்கள் மத்தி யில் பேசியதை யார்தான் மறக்க முடியும்?

குடியானவர்களுக் குக் கடன் கொடுப்பதில் சீர்மையான ஒத்துழைப்பு மூலம் விரைவாகச் செயல் பட முடியும் என்ற அடிப் படையில் கடைசி கிராமத் தில் உள்ள கடைசி விவ சாயியும் கடன் வசதியைத் தவருமல் பெறுவதற்கு கூட் டுறவுக் குழுவினே அண்ணு அவர்கள் நியமித்தார்கள். இவை சட்டரீதியான தடங் கல்களேப் போக்கும். மாநி லங்கள் கீழ்நிலே அரசாங் கங்கள் அல்ல. அவை உடன் பிறப்பு அரசாங்கங்கள். அவற்றின் மீது கட்டளே போடக்கூடாது. அவற்ருேடு ஒருங்கிணேப்பு தேவை,'' என்று அண்ணு தெரிவித் துள்ளார்.

விவசாயத்துக்குஅடுத்தாற் போல் கைத்தறி அவரைப் பெரிதும் கவர்ந்தது. கைத் தறி பட்டாடைக்குப் பெயர்போன காஞ்சியில் பிறந்தவர் அண்ணு என்று வகையில் அண்ணு அவர் கள் அந்தப் பிரச்சினேயைப் பொருளாதாரப் பிரச்சினே யாகக் கொள்ளவில்லே. அந்தத் தொழிலில் பல லட் சக் கணக்கான ஆண்களும் பெண்களும், முதியோரும், இளேயோரும் ஈடுபட்டிருக் கும் காரணத்தால்—அந்தத் தொழிலேச் சார்ந்திருக்கும் காரணத்தால் அதை ஒரு மனிதாபிமானப் பிரச்சினே யாகவே அண்ணு அவர்கள் எண்ணினுர்கள்.

இந்தத் தொழிலில்நெருக் கடி ஏற்பட்டபோது அண்ணு அவர்களும் மற்றும் கழகத் தோழர்களும் கைத்தறியா டைகளேத் தோளில் சுமந்து விற்பனே செய்தது இன்னும் நமது உள்ளங்களில் பசுமை மாருமலிருக்கின்றது.

கைத்தறிக்கு இவ்வாறு அளிக்கப்படும் நிவாரணம் ஒருஆறுதலாகத்தான் இருக்க முடியும்.

இந்த வகையில் உயர்ந்த ரக உற்பத்தியையும், வெளி நாட்டு ஏற்றுமதியையும் பெருக்கும் வண்ணம் நாம் நவீன முறைகளேக் கையாண் டாலன்றி இதில் நிரந்தர தன்மையையும் முன்னேற் றத்தையும் காண முடி யாது.'' என்று அண்ணு அவர்கள் அப்போது கூறி யுள்ளார்.

அண்ணு அவர்கள் ஒரு அரசியல்வாதியாகவாழ்க்கை தொடங்கினுலும் அவர்ஒரு மனித இனப் பண்பா டாளர். தொழில் துறை, மதுவிலக்கு போன்றவற்ருல் அவர் ஒரு காந்தியவாதி.

1948'ல் அவர் எழுதிய நல்லதம்பி என்ற சினிமாப் படத்தில் மதுவிலக்கையே அவர் முக்கிய அம்சமாக அமைத்துள்ளார். காந்தி யடிகளேப் போலவே அவ ரும் சட்டத்தாலோ, தண் டனே விதிப்பதாலோ மது விலக்கை அமுல் படுத்திவிட முடியாது என்று நம்பினர் விவாதத்துக்குரியதும், முரண் பாடான தன்மைகள் கொண்டதுமான தொழில் சம்பந்தமானகொள்கை விஷ யத்தில் அண்ணு அவர்கள் சட்டபூர்வமான முறை களேக் கையாள்வதைவிட மனிதாபிமான அடிப்படை யில் அணுகுவதையே விரும் பினர். வேலேநிறுத்தம், வன் முறை போன்றவற்றை அண்ணு விரும்பியதில்லே. வன்முறை சட்டத்தின் தாதி யாக முடியாது என்பது அவர் கருத்து.

தொழில் தகராறுகளே நீக்கி நல்ல முடிவை உண் டாக்குவதற்கு கூட்டு ஒப் பந்தம், நேரடிப் பேச்சு, தாமே முன்வந்து சுயேச் சையான சமாதான நட வடிக்கைகளால் ஈடுபடுவது போன்றவையேமுறை என்று அவர் எண்ணினர்.

அன்பு வேந்தர்

பணக்கவலே கொள்ளாமல் தமிழி னத்தைப்
பற்றியுள்ள கவலேகளேத் தீர்ப்ப தேஎன்
மனக்கவலே எனவாழ்ந்த தலேவர்! மக்கள்
மனத்திற்குள் வாழ்கின்ற தலேவர்! சொந்த
குணக்கவலே யில்லாமல் பிறர்கு ணத்தைக்
குறைகூறப் பலருண்டு! இவரோ என்றும்
தனக்குவமை இல்லாத பண்பு வேந்தர்!
தம்பியரும்இவர்குணத்தைப் பெறுதல் வேண்டும்!

பதவிக்குப் பலர்வருவார்; போவார்! இங்கே
பதவியிலே இருக்கையிலே நமக்குநித்தம்
உதவிக்கும் பலர்வருவார்; போவார்! ஆனல்
உயிர்போன பின்னுலும்வாழும் வாழ்க்கை
பதவியினுல் படிப்பாலே பணத்தால் அல்ல;
பண்பாலே கிட்டுவது! நல்ல பண்பை
உதறிவிட்டுப் பிறவழியில் புகழைச் சேர்த்தல்
உடையின்றி நகைபூட்டித் திரிவ தைப்போல்!

செந்தமிழே! செங்கரும்பே! எனது நெஞ்சில்
சிரிக்கின்ற தாமரையே! தேனே! வாசச்
சந்தனமே! என்றெல்லாம் கவிதை நெஞ்சம்
சத்தமிட்டே அழைக்கின்ற தகுதி பெற்ருர்!
எந்தவிதத் தால்என்ருல் எழுத்தால்—பேச்சால்—
எண்ணற்ற தொண்டுகளால் மட்டும் அல்ல;
சொந்தத்தில் கொண்டிருந்த குணங்க ளாலும்
சூதற்ற உயர்மனிதர் அறிஞர் அண்ணு!

''கடற்காற்று தொடமுடியா மணலுக் குள்ளே
கண்ணுறங்கும் அண்ணுவே! நீங்கள் போட்ட
நடைபாதை தான்நாங்கள் நடக்கும் பாதை!
நல்லவர்நீர் பெற்றிருந்த குணங்க ளெல்லாம்
அடைவதற்கு முயன்ருல்தான் இனிமேல் நாட்டில்
அண்ணுவின் தம்பிஎன்ற பெருமை கிட்டும்!''
தடையில்லே இவ்வாறு முயல்வ தற்கு!
தலேவரைநாம் வணங்கிஅவர் வழிந டப்போம்!

புலவர்
பொன்னிவளவன்

கோவையில் துணியாலை சம்பந்தமான தொழிலாளர் தகராறுகளையும், தஞ்சையில் நிலச் சொந்தக்காரர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையே ஏற்பட்ட தகராறுகளை இணக்கமான முறையில் சுமுகமாக அவர் நீக்கும் முயற்சியில் ஈடுபடப்போகும்வேளையில்தான் நம்மிடமிருந்து இயற்கை அவரைப்பறித்துக் கொண்டு விட்டது.

அவர் யாருக்குமில்லாத அரிய திறன் படைத்தவர். எந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கும், பிரச்சினையின் இருபுற வாதங்களையுமே கூடப் பொடியாக்குவதற்கும் அவர் எல்லையில்லாத ஆற்றல் வாய்ந்தவர்.

அவர் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி வாதித்து ஒரு கருத்தை வலியுறுத்திக் கூறும்போது சாதாரண அணுகல் முறையோடு மட்டும் அவர் கூறுவது கிடையாது. அதை அவர் நளினமாக யாரையும் தாக்காமல்—யார் மீது அவரது வாதம் மோதுகின்றதோ அவரே வியக்கும் வகையில் எடுத்துச் சொல்வார்.

செல்வம் ஓரிடத்தில் முடங்கிக்கிடப்பதை அண்ணா எதிர்த்தார். தேசிய வருவாயைப் பகுத்துக் கொடுக்க வேண்டுமென்று அவர் வாதாடினார். வருவாய் விகிதங்களுக்கிடையே தற்போதுள்ள ஏற்றத் தாழ்வைக் குறைக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

பணக்காரனின் பேராசையை வேலைக்காரி நாடகத்தின் மூலம் அவர் கேலியாக எடுத்துச் சொன்னார்.

'பணக்காரர்ள்க நடத்துகின்ற விருந்தில் தங்கத்தால் அரிசியும், கெம்பில் செய்த குழம்பும், வைரத்தில் பொறியலும், முத்தினால் வறுவலும், கோமேதகக் கூட்டும், பவளத்தால்செய்த ஊறுகாயுமே வைத்துச் சாப்பிடுகிறார்கள்?' என்றுகேட்டார் அண்ணா.

தமிழ்நாட்டில் அவரது சிறிது கால ஆட்சியின் போது குறைந்த வருவாய் பெறுவோரின் வருமானத்தைப் பெருக்குவதற்கு அவர் முயன்றார். பஞ்சப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவற்றை அதிகப்படுத்தி உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்து, அவர்களுக்கு அண்ணா அவர்கள் உதவினார்.

ரூபாய்க்குப் படியரிசித் திட்டம் அண்ணா அவர்களின் மக்களின் நலன் பெருக்கும் திட்டமாகும்.

உணவுப் பொருளின் விலையேற்றம் மக்களின் வாங்கும் சக்திக்கு ஊறு உண்டாக்கியுள்ளது என்று அவர் உணர்ந்தார்.

அவர் 1952'ல் விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து மறியல் செய்து சிறை சென்றார்.

நமது பொருளாதாரம் சுமுகமான முறையினில் அமைவதற்கு உணவுப் பொருள்களின் விலையே முக்கியமான அம்சமாகும்.

இவ்வாறு அண்ணாஅவர்களின் பொருளாதாரக் கருத்துக்கள் சமுதாயத்தின் எல்லாத் தரப்பு மக்களிடையிலும் பரவியது.

அவர் தொட்ட எந்தச் செயலும் விளங்கிச் சிறந்தது மட்டுமல்லாமல் புதிய உருவமும் பெற்றது. மொத்தத்தில் சொல்ல வேண்டுமானால் தமிழின மறுமலர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள பணிகள் அரும் பெரும் பணிகளாகும். அவர் ஜனநாயகக் கொள்கையின் கருவூலமாவார்.

கடமைக்கும், கண்ணியத்துக்கும், அடக்கத்துக்கும், தெளிவுக்கும், ஒழுங்கிற்கும், துணிவுக்கும் அவர் நிலைக்களனாவார்.

இன்பக் கண்ணீர் கடை விழியில் சோர வாயிதழ் திறந்து பேசிய அண்ணன்
துன்பக் கண்ணீர்க் கடல் பெருக-கண்மலர் மூடியதைக் கண்டோம்
அன்று-கடல் வெள்ளமென நடந்தோம்; வேதனை வெள்ளத்தில் மிதந்தோம்!



நிறுவனம்: 1927 தொலைபேசி எண்: 61068

சென்னை கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம்,

அயனாவரம் ::: சென்னை-23.

திரு. வி. முனுசாமி, (முன்னாள் மேயர்)
தலைவர்.

சுத்தமான பால்

மாநகர மக்களின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்ய நாங்கள் அதிக அளவில் பால் விற்பனை செய்ய முற்பட்டுள்ளோம். எமது வாடிக்கைகாரர்களும், கூட்டுறவு ஆதரவாளர்களும் எப்போதும்போல் ஆதரவு தந்து கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

வி. பார்வதிநாதன், பி. காம்., பி. எல்.,
நிர்வாக அதிகாரி.

மு. சங்கரவேலு, பி.காம்.,
செயலாளர், கூட்டுறவு உப பதிவாளர்.

தமிழ்நாடு தொழில் வணிகத்துறை, சென்னை-5.

கைவினைப் பொருள்கள்:

நேர்த்தியான கவர்ச்சிமிக்க கைவினைப் பொருள்களுக்கு தமிழ்நாடு தொழில், வணிகத் துறையினரால் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப் படும் விற்பனை நிலையங்களுக்கு வருகை தருக!

1. மவுண்டு ரோடு, சென்னை
2. மகாபலிபுரம், செங்கல்பட்டு மாவட்டம்
3. நெய்வேலி, தென்னாற்காடு மாவட்டம்
4. திருச்சிராப்பள்ளி
5. தஞ்சாவூர்
6. திருநெல்வேலி
7. கோயம்புத்தூர்
8. திண்டுக்கல் மதுரை மாவட்டம்
9. சேலம்

விற்பனை செய்யப்படும் சில முக்கியப் பொருள்கள்:

வெண்கலச் சாமான்கள், பித்தளைச் சாமான்கள், வேலைப்பாடமைந்த உலோகப் பொருள்கள், சிலைகள், சிற்பங்கள், தந்தப் பொருள்கள், துணி பொம்மைகள், களிமண் விளையாட்டுப் பொருள்கள்; நவீன பனையோலைப் பொருள்கள், பீங்கான் சாமான்கள், இசைக் கருவிகள், நெட்டி உருவகங்கள், தரை விரிப்புகள், பத்தமடை பாய்கள், தஞ்சாவூர் வேலைப்பாடமைந்த தட்டுகள் முதலியவை.

"தொழில் வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமாக செயலில் ஈடுபட வேண்டும்"

- அறிஞர் அண்ணாவின் அமுதமொழி

அறிஞர் அண்ணாவின் கனவு நினைவாக
அனைவரும் முயற்சி செய்வோம்.
மதராஸ் அலுமினியம் கம்பெனி
இவ்வாகப் பணியில் ஈடுபட்டு
தென்னகத்தின் பொருளாதார வளர்ச்சியில்
பங்குகொண்டு இயங்கி வருகிறது.
உற்பத்தியை திட்டமிட்டு பெருக்கி வருகிறது.

அறிஞர் அண்ணாவின் 61-வது பிறந்த தின விழாவில் நாமும் பங்கு கொள்கிறோம்!

MALCO

மதராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்

ரேஸ் கோர்ஸ், ★ கோயமுத்தூர்-18

தொழிற்சாலை: மேட்டூர் அணை (சேலம் ஜில்லா)

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை

ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி
சித்த வைத்திய சாலை (Regd)

307--308. திருநெல்வேலி ஹைரோட், திருநெல்வேலி சென்னை-5- (தொலைபேசி எண்: 84786)

கிளை வைத்தியசாலை: மாமண்டூர் வடபாதி பாலாற்றங்கரை சமீபம்,
செங்கற்பட்டு ஜில்லா, (தொலை பேசி எண்: 240)

(தங்கம், வெள்ளி, தாம்பரம் மற்றும் பல உலோகங்கள். அனேக அபூர்வ மூலிகைகள். மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சியினுல் உருவானது.)

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண்குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும் டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே பிரதி, ஞாயிறு, செவ்வாய், வியாழக் கிழமைகளில் சென்னையிலும் பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்திய சாலையிலும் நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறுர்.

Grams- "ANGUVILAS"
Regd. Numbers
12700 & 149348

Phone- 71
Estd. 1925

ஸ்தாபகர்

அங்குவிலாஸ் எம். வி. முத்தையா பிள்ளை
திண்டுக்கல்.

அங்கு விலாஸ்

எம். வி. முத்தையா பிள்ளை (பர்ம்)

வாசனைப் புகையிலை

தாம்பூலத்துடன் சுவைப்பதற்கு தின்பண்டம் போன்றது.

ANGU VILAS Scented Tobacco stands foremost in India. If a little of this Scented Tobacco is chewed with Betal leaves, nut and Chunnam and spit out, it will go on refreshing your mind & Body.

ANGU VILAS

M.V. MUTHIAH PILLAI
(Firm)
Scented Tobacco & Cigar Factory, DINDIGUL. (South India.)

★ எமது நல்வாழ்த்துக்கள்! ★

★ ★ ★

Co-optex

கைத்தறி ஆடைகள்

தமிழ்நாடு (சென்னை ராஜ்ய) கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,

"பாலசுந்தரம் பில்டிங்ஸ்" 34-1A, பாந்தியன் சாலை,

எழும்பூர் ★ சென்னை-8

தொலைபேசி: 82121 & 82122

உங்கள் அன்றுடத் தேவைகளை
வாங்க நம்பகமான இடம்

காவேரி

சென்னையின்

2-வது கூட்டுறவு சிறப்பங்காடி

தரமான பொருள்கள் ★ நியாயமான விலை ★ சரியான எடை

சென்னை உயர்நீதி மன்றம், சட்டக் கல்லூரி ஆகிய இடங்களுக்கு வடக்கே அரை பர்லாங் தூரத்திலே, பிராட்வேயில் லோன் ஸ்கொயர் அருகே அமைந்துள்ளது.

காவேரி

1 & 2, டேவிட்சன் தெரு, சென்னை-1.

தந்தி: "COOPFIRE" தொலைபேசி: 23261

தி கோவாப்பரேடிவ் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்.,

தபால் பெட்டி எண்: 1249, சென்னை-1.

(இதன் வகையில் இந்தியாவிலேயே முதன்மையானது.)

தலைவர்
திரு. பி. நடேசன், எம்.பி. பி.எஸ்.,

உப தலைவர்
திரு. டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர்

புரியும் அலுவல்கள்:

எல்லாவகையான தீ விபத்து இன்ஷூரன்ஸுகள்.
திருட்டு, மோட்டார் வாகனங்கள்,
நம்பிக்கை உத்தரவாதம் (FIDELITY GUARANTEE,)
கப்பல், நிர்மாணம் மற்றும் ரொக்க போக்குவரத்து (CASH IN TRANSIT)
இன்ஷூரன்ஸ்கள்

ஆஸ்திகள் & நிதிகள் ரூ. 30 லக்ஷங்களுக்கு அதிகம்.

இதர விபரங்களுக்கு சென்னையிலுள்ள சொஸைட்டிக்கு விண்ணப்பிக்கவும்.

மறைந்த மாமேதை
அறிஞர் அண்ணா அவர்களுக்கு
எமது அஞ்சலி!



N.V.S.
பட்டணம் பொடி

N. V. ஷண்முகம் கம்பெனியார்,
தபால் பெட்டி: 555 ::: சென்னை-21

செப்டம்பர் 19ந் முதல்
வெலிங்டன்
பிரபாத்
ராக்ஸி
லிபர்ட்டி
மற்றும் தமிழகமெங்கும்
ஏவி எம்
புரொடக்ஷன்ஸ்
அன்னையும்
பிதாவும்
இயக்குநர்
கிருஷ்ணன் பஞ்சு
AVM
PRODUCTIONS
பாடல்கள்: கண்ண
வநாதன்

முரசொலி அண்ணா மலர்
பதிவுஎண் 7436